அன்பு மலர்—18

# வசந்த சுந்தரி

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

சுத்தானந்தபாரதி.

A/547

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

To

The Proprietor

Sri Bala Shanmukanandha Sabha

with the best

Compliments of —

[illegible]

31/10/[illegible].

அன்பு மலர்—18

# வசந்த சுந்தரி

## (VASANTA SUNDARI)

அபிவிருத்தி
மதுரை.

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றியது

அன்பு நிலயம் : :

இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா

1939

உரிமை பதிப்புற்றது

விலை 10 அணா] [மலாய் நாடு விலை cts. 45.

VASANTA SUNDARI—160 Pages.

*Published by*

: : THE ANBU NILAYAM : :

RAMACHANDRAPURAM, TRICHY DISTRICT

1939

[*All Rights Reserved*]

*Price Annas 10*

*Printed by*

THE SADHU PRESS,

Royapettah, Madras

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| பதிப்புரை | | ... | v |
| நாடக பாத்திரர் | | ... | vii |
| அங்கம்—1 | | ... | 1—26 |
| காட்சி | 1 | ... | 1 |
| ,, | 2 | ... | 6 |
| ,, | 3 | ... | 10 |
| ,, | 4 | ... | 14 |
| ,, | 5 | ... | 21 |
| அங்கம்—2 | | ... | 27—53 |
| காட்சி | 1 | ... | 27 |
| ,, | 2 | ... | 35 |
| ,, | 3 | ... | 43 |
| அங்கம்—3 | | ... | 54—80 |
| காட்சி | 1 | ... | 54 |
| ,, | 2 | ... | 60 |
| ,, | 3 | ... | 68 |
| ,, | 4 | ... | 77 |
| அங்கம்—4 | | ... | 81—100 |
| காட்சி | 1 | ... | 81 |
| ,, | 2 | ... | 90 |
| ,, | 3 | ... | 94 |
| ,, | 4 | ... | 96 |
| ,, | 5 | ... | 97 |

| | | | பக்கம் |
|---|---|---|---|
| அங்கம்—5 | | ... | 101—124 |
| காட்சி | 1 | ... | 101 |
| ,, | 2 | ... | 103 |
| ,, | 3 | ... | 106 |
| ,, | 4 | ... | 119 |
| அங்கம்—6 | | ... | 125—154 |
| காட்சி | 1 | ... | 125 |
| ,, | 2 | ... | 130 |
| ,, | 3 | ... | 136 |
| ,, | 4 | ... | 137 |
| ,, | 5 | ... | 141 |
| ,, | 6 | ... | 146 |
| ,, | 7 | ... | 151 |

# பதிப்புரை

எமது நிலயத்தின் 18-வது அன்பு மலரை நடராஜப் பெருமான் திருவடியில் வைத்து வணங்குகிறோம். **வசந்த சுந்தரி** என்னும் இந்நாடகம் சமுதாய சீர்திருத்த சம்பந்தமானது. உலகவாழ்வில் நலமும் தீதும் கலந்துறைகின்றன. நலத்தைக் கொண்டு தீமையை விலக்கலே அறிவாளர் கடமையாம். வாழ்வின் நன்மை தீமைகளையே பாத்திரங்களாகக் கொண்டு இந்நாடகக் காட்சிகள் வளர்கின்றன. இந்து முஸ்லிம் கிறிஸ்தவ ஆரிய திராவிட ஒற்றுமையை இந்நாடகம் சாத்தியமாக்குகிறது; திருக்குலத்தார் முன்னேற்றத்தை ஊக்குகிறது; உண்மையான காதல் மணத்திற்கு வெற்றியளிக்கிறது; சாமாதி ராக்ஷஸப் பேயைக் கண்டிக்கிறது; பெண்ணின் பெருமை, ஆணின் வீரம் இரண்டையும் தெளிவாக விளக்குகிறது; ஜய கோபாலன் காலத்திற்கேற்ற கல்வியும், வீரமும், பொதுநலப் பணியும் பூண்ட உத்தமனவன். அவனது நண்பனை ஹூஸேனும், டேவிட் பாலும், நந்தனும் சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் உதவியாக எப்படி வாழ்வதென்று தமது உதாரணத்தாலேயே விளக்குகின்றனர். அடுப்பங்கரைச் சண்டையில்லாமல், இந்நண்பர் உயர்ந்த நோக்கத்துடன் ஒன்றி வாழ்வது நமது நாட்டிற்கு அரிய உதாரணமாகும். சாமண்ணா, தாராளமான உள்ளமும், வீரமும் நிறைந்த அந்தண்மையை விளக்குகிறான். சிவஞானம், பூங்கோதை ஆகியோரின் எளிய வாழ்க்கையும், தெய்வபக்தியும் பண்டைப் பெருமையை விளக்கும். **வசந்த சுந்தரி** கல்வியும், வீரமும், பரந்த நோக்கமும், அறிவும் ஆற்றலும் நிறைந்த பெண்மைக்கு எடுத்துக் காட்டாவள். தடித்தாமோதரனும், அவனைத் தூபம் போட்டுத் தீயவழியில் இழுக்கும் தடபுடல் கிட்டுவும், நமது சமுதாயத்திற் படர்ந்த

தீமைகளின் உருவங்களாவர். லாவண்யம் விலைவாழ்வு வந்த விதத்தையும், அதை நீக்கும் வகையையும் விளக்குகிறான்.

இவ்வரிய நாடகத்தை வெளியிட்டுதவிய அன்புத் திருவாளர், தேவகோட்டை சி. க. கரு. சா. **சேவுகன் செட்டியாரவர்கள்** நடனக் கலைக்கே பேருதவி செய்தவராவர். இவர், தமிழன்பும், பேருபகாரச் சிந்தையும், உலகானுபவமும், சீர்திருத்த ஆர்வமும் மிக்க உண்மைத் தமிழர் ஆவர். இப்பேரன்பருக்கு எமது நிலயத்தின் நன்றி உரித்தாகுக! இவர் எல்லா நலனையும் பெற்று இன்புற்றிருக்க இறைவனருளுக!

இத்தகைய பல நாடகங்கள் யோகநித்திரை கொள்ளும் சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்களால் இயற்றப் பெற்றுள்ளன. அவற்றை யெல்லாம் நடித்துக் காட்டினால், நமது நாடு புதுவுணர்ச்சி பெறும். சுவாமிகளின் நாடகங்களை அரங்கேற்றும் இனிய பணியைத் திருச்சி நாட்டியகேசரி ஸ்ரீ. சு. குருசாமி ஐயரவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்கட்கு இறைவனருளால் மேன்மேலும் வெற்றியாகுக!

எமது நாடகங்களை நடிக்கவேண்டுவோர் அவசியம் எமது உத்தரவைப் பெறவேண்டும்.

"பாட்டும் பாரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டுக்கு நல்ல பயன்"

25—4—39<br>இராமச்சந்திரபுரம்

அன்பு நிலயத்தார்

# நாடக பாத்திரர்

1. ஜயகோபால் : எம். ஏ. ராஜமாபுரம் ஜமீந்தார், பொதுநலவீரர்.
2. ஹுஸேன்
3. சாமண்ணு
4. டேவிட்பால்

} ஜயகோபால் நண்பர், சமரஸ மணிகள்.

5. நந்தனர் - ஹரிஜன கோகுலத் தலைவர்.
6. வீராயி - ஷெயார் மனைவி.
7. டாக்டர் நாராயணன் - கோகுல வைத்தியர்.
8. வெங்குராவ் - ஸ்திரீ சேவாசங்கத் தலைவர்.
9. லக்ஷ்மி - ஷெயார் மனைவி.
10. லலிதா - வசந்த சுந்தரியின் தோழி.
11. வசந்த சுந்தரி - ஷெ சங்க மாணவி, நாடகத் தலைவி, வீரப் பெண்மணி.
12. சிவஞானம், ஷெயாள் தந்தை, தெய்வபக்தர், சித்திரக் கலைஞர்.
13. பூங்கோதை - ஷெயார் மனைவி.
14. தடித் தாமோதரன் - பணக்காரக் கொடியன்.
15. தடபுடல் கிட்டு-ஷெயான் கூட்டாளி; தீயன்.
16. லாவண்யம் - தாமோதரன் தாசி.
18. ஜக்கம்மா, 19. பேயாண்டி, 20. கருப்பன் - சூனியக்காரர்.
21. சங்கிலி : ஒற்றன், சேவகன்.

இடம்:—சென்னை....ராஜமாபுரம்....ஸ்ரீரங்கம்.

உ

# வசந்த சுந்தரி

## அங்கம் - 1

### காட்சி 1

[காட்சி : கல்லூரி வாசல் ; கிட்டு, தாமோதரன் சுருட்டைப் புகைத்துக்கொண்டு வெகு ராங்கியாக வருதல்]

கிட்டு :—“ தனியொருவனுக் குணவிலே யெனில்....

தாமோ :—ஜகத்தினை யழித் திடுவோம்”........... தெரியுமா செய்தி? ஒரு பையனுக்குப் பரீட்சையில் மண்ணைப்போட்டால், பள்ளிக்கூடத்தையே அழித்திடுவோம்! டானுக் கொடுங்கோல் ஒழிக!

கிட்டு:—சபாஷ், அண்ணு! முதலாளி தொழிலாளி, எசமான் சேவகன், ஆசான் சீடன், கெட்டிக்காரன் முட்டாள், படித்தவன் படியாதவன் என்ற வேறுபாடெல்லாம் போச்சண்ணு, 1917-ம் வருஷத்தோடே! இனிமேல் பொதுவுடைமைப் பள்ளிக்கூடந்தான் உண்டாகும். இனி, ஆசானை மாணவன் ‘தோழரே’ என்றுதான் கூப்பிடுவான். உபாத்தியாயரும் ‘வாரும் தோழரே’ என்றே மாணவனைக் கூப்பிடுவார்.

தாமோ :—அதுமட்டுமா....? வகுப்பில் உட்கார்ந்த மாணவரை யெல்லாம் மேல்வகுப்பிற்கு அனுப்பிவிட

வேண்டும்! பரீட்சை வைக்கக்கூடாது; வைத்தால் யாரும் எழுதக்கூடாது. போனாலும் போகட்டும், இன்னும் 72 ரூபாய் அழுது, ஒரு புரட்சி பண்ணுவோமா கிட்டு?

கிட்டு :—அண்ணா, வயதென்ன, காரியமென்ன, அந்தஸ்தென்ன, இந்த அம்பிப் பயல்களுடன் இருந்து இனிப் படிக்கவா? வா அண்ணா, நமது புரட்சியை வாலிப வுலகில் நடத்துவோம்.

தாமோ :—அட, என்னோடே படித்த சதாசிவன், எனக்கே கணக்கு வாத்தியாராக வந்து கவச குண்டலம் போட்டானே! இந்த வயிற்றெரிச்சலுக்கு என்ன செய்வதடா, கிட்டு?

கிட்டு :—ஐஸ் க்ரீம் சாப்பிடண்ணா சரியாகப் போகும்! இந்த $(a+b)^2$ம், $Mx+c$ கிராஃபும் இல்லாவிட்டால், அண்ணா பண்ணை விளையாதா? 'பள்ளிக் கணக்கு புள்ளிக் குதவாது' என்றவன் முட்டாளா?

தாமோ:—அட, அந்த அத்தைப் பாட்டிக் கதை வாத்தியாரும் எனக்கு ஜபமாலைப் போட்டுத் தள்ளினாரே....என் பண்ணையிலிருந்து, தினம் அவருக்குப் பால் வேறே அழுதேன்........

கிட்டு :—நீ கொடுத்தது பால், அவர் போட்டது முட்டை! ஜோராக தமாஷ் நாவல் படிப்பதை விட்டு, இந்தத் தேதியும் சண்டையும், உடன்படிக்கையும் நமக்கேதுக்கண்ணா? ஹென்ரி எட்டு எத்தனை பெண்ஜாதி கட்டினால் என்ன? எவ்வளவு பெருமனானால் என்ன? அண்ணாவுடன் அவன் போட்டிபோட முடியுமா?

பிளெடி மேரி எத்தனை பேரைக் கட்டியழுதா லென்ன? ஆங்கில அரசியல் சக்கிரம் எப்படிச் சுற்றினால் என்ன?

தாமோ :—என்தலை சக்கரம் சுற்றுதடா! அந்தக் குசுடுதுபுறு' கூட அல்லவா, இலக்கணமாக எனக்குச் சாபம் வைத்துச் சுன்னம் போட்டது!

கிட்டு :—இலக்கணமும், இலக்கியமும் நமக் கெதற்கு? அனுவசியமான விஷயத்தைப், பிரம்மாவின் திருத் தாத்தா வந்தாலும், அண்ணு மூளையிலே ஏற்ற முடியுமா?

தாமோ :—கிட்டு, இன்னொரு விஷயத்தை நினைத் தால் மானம் போகுதடா...........

கிட்டு:—என்ன, குழிபறிக்கும் விஷயமா? உபாத்தி யாயர்களெல்லாம் சேர்ந்து ரெம்பிவிட்டாலும், அண் ணுவைக் கிளப்ப முடியுமா? அண்ணு அவ்வளவு அழுத் தம். அண்ணுவுக்குச் சொல்லித்தர இன்னும் சரியான போதனுமுறை ஏற்படவில்லை.

தாமோ :—நான், இப்படிக் குழிபறிக்கிறேன். அவள், எடுத்ததும் ஸ்கூல் பைனல் தேறிவிட்டாளேடா. இதை நினைத்தால் ரோஷம் 120 டிகிரி ஏறுதடா!

கிட்டு:—இதென்னண்ணு அதிசயம்! எத்தனையோ பெண்கள் பி. ஏ., எம். ஏ., எம். பி. பி. எம்., எம். ஏ., பி. எல். எல்லாம் தேறுகிறார்கள்!

தாமோ :—அட, என்னை அவள் கேலிசெய்யமாட் டாளா? எனக்குத் தமிழ்கூட மோசம். அவள் நாளை கோகலே ஹாலில், பெண்கள் கூட்டத்தில் பேசப்போகி ருளாம். என்னைக் கண்டால் அவளுக்குப் பிடிக்கவில்லை.

என் மனம் துடிக்கிறது; அவள் மனம் கல்லாயிருக்கிறது.

கிட்டு :—தங்கம் இணங்காவிட்டால் தட்டான் விடுவானு? கிளி கீச்சிடட்டும் அண்ணு; புலி நாளை என்ன செய்கிறதென்று பார்.

தாமோ :—கிட்டு, என்ன செய்வதென்று தெரியலேடா.......... !

கிட்டு :—ஷோக்காகக் கலியாணம் பண்ணிக்கோ அண்ணு.......

தாமோ :—படிக்கவேண்டாமா.......?

கிட்டு :—புத்தகங்களைக் கூவத்தில் எறிந்துவிட்டு, வங்காளக் குடாக்கடலில் ஒரு முழுக்குப்போட்டு வா அண்ணு.......

தாமோ :—அட கிட்டு! இந்த ஸ்கூல்ஃபைனல் பட்டாவைப் பார்த்தால், அவமானம் பிடுங்கித் தின்குதடா.... !

கிட்டு :—வயிற்றெரிச்சல் தீர, பட்டாவில் வை தீ, அண்ணு....உம் எடு தீப்பெட்டி....

தாமோ :—இந்த மானக்கேட்டைக் கொளுத்தியெறிவதே நல்லது.

[எஸ். எஸ். எல். ஸி. பட்டாவுக்குத் தீ வைத்து, அந்த நெருப்பில் சுருட்டுப் பற்றவைக்கின்றனர்]

கிட்டு :—புத்தகப் படிப்பெல்லாம் புகையாகப் போகுதடா....அண்ணு ! (அண்ணுவைக் கட்டியழுதல்)

தாமோ :—கிட்டு, நாளை முதல் என்னடா செய்வோம் ?

கிட்டு:—நாளை முதல், இந்தச் சென்னையிலே, அண்ணு தர்பார் நடக்கும். 'தாண்டவராய முதலியார் பெற்ற சிங்கம், மிட்டாதார் தாமோதர முதலியார்' என்ருல், ஊர் நடுங்க வைக்கிறேன். நீ ராஜா; நான் மந்திரி. தாமோதர விலாஸ் உன்னது. அதன் கார்பார் என்னது. சிங்கத்தை நம்பு அண்ணு. எத்தனை கலெக்டரும், மாஜிஸ்ட்ரேட்டும் உன்னைத் தேடிவரச் செய்கிறேன் என்று பார்! வருஷம் இரண்டு எண்ணிக்கொள்; ராவ் பகதூர், பகல்பகதூர் பட்டமெல்லாம் உன் காலில் விழுந்து கெஞ்சச் சொல்லுகிறேன். அப்புறம் எத்தனை பேர் 'இந்திரன், சந்திரன்' என்று உன்மேல் பாடுவார்கள் தெரியுமா? பணத்திற்கு இறக்கைகட்டி விட்டால், ஆகாசமண்டலத்தைக்கூட வெல்லலாம் அண்ணு....

தாமோ :—(சுருட்டைப் புகைத்துக் கொண்டே) கிட்டு, இண்ட நெடும்ளைை டுக்கி, உம் . . . இண்டப் பள்ளிக்கூடம் எடிண்டால், என் வயிட்டெடிச்சல் டீடுமடா....

[திரைக்குப் பின்னல்]

சாரணர் :—டடடடடேய் (அபாயம் ஊதல்)

கிட்டு :—இந்தப் புல்தடுக்கி வஸ்தாதுகள் வருகின்றனர். பள்ளிக்கூடத்துடன் டுப்போட்டு ஓடு சைகிளில்; தயிர்வடை சாப்பிடுவோம்.

தாமோ :—டு டு டு டு.... (இருவரும் ஓடுதல்)

[விரைந்து வருதல் சாமண்ணுவும் ஐந்து சாரணரும்]

சமாண்ணு :—நில் (Halt)! போய்விட்டார்கள்.... இதோ அவர்கள் எரித்த பட்டா. நல்ல வேளையாய் உஷார்ப்படுத்தினேம்.

ஒரு சாரணன் :—இதோ ஸைகிளில் சென்றிருக்கின்றனர்.

சாம :—அதை அடையாளம் பிடித்துச் சென்று யார், எங்கே போகிறார்கள் ' என்று கவனி.

சாரணன் :—இதோ.... (ஓடுகிறான்)

சாம :—கலைமகள் கோயிலில், இப்படிப்பட்ட துஷ்டர் புகுந்து கலாம் விளைக்கின்றனர். ஒழுக்கம், வணக்கம், கருத்து, கவனம் இல்லாத இப்படிப்பட்ட மூடர், கலாசாலையைக் கலாட்டாசாலை யாக்குகின்றனர். இவர்களுக்கு இடம், சீர்திருத்தச் சாலையேயாம்.

[வருதல் சாரணன்]

சாரணன் :—தடித்தாமோதரன், தடபுடல் கிட்டு ; மங்கள விலாஸத்தில், தயிர்வடை சாப்பிடுகிறார்கள்.

சாம :—தெரிந்ததுதானே...........இவர்களைக்கண்காணிக்கவேண்டும். தோழர்களே, நாளை இரவு எட்டு மணிக்கு, வீரநிலயத்திற் சந்திப்போம்........வந்தனம். இனிக் கலைவோம். (எல்லாரும் செல்லல்)

## காட்சி 2

[கடற்கரையோரம் ; விளையாட்டு மைதானத்தில் வீரநிலயம். அதன்முன் ஒரு வட்ட வெளி. அதில் தீ எரிதல். இரவு எட்டு மணி. ஜயகோபாலன் வீரரை நடத்துகிறான். ஹுஸேன், சர்மண்ணு இருவரும், அணிவகுப்புத் தலைவரா யிருக்கின்றனர். முதலில் கோல்பயிற்சி (Staff Drill) நடக்கிறது. தாங்கிப்பிடி (Support Staff), இடுக்கிப்பிடி (Secure Staff), ஒழுங்கிற்பிடி (Order Staff), மரியாதை (Honour Staff), வந்தனம் (Salut) என்ற உத்தரவு

*களுக்குப் பிறகு— — —என்று மூன்று தடவை ஊதிய தும், சாரணர் ஓடி யொளிதல். பிறகு.—.—.—என்று குறுக்கி நீட்டி ஊதியதும் சாரணர் வருதல்]*

ஜய :—*தீயைச் சூழ்ந்தமர்* (Round the fire, sit at ease).

[*சாரணர் எல்லாரும் ஒழுங்காகத் தீயைச் சுற்றி அமர்தல்*]

எல்லாரும் :—*ஜய ஜயகோபால்!*

ஜய :—*தோழர்களே, இந்த வெற்றித் தீ முன், நமது அன்பை உறுதி செய்வோம்.*

எல்லாரும் :—*அன்புச் சுடர் பொலிக!*

ஜய :—*சென்ற இரண்டாண்டுகளாக, நமது வீரர் சங்கம், அரிய பணி செய்தது. கல்வி, கைத் தொழில், ஒழுக்கம், உடலுறுதி, பொதுநலச் சேவை அனைத்திலும் நமது வீரர் அபிவிருத்தி யடைந்திருக்கி ருர்கள். இந்த ஆண்டு கல்லூரிப் பரீக்ஷைகளில், நாம் எல்லாரும் வெற்றி பெற்றதே நமது சங்கத்தின் வெற்றி யாம். பள்ளிக்கூடத்தில் கலாம் விளைத்த தாமோதரக் கூட்டத்தை நாம் அடக்கினேம். அதனுல் உபாத்தியா யர்கள் நம்மீது அன்பு மிகுந்தனர். ஊரில் சுமார் 500 பொதுநலங்கள் புரிந்தோம். பல பொதுக்கூட்டங் களில் அமைதி நிலவச் செய்தோம். திருவிழாக்களில் ஜனங்களுக்கு உதவினேம். முப்பது அனுதைக் குழந்தை களைக் காப்பாற்றினேம். பதினைந்து கிராமங்களில், எண் எழுத்துக் கற்பித்தோம்; சுகாதாரப் பிரசாரம் செய் தோம். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல, நமது நண்பர் ஹஸேனை ஜப்பானுக்கு அனுப்பி, நெச*

வுப் புலவராகத் திரும்பிவரச் செய்தோம். நண்பர்களே! இனி........

எல்லாரும் :—ஜனுப் ஹுஸேன் சாஹேபுக்கு ஜே!

ஹுஸேன் :—தோழர்களே! உங்கள் பணவுதவியால், நான் ஜப்பான் சென்று நெசவுத் தொழில் கற்று வந்த கதையைச் சென்ற வாரமே சொன்னேன். நான் தொழிலில் தேர்ச்சி பெற்றேன். நமது ஜயகோபால் கல்வியில் தேர்ந்து எம்.ஏ ஆனுன். சாமண்ணு, பி. ஏ. ஆனுன். உங்களில் சிலர் பி. ஏ. சிலர் இண்டர்மீடியட், சிலர் ஸ்கூல் பைனல் தேறினீர்கள். "இனி" என்று நிறுத்தினுன் ஜயகோபால். 'இனி நாம் எல்லாரும் சேர்ந்து வாழ்வோம்' என்று அந்த வாக்கியத்தை நான் முடிக்கிறேன்.

எல்லாரும் :—அப்படியே வாழ்வோம்.

ஜய :—தோழர்களே, எனது ஜமீன்பெரிது; அதை ஓர் அறநிலையமாக்க வேண்டும். வறுமை, மடமை, அடிமைத்தனம் இம்மூன்றும் நமது சமுதாய வாழ்வை அழிக்கும் பேய்கள். இவற்றுடன் நாம் போர் புரிவோம். நம்மைச் சுற்றிக் கல்வியொளி பரப்புவோம். குடில்தோறும் கைத்தொழில் நடத்துவோம். புதிய முறைப்படி பயிர்த்தொழில் செய்வோம். உழைப்பவர் வயிறுர உண்ண வேண்டியதைத் தருவோம். சாதிமத பேதங்களால் பிரிந்த நமது சமுதாயத்தைச் சமரஸ சன்மார்க்க வழியில் ஒருகுல மாக்குவோம். 'தமிழ் நாட்டில் பிறந்தோர் அனைவரும் தமிழரே யாவர். தமிழர் அனைவரும் வடநாடு, தென்னுடு என்ற பேதமின்றிப் பாரத

மக்களே யாவர்' என்னும் உணர்ச்சியை ஊக்குவோம். அன்பைப் பரப்புவோம்.

எல்லாரும் :—அன்பு வாழ்க! ஒற்றுமை வாழ்க!

ஹூஸேன் :—தோழர்களே, ஜப்பானைப் பார்த்ததும் எனக்கு இப்படிப்பட்ட எண்ணங்களே உதித்தன. வறுமை, மடமை, வேற்றுமை என்கிற சைத்தான்களை ஓட்டவேண்டும் என்று ஆத்திரம் பிறந்தது; டோகியோ பெண்கள் கல்லூரியைப் பார்த்தேன். "ஆஹா, நமது தேசப் பெண்கள் இப்படிக் கல்வி கற்பதென்றோ"? என்று மனமுருகினேன். பாலிய விவாகம், கலியாணக் கூலி, கைம்பெண் கண்ணீர், வேசை வீடு இவற்றையெல்லாம் நீக்கவேண்டுமென்று என் மனத்தில் ஓர் உறுதி பிறந்தது.

ஜய :—அந்த உறுதியை நாம் நிறைவேற்றுவோம். பெண்ணின் பெருமையைக் காப்பாற்றுவோம்.

[ரஸ்தாவில் ஒரு மோட்டார் ஓடுகிறது; அதனின்றும் "ஐயோ அனுதாரக்ஷகா!......என்னைக் காப்பாற்று......!" என்ற அபயக்குரல் கேட்கிறது]

சாம :—(அபாயம் ஊதி) அந்த மோட்டாரில் ஒரு பெண் கூக்குரல் கேட்டது. ஏதோ அபாயம்!

ஜய :—ஹூஸேன், சாமண்ணா, சைகிளில் துரத்துங்கள். மூன்று பேர், இங்கே உஷாரா யிருங்கள். ஐந்து பேர், பீச் ரோடில் கவனமாக நில்லுங்கள். இதோ நானும் வருகிறேன்; உஷார் (Alert)! செல் (March)! (எல்லாரும் குறித்தபடியே செல்லல்)

## காட்சி 3

[*சாந்தோம் (St. Thome) கடற்கரை; 16-வயது கன்னிகை அழுகிருள். ஒரு முரடன் பலாத்காரம் செய்கிருன்; கையில் துப்பாக்கி வைத்திருக்கிருன். இரண்டு குண்டர் சுற்றிக் காவல் காக்கின்றனர். ரஸ்தாவிலிருக்கும் மோட்டாரில் ஒருவன் உட்கார்ந்திருக்கிருன். எல்லோரும் முகமூடியுடன், ஐரோப்பியர் மாதிரி உடை தரித்துக் கொண்டுள்ளனர்*]

கன்னிகை :—*அடபாவி, என்னைத் தொடாதே! ஹா! பரம்பொருளே! என்னைக் காப்பாற்று! சிவா! முருகா!*

முரடன் :—*பேசாதே! சுட்டுப் போடுவேன்! டுரை ஷமாசுஷாரம் டெரியாதோ! நம்பல் பங்களாவிலே சுகமாய் இரு. கம்ஆன்!*

கன்னி :—*ஐயோ! தெய்வமே! தெய்வமே! இதென்ன காலம்! ஈசனே! சிவா! முருகா! அபயம்!*

*(மயங்கி விழுகிருள்)*

[*ஓடிவருதல் நந்தன், வீராயி கையில் ஒரு ஹரிகேன் விளக்குடன்*]

நந்தன் :—*இதென்ன சத்தம்? பெண் குரல்! கொலை நடக்கிறதோ?*

வீராயி :—*ஆ! அந்தோ பாருங்க!*

குண்டன் :—*கிட்டவந்தால் சுட்டுப் போடுவேன்.*

குண்டன் 2 :— *(முரடனுக்கு) ஆள்வருது!*

முர :—*டுப்பாக்கி யிடுக்குடு; இவளை டூக்கிச் செல்வோம்!*

நந் :—என்ன, துஷ்டர்கள் !

முர :—டுக் ! டுக் ! டுக் !

நந் :—(கிட்டவந்து) நீர் யார் ?

முர :—நீ யார் ?

நந் :—இந்தப் பெண்மணி யார் ?

முர :—(வீராயியைக் காட்டி) இவள் யார் ?

நந் :—என் மனைவி.

முர :—இவள் நம்கி மேம்ஸாஹெப் !

கன்னி :—இல்லை இல்லை ! இவன் கள்ளன் ! என்னைத் திருடிவந்து பலாத்காரம் செய்கிறான். ஈசனே ! ஈசனே ! நீ தான் துணை ! சிவா ! முருகா !

[மீண்டும் மயக்கம்]

நந் :—என்னுயிர் போனாலும், இந்த அம்மாளை நீ தொடவிட மாட்டேன்.

முர :—டுரை கோபம் வேண்டாம் ; டுரை சுட்டுப் போடுவான் ! நீ என்ன ஜாதி ?

நந் :—நான் ஆண் சாதி ! அவள் பெண் சாதி ! நல்லது செய்வோர் நல்ல ஜாதி ! கெடுதல் செய்வோர் கெட்ட ஜாதி ! போ அந்தண்டை ! அம்மா, எழுந்து எங்களுடன் வாருங்கள் !

முர :—சுடு ! (இருவருக்கும் குஸ்தி நடக்கிறது)

[வருதல் ஜயகோபாலன், ஹுஸேன், சாமண்ணு முதலியோர்]

ஹுஸேன் :—ஜயம், 16-வயதுப் பெண்ணை, ஒரு பத்மாஷ் பலாத்காரம் செய்கிறான். கூட நாலுபேர் - துப்பாக்கி சகிதம் ! என்ன செய்யலாம் ?

ஜயகோபாலன் :—மோட்டாரில் யார் ?

ஹூஸேன் :—ஒரு ஐரோப்பியன், துப்பாக்கியுடன் இருக்கிறான்.

சாமண்ணா :—ஆ, பார், அந்த முரடனுடன் ஒருவன் குஸ்தி போடுகிறான் ; ஒரு பெண் அந்தப் பெண்ணருகே இருக்கிறாள்.

ஜய :—இதுதான்சமயம், நீங்கள் மெல்ல ஒளிந்து வாருங்கள். சாமண்ணா, வா பின்னே........(ஓடுகிறான்)

[ஜயகோபாலன் விரைந்து சென்று,முரடனைக் கட்டிப் பிடிக்கிறான். முரடன் திமிறிக்கொண்டு ஓடுகிறான். பீமண்ணா துரத்தி,முதுகில் ஒரு குத்து வைக்கிறான். சுற்றிலுமுள்ள துஷ்டர்கள் ஓடுகின்றனர்]

ஜய :—About turn No 2 ! (சாமண்ணா திரும்பி வருகிறான)

Danger........ (அபாயம் ஊதல் - சாரணர் எல்லாரும் ஓடி வருகின்றனர்)

Scrum! (கன்னியைச் சுற்றி வட்டமிடுகின்றனர்)

சாம :—இரு ஜயம், அந்தப் பயலைக் கீசகபிண்டம் பிடிக்கிறேன்.

ஜய :—உன் குத்தே போதும் ; முதுகு அப்பளாம்போலே நொறுங்கி யிருக்குமே !

துப்பாக்கி வைத்திருக்கிறான். ஆள் தெரியவில்லை. நம்மையும் சுட்டுப் பெண்ணையும் மோசஞ் செய்தால் அபாயம் ! சாந்தமாகவே நமது காரியத்தைப் பார்ப்போம். கிட்ட வந்தால், நானே ஒருகை பார்க்கிறேன்.

[முரடர் துப்பாக்கியைக் காட்டிக்கொண்டேபோய், மோட்டாரில் ஏறித் தப்புகின்றனர்]

ஹூபசேன் :—சலோ பத்மாஷ்! ஆஹா, மோசம் போனேன்.

மோட்டார் நம்பர் பார்க்கவில்லை.

சாம :—பரவாயில்லை. எப்படி யிருந்தாலும், நமது பால்டேவிட் கண்டுபிடித்துவிடுவான்.

ஜய :—இனி, இக் கன்னியைக் கவனிப்போம். (நந்தனை நோக்கி) தாங்கள் நெடுநேரம் இவனுடன் போராடினீர்களோ........?

தாங்கள் யார்? (உற்றுப்பார்த்து) ஆ, நந்தனா! வந்தனம், வந்தனம்; வீரரே, வந்தனம்!

நந் :—குரல் கேட்டதும், அவளும் நானும் ஓடி வந்தோம். பகைவர் பயமுறுத்தினர். உயிர் போனாலும் இந்த அம்மாளைக் காப்பதெனத் துணிந்தோம். அவள் பெண்ணருகே உட்கார்ந்தாள். நான் அவனுடன் போராடினேன்.

வீராயி :—நல்லவேளையா, வந்தீங்க ஐயா! இன்றைக்கு மூன்று கொலை விழுந்திருக்கும். பாவிப் பயல்கள், வேங்கைப்புலிபோல், இந்த இளமானை வளைத்தனர். அம்மா! அம்மா! அத்தா!

கன்னி :—(மயக்கம் - பேச்சில்லை)

வீராயி :—பேச்சில்லை, மயக்கம்! கோகுலத்திற்கு எடுத்துச் செல்வோம்.

நந் :—அதுதான் யோசனை; தெளிவு வந்ததும், ஊர் பேர் விசாரித்துக் கொண்டு சேர்ப்போம்.

ஜய :—நல்லது, Prepare Stretcher. (டோலி கட்டுங்கள்)

சாம, ஹூஸேன் :—இதோ, எங்கள் சட்டை, தலைப்பாகை யெல்லாம் உபயோகியுங்கள்.

[சாரணர் தடிகளை வைத்து, சட்டைகளைப் பரப்பிக் கயிற்றால் டோலி கட்டுதல்]

சாம :—அங்கே ஒரு பலமான டிம்பர்நாட் (மா முடிச்சு) போடு........சரி, தயார்!

நங்:—வீராயி, அம்மாளை மெதுவாக எடுத்து டோலியிலே வை. (கன்னியை டோலியில் மல்லாந்து வைத்தல்)

ஜய :—Stretcher பலமாயிருக்கிறதா?

ஹூஸேன் :—சாமண்ணுகூட உட்காரலாம்! ஸப் பஸந்த்ஹை! சலோ!

ஜய :—தூக்கு...........(சாரணர் டோலியைத் தூக்கிச் செல்லுகின்றனர்)

## காட்சி 4

[ஹரிஜன கோகுலம் :—பரிசுத்தமா யிருக்கிறது. இரவு 10-மணி; கோகுல வைத்தியசாலை எதிரே தெரிகிறது.

ஒரு விளக்கு; அதைச்சுற்றி, வட்டமாக, கோகுலவாசிகள் 8 பேர் பாடி நடனமாடுகின்றனர். அவர்களில் ஓர் அந்தணர், டாக்டர் நாராயண சர்மா, ஓர் அடி பாடியதும், மற்றவர் பின்னே பாடி கைகொட்டி தீபப்பிரதக்ஷணம் செய்கின்றனர். ஒரு பெண்மணி பிடில் வாசிக்கிருள்; இன்ளெருவர் மிருதங்கம்; மற்ளெருவர் மோர்சிங்; இன்னொருவர் தம்பூரா மீட்டுகிருர்; மற்ளெருவர் தாளம் போடுகிருர்]

## ஸமரஸப் பள்ளு

[ராகம் புன்னாகவராளி - தாளம் மிச்ரஏகம்]

*சந்தோஷச் செய்தியண்ணே—இனி*
*ஜாதி மதகிற பேதமில்லை!*
*பந்தந் தொலைந்ததடா—சக்தி*
*பாரத தேவி மணிவயிற்றில்*
*வந்த தவப்புதல்வர்—இங்கு*
*வாழுவோம் ஓர்குலத் தோழர்களாய்!*
*சிந்தை சிவத்தினிலே—வைத்துச்*
*செய்வோம் பொதுநலச் சேவைகளை.*

*கூறுங்கள் வெற்றியென்றே—ஜீவ*
*கோடியிற் சாமியைக் கும்பிடுங்கள்.*
*ஏறுங்கள் ஞானமலை—ஆங்கே*
*ஈசர்க ளல்லது நீசரில்லை.*
*வாருங்கள் வீரர்களே—நம்மை*
*வாட்டும் இருளிடர் ஓட்டிடுவோம்.*
*சேருங்கள் ஒற்றுமையாய்த்—தொண்டு*
*செய்யுங்கள் வையஞ் செழித்திடவே!*

*நாடுவோம் விண்ணருளை—நா*
*நாரணராய்ப் பரி பூரணராய்ப்*
*பாடுவோம் தோழர்களே—இந்தப்*
*பாரெல்லாம் ஆனந்தத் தேறலென்றே*
*ஆடுவோம் வட்டமிட்டே—அண்ணே*
*அன்பு வெளியினில் இன்பமுடன்*
*கூடுவோம் சங்கொலிப்போம்—தாளங்*
*கொட்டுவோம் வேற்றுமைக் கட்டறுத்தோம்.*

*[வருதல் கன்னியை டோலியில் சுமந்து, ஜயகோபால் முதலியோர்—நந்தன், வீராயி முன்னே நடத்துகின்றனர். பாட்டு நிற்கிறது]*

நங் :—ஆஸ்பத்திரி திறக்கட்டும்.

டாக்டர் சர்மா :—இதோ, வாருங்கள்.

வீராயி :—நான்போய் சுடுகஞ்சி கொண்டுவருகிறேன். பாவம், பெண் கிரங்கிப் போனாள் !

[ஆஸ்பத்திரிக் கதவு திறக்கிறது. கன்னியை உள்ளே கொண்டு செல்கின்றனர்]

டாக்டர் :—இந்தக் கட்டிலில் மெதுவாக வையுங்கள். (மெதுவாய் வைக்கின்றனர்)

ஜயகோபால் :—(மூக்கிற்கருகே நூலைவைத்து) மூச்சு இருக்கிறது. அச்சத்தால் மயக்கம்! டாக்டர் பார்க்கட்டும்.

டாக்டர் :—களைப்பும், மயக்கமும்; நடந்ததென்ன ?

நங் :—இங்கே பஜனை நடக்கும்போது, நாங்கள் சற்றுக் கடலோரம் சென்றோம். பெண் குரல் கேட்டது. ஓடிப்போய்ப் பார்த்தோம். நாலு துஷ்டர்கள் இக்கன்னியைப் பயமுறுத்திக் கொண்டிருந்தனர். பெண், உயிர் துடித்து, மயங்கி வீழ்ந்தாள். நல்லவேளையாய் இந்தப் புண்ணியவான்கள் வந்து கன்னியைக் காப்பாற்றினார்கள்.

ஜய :—நல்ல தண்ணீர் வேண்டும்.

[வீராயி தண்ணீரும், கஞ்சியும் கொண்டு வருதல்]

வீராயி :—இதோ தண்ணீர், சுடுகஞ்சி.

ஜய :—அம்மா, இந்தப் பெண் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளியுங்கள்.

(தெளித்தல்)

கன்னி :—ஹா.......சிவா, முருகா !

வீராயி:—அம்மா, பிழைத்தாயா! எழுந்திரு....கண்ணன் காத்தான்! ஆத்தா, பயப்படாதே!

டாக்டர் :—இன்னும் தெளியவில்லை.

(மூக்கில் ஒரு மருந்தை வைத்து)

அம்மா மூச்சை இழுங்கள்.

ஜய :—தெளிவு வந்தது! கடவுள் காத்தார்!

கன்னி :—ஹா....சிவா முருகா! என்னைக் காப்பாற்று!

வீராயி :—அம்மா கடவுள் உன்னைக் காத்தார்; தைரியமாயிரு.

கன்னி :—(சுற்றிலும் பார்த்து) ஆ! நான் எங்கிருக்கிறேன்? துஷ்டர்கள் எங்கே?

வீராயி :—அம்மா, அந்தப் பாவிகள் ஓடிப்போனார்கள். நீ நல்ல இடத்தில் இருக்கிறாய். பார் இந்தப் புண்ணியவான்களை.

கன்னி :—(ஜயகோபாலனை உற்றுப் பார்த்து வியக்கிறாள்) சாரணர்களா! வந்தனம், வந்தனம், நண்பர்களே, வீரர்களே, என்னைக் காத்தீர்கள்! ஈசனே, என் கற்பைக் காத்தாய்! வணக்கம்!

வீராயி :—அம்மா களைத்துப் போனாய்; இந்தப் பாற் கஞ்சி சாப்பிடு.

கன்னி :—(சாப்பிட்டு) வீரர்களே, அந்தத் துஷ்டர்கள் செய்த இடும்பையால், மனந்துடித்துப் பதறி வீழ்ந்தேன்; பிறகு நடந்தது தெரியாது.

வீராயி :—அப்புறம் இந்தப் புண்ணியவான்கள், அந்தத் துஷ்டர்களை ஓட்டி, உன்னை இங்கே டோலியில்

எடுத்து வந்தனர். அம்மா, நீ யார்? ஊர் பெயர் என்ன ?

கன்னி:—வந்தனம்; நான் சேவா சதன மாணவி; "வசந்த சுந்தரி இங்கு இருக்கிருள், உடனே மோட்டார் அனுப்பவும்" என்று எங்கள் தலைவி லக்ஷ்மி அம்மாளுக்கு டெலிஃபோன் செய்யுங்கள். அம்மாள் கவலைப்படுவாள்!

ஜய :—சாமண்ணு, உடனே போய்,சேவாசதனத்திற்கு டெலிஃபோன் பேசு :—" மாணவி வசந்த சுந்தரி ஒரு அபாயத்தில் அகப்பட்டுக்கொண்டாள். சாரணர் அவளை மீட்டு, ஹரிஜன கோகுலத்திற்குக் கொண்டு வந்தோம்; பெண் சௌக்கியம். இதோ மோட்டாரில் வருகிரும்; விவரம் நேரில்" என்று பேசு.

சாம :—இதோ, உடனே! (சைகிளில் போகிருன்)

ஜய :—ஹுஸேன், ஒரு நல்ல மோட்டார் தயார் செய். இந்தா ரூபா 10.

ஹுஸேன் :—என்னிடம் பணம் இருக்கிறது. இதோ போகிறேன். (ஹுஸேன் சைகிளில் போதல்)

ஜய :—அம்மா, நிம்மதியா யிருங்கள். இதோ மோட்டார் வருகிறது. எங்களுக்கு ஸ்ரீமான் வெங்கு ராவைத் தெரியும்; சேவாசதனத்தைப் பற்றியும் தெரியும். தாங்கள் இளைப்பாறுங்கள்.

கன்னி :—இதென்ன நிலயம் ?

நந் :—அம்மா, இது ஹரிஜன கோகுலம்.

கன்னி :—ஆ, தெரிந்து கொண்டேன். சந்தோஷம்; நந்தனுரைப்பற்றி மிகவும் கேள்விப்பட்டிருக்கிறேன்; அவர் பரமசாது, உத்தமர், பரோபகாரி.

ஜய :—இதோ, இவர்தானம்மா நந்தனார், முதலில் அந்த முரடனுடன் போராடியவர். இதோ இவர்தான் அவர் பத்தினி, தங்களருகே யிருந்து காத்தவர். இருவரும் இந்தக் கோகுலத்தை நடத்துகின்றனர்.

நந் :—இந்த வீரர்தாம் சாரணரை அழைத்து வந்து தங்களைக் காத்தது. இவர் இல்லாதுபோனால், இன்று மூன்று கொலைகள் நடந்திருக்கும்.

கன்னி :—(ஜயகோபாலைப் பார்த்து, நாணத்தால் தலை குனிந்து) வந்தனம்; கடவுளே தங்கள் வடிவாக வந்து இப்பேதையின் மானத்தைக் காத்தார்.

ஜய :—அம்மா, எங்கள் கடமையைச் செய்தோம்.

(வருதல் ஹுஸேன்)

ஹுஸேன் :—கார் தயார், புறப்படுங்கள்.

ஜய :—(நந்தனாரிடம்) தாங்களும், தங்கள் சம்ஸாரமும் கூடவரவேண்டும். ஒரு பெண் துணையிருந்தால் நல்லது.

நந் :—தயார்; வீராயி, அம்மாளை அழைத்துக் கொண்டு மோட்டாரில் உட்காரவை.

வீராயி :—அம்மா வாருங்கள்; தலையை வாரிக் கொண்டு செல்லலாம்.

கன்னி :—இந்தக் கோகுலம், நந்த கோகுலம் போலவே யிருக்கிறதே! அன்பும், சுத்தமும், இன்பமும் இங்கே விளங்குகின்றன. இதைச் சுற்றிப் பார்க்க விரும்புகிறேன். கோகுலவாசிகள் எத்தனை பேர்?

நந் :—அம்மா, இங்கே இருப்பவர் 60 மாணவர், 15 மாணவிகள். இவர்தாம் கோகுல வைத்தியர் நாரா

யண சர்மா, தியாக புருஷர், மனைவியுடன் ஹரிஜன சேவை செய்கிறார். இங்கே பத்து ஆசிரியர் இருக்கிறார்கள். எல்லாரும் சரிநிகர் சமானமாக, ஒரு குலமாக வாழுகிறோம்.

கன்னி:—எங்கள் சேவாசதனத்திலும், அவ்வாறே ஸமரஸமாக வசிக்கிறோம். இங்கே என்ன தொழில்கள் நடக்கின்றன ?

நந் :—ஆசிரமக் காரியங்களையெல்லாம், நாங்களே பங்கிட்டு நடத்துகிறோம். கல்வி புகட்டுகிறோம். தமிழ், ஆங்கிலம், ஹிந்துஸ்தானி இம் மூன்றும் கற்பிக்கிறோம். எங்களுக்கு வேண்டிய துணிமணிகளை, நாங்களே நூற்று நெய்கிறோம். வருஷம் சுமார் ரூபா 2000 நெசவில் ஆதாயம் வரும். வேண்டிய உணவுப் பொருள்களை நாங்களே பயிரிடுகிறோம். சுமார் 15 பசுக்களும், 20 காளைகளும் வளர்க்கிறோம். இயல்பாக இறந்த மாடுகளின் தோலை வாங்கி, மிதியடிகள் செய்து விற்கிறோம். தச்சு வேலை, இரும்பு வேலை, தோட்ட வேலை, நெசவு, பாய் பின்னல், கூடை முடைதல், பிரம்பு வேலை இவை எல்லாம் பலனைத் தருகின்றன. மாதம் சுமார் ரூபா 2500 செலவாகிறது.

கன்னி :—நல்ல வேலை செய்திருக்கிறீர்கள் !

ஜய :—நந்தனாரே இந்தாரும் நூறு ரூபாய், ஆசிரமத்திற்கு ஒரு எளிய காணிக்கை.

நந் :—வந்தனம் ; தங்கள் பெயரால் ஒரு குடில் கட்டி வைக்கிறேன்.

(வருதல் சாமண்ணு)

சாம :—ஃபோனில் பேசியாயிற்று. லக்ஷ்மி யம்மாள் வந்தனம் தெரிவித்தாள்.

நந் :—அம்மா வாருங்கள், ஆசிரமத்தைச் சுற்றிப் பார்த்துச் செல்வோம்.

கன்னி :—வந்தனம்.

ஜய :—வா, ஹுஸேன் !

ஹுசேன் :—நானும் சாமண்ணுவும், நண்பருடன் முன்னே சைகிளில் போகிறோம். மோட்டாரில் நீங்கள் நந்தனுர், அவர் மனைவி, அந்த அம்மாள், டாக்டர் ஐவரும் சௌகரியமாக வாருங்கள்.

ஜய :—நல்லது. நீங்கள் முன்னே செல்லுங்கள்.

[சாரணர் சட்டைகளைச் சரிசெய்து கொண்டு சைகிளில் புறப்படல்]

[மற்றவர்கள் கோகுலத்தைச் சுற்றிப் பார்த்து, மோட்டார் ஏறுகின்றனர்]

## காட்சி 5

[சேவாசதனம் ; வெங்குராவ், லக்ஷ்மிதேவி, லலிதா - வசந்த சுந்தரியைக் காணுது தவிக்கின்றனர்]

வெங்கு :—லக்ஷ்மி, என்ன செய்வோம் ; சென்னையை அலசிப் பார்த்தாயிற்றே !

லக்ஷ் :—அருமையான பெண், என் மகள்போல அவளை வளர்த்தேன் ; தெய்வந்தான் குழந்தையைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும்.

லலிதா :—வசந்தசுந்தரி யில்லாமல் ஆசிரமம் வெறிச் சென்றிருக்கிறது. குயிலில்லாச் சோலைபோலவும், நிலவில்லா வானம்போலவும் இருக்கிறது.

லக்ஷ்:—லலிதா, கோகலே ஹால் கூட்டம் முடிந்ததும், நீ அவளைப் பார்த்திருப்பாயே. அங்கு நடந்ததென்ன ?

லலிதா :—அம்மா, இன்று அருமையான பிரசங்கங்கள் நடந்தன. ருக்மணி அம்மாள் அபிநயத்துடன் நடனக்கலையைப் பற்றிப் பேசினாள். லக்ஷ்மியம்மாள் "பெண்களும், தேச சேவையும்" என்பதைப் பற்றி வீரமாகப் பேசினாள். டாக்டர் அம்மாளும் பெண்ணின் பெருமைகளைப் பற்றிச் சண்டமாருதம் பொழிந்தாள். அதன் பிறகு, நமது வசந்தசுந்தரி, இனிய பாட்டுடன் தமிழிசையைப் பற்றிப் பேசினாள். அவளே மங்களம் பாடினாள். தலைமை வகித்த பாகீரதியம்மாளுடன் நான் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தேன். திரும்பிப் பார்த்தேன், வசந்தசுந்தரியைக் காணோம். கூவினேன், குரலில்லை. முன்னே புறப்பட்டுச் சென்றதாகக் கருதி, நான் பாகீரதியம்மாள் மோட்டாரிலேயே இங்கு வந்தேன். ஒருவேளை ஒலிப்படம் பார்க்கப் போயிருப்பாளோ ?

லக்ஷ் :—அப்படித் தனியாகப் போகமாட்டாளே !

லலிதா :—சென்னை ஜனசமுத்திரத்தில், இந்த ஆணி முத்து எங்கே மறைந்ததோ........

('ட்ரங்...ட்ரங்...ட்ரங்!' டெலிஃபோன் கூப்பிடுதல்)

லக்ஷ் :—ஆ, டெலிஃபோன் ! சுப சமாசாரமாயிருக்கவேண்டும், ஜகதீஸ்வரீ........

(டெலிஃபோனில் பேசுகிறாள்)

ஹல்லோ....நம்பர் 1936....என்ன ?........ஆ ! சந்தோஷம் ! வசந்தசுந்தரி க்ஷேமமா ? ஜயகோபால் சார்

ணர்களா காத்தார்கள்? வந்தனம். கோகுலத்திலா.... கவலையில்லை. (வெங்குராவைக் கூப்பிடுதல்)

வாருங்கள். சுபம்! சுபம்! குழந்தை, நந்தனுர் கோகுலத்தில் இருக்கிருளாம்; பேசுங்கள்.

வெங்கு :—(பேசுதல்) ஹல்லோ....வெங்குராவ். ஆ! ஜயகோபால் சாரணரா? வந்தனம். வாருங்கள். மோட்டார் கொண்டுவரட்டுமா? நீங்கள் புறப்பட்டாயிற்ரு? சரி, வந்தனம். ('ட்ரக்!' நிற்றல்)

லலிதா :—என்ன ஆபத்தோ! வந்தால் தெரியும்.

வெங்கு :—இந்நகரில் ஆபத்திற்குக் குறைவில்லை. ஆபத் பாந்தவா! அனுதரக்ஷகா!

(சைக்கிளில் ஹுஸேன், சாமண்ணு வருதல்)

வாருங்கள் வாருங்கள்! மகா பரோபகாரிகள்.

(வரவேற்று அமர்த்தல்)

ஹுசேன் :—சலாம்!

சாம :—நமஸ்தே! சுபம்!

வெங்கு :—வந்தனம்! ஜயகோபால் எங்கே?

[மோட்டார் வருதல் : ஜயகோபால், வசந்தசுந்தரி, நந்தனுர், வீராயி, டாக்டர் இறங்கி வருதல்]

வரவேண்டும், வரவேண்டும்! வந்தனம்.

லலிதா:—வசந்தம், அம்மா! க்ஷேமமாக வந்தாயா!

(தழுவிக்கொள்ளல்)

ஐவரும் :—ஓம் வணக்கம்!

வெங்கு :—வந்தனம்; இப்படி உட்காருங்கள்.

(லக்ஷ்மி உள்ளே சென்று பால் கொண்டு வருகிருள்)

லக்ஷ் :—அம்மா வசந்தம், பிழைத்து வந்தாயா! கண்மணீ, என்ன ஆபத்தடீ வந்தது?

வசந் :—அதையேன் கேட்கிறீர்கள்! பிழைத்தது சிவன் செயல்! இந்த வீரர் தாம் என்னைக் காத்தார்கள்?

லலிதா :—வசந்தம், கோகலே ஹாலில் திரும்பிப் பார்த்தேன் ; உன்னைக் காணோம். கூட்டம் முடிந்ததும் எங்கே போனாய் ?

வசந்த :—வாசலில் ஒரு மோட்டார் நின்றது. அதில் ஒரு பெண்ணும் இருந்தாள். மற்றொரு ஐரோப்பியன் இருந்தான். நேராக சேவாசதனம் போகிற மோடார் என்றதும் ஏறினேன். ஏதோ சிறிது யோசனையில் இருந்து விட்டேன். பெண்ணும் ஆதரவாகப் பேசினாள். ஒய். எம். ஸி. ஏ. வாசலில், இன்னும் இரண்டு பேர் ஏறினர். வழியில் அந்தப் பெண், மெல்ல இறங்கிச் சென்றாள். மோடார், பீச்ரோடில் விரைந்தது. சந்தேகம் பிறந்தது; மோசம் தெரிந்தது. கல்லூரி மைதானத்தில், சில வாலிபர் கூடியிருக்கக் கண்டு, அபயமிட்டேன். இவ்வீரர் வந்து, எனது உயிரையும் மானத்தையும் காத்தனர். சாந்தோம் கடற்கரை ; தனியிடம் ; அந்தத் துஷ்டர்கள் கொச்சைத் தமிழ் பேசி என்னைப் பலாத்காரம் செய்தனர். துப்பாக்கியும் வைத்திருந்தனர். 'சிவா, முருகா' என்று அலறி, மயங்கி வீழ்ந்தேன். இந்த நந்தனாரும், இதோ இருக்கும் அவர் மனைவியும் ஓடி வந்து, துஷ்டருடன் வாதாடினர். நல்ல வேளையாய், இந்த வீரர் (ஜபகோபாலைச்சுட்டி) சாரணருடன் வந்து, துஷ்டரை விரட்டி யடித்து, மயங்கிக் கிடந்த என்னைக் கோகுலத்திற்குத் தூக்கிச் சென்று காப்பாற்றினர்.

லக்ஷ் :—ஹா........

வெங்கு :—துஷ்டர் யார் ?

ஜய :—கண்டு பிடிக்காமல் விடுவோமா ? நாளையே நண்பர் டேவிட் பாலுடன் சென்று துப்பு விசாரிக்கிறோம்.

வெங்கு :—நானே பொலீஸில் தெரிவிக்கலாமென்றிருந்தேன்.

ஜய :—வேண்டாம்; இரகசியமாகவே உளவு பார்த்து, ஆளைக் கண்டுபிடிப்போம்.

வெங்கு :—ஆனால் தங்கள் பொறுப்பு ! நகரில் மோசடி வலுத்துப்போனது.

சாம :—புதுப்புது மோசங்கள் நடக்கின்றன.

லக்ஷ் :—வசந்த சுந்தரி, உன்னைக் காத்த வீரருக்கு இதைத் தா.

[பால் செம்பும், கோப்பையும் தருகிறாள்; வசந்தா பால் ஊற்றி ஜயகோபாலனுக்குத் தரும்போது, இருவர் கண்களும் புல்லுகின்றன]

ஜய :—மனமகிழ்ந்தது ! எங்கள் கடமை நிறைவேறியது.

வெங்கு :—இலை போடச் சொல்லுகிறேன். சாப்பிட்டு, இரவு இருந்து செல்லலாம்.

ஜய :—சாப்பாடான பிறகு தான் தீவளர்த்தோம். பரோபகாரத்திற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே பெரிய விருந்து ; வந்தனம், அகாலமாயிற்று.

லக்ஷ் :—அவசியம் மறுமுறை வரவேண்டும்.

ஜய :—சந்தோஷமாக வருகிறோம். பெண்கள் முன்னேற்றத்திற்குத் தாங்கள் அற்புதமான பணி செய்திருக்கிறீர்கள். முன்னே ஒரு தடவை தங்கள் ஆசிரமத்திற்கு வந்திருக்கிறேன். மாதம் சுமார் 3000 செலவாகுமென நினைக்கிறேன்.

வெங்கு :—ஆம்! அபிமானிகள் ஆதரவாலேதான் காரியம் நடக்கிறது. சிற்பம், சங்கீதம், நடனம், நூற்றல், அணிவேலை, கம்பளம் நெய்தல், பாய் கூடை முடைதல், பிரம்பு வேலை, வீட்டு வேலை, தோட்ட வேலை, வைத்தியம் இல்லறத்திற்குரிய சாஸ்திரங்கள் எல்லாம் நடக்கின்றன. இந்த ஆசிரமக் கன்னிகள், சர்வகலாசாலைப் பரீட்சையிலும் வெகுமதிப்புடன் தேறிவருகிறார்கள். அடுத்த வருஷம் நெசவுத்தொழில் வைக்க உத்தேசம்.

ஜய :—இதோ எனது நண்பர் ஜனுப் ஹுஸேன் சாஹேப், ஜப்பான் சென்று தேர்ச்சி பெற்று வந்திருக்கிறார். ஹுசேன், இவர்களுக்கு முதல்தரமான நெசவுச்சாலை யொன்று அமைத்துத் தரவேண்டும்; செலவு என்னது.

ஹுசேன் :—தயார்; நாளையே தொடங்குகிறேன்.

வெங்கு, லக்ஷ் :—தங்கள் தாராள மனதிற்கு வந்தனம். வாருங்கள் ஆசிரமத்தைச் சுற்றிப் பார்த்துச் செல்லலாம்.

ஜய :—சந்தோஷம்.

[எல்லாரும் ஆசிரமத்தைச் சுற்றிப் பார்க்கின்றனர். பிறகு விடை பெற்றுச் செல்கின்றனர்]

---

# அங்கம் - 2

## காட்சி 1

[கூரை வீட்டுச் சிறுகூடம்; நடராஜர் படம்; எதிரே திரு விளக்கு; சிவஞானமும், பூங்கோதையும் சுருதியுடன் தோத்திரம் செய்தல்]

இருவரும் :—

*மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்*
*புலனைந்தின் வழியடைத் தமுதே*
*ஊறிநின் றென்னுள் எழும்பரஞ் சோதி*
*உள்ளவா காணவந் தருளாய்;*
*தேறலின் தெளிவே, சிவபெரு மானே,*
*திருப்பெருந் துறையுறை சிவனே,*
*ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த*
*இன்பமே என்னுடை யன்பே!*

சிவ :—நமச்சிவாய! அன்பர்க் கன்பனே, எமது மனக்கவலையெல்லாம் உன்னிடமே சொல்லி ஆறுதல் பெறுகிறோம். எம்மை ஊட்டுவதும், மாயையின் மடியில் வைத்துத் தாலாட்டுவதும், உலக நாடகத்தில் விளையாட்டுவதும், உனதிச்சையே!

பூங் :—சிவனருளாலே தான், இந்த ஏழைக் குடும்பம் பிழைத்திருக்கிறது. எறும்புக்கும் படியளப்போன் ஈசனே.

சிவ :—பூங்கோதை, குடும்பமென்றால் கவலைக் கடல்தான். சற்றே பாடினோம், இறைவனைச் சிந்தித்தோம். மீண்டும் கவலைப் புயல் வீசுகிறது. போனமாதம் கோயிலில் அப்பர் சரித்திரப்பட மெழுதி ரூபா 30

வந்தது; காலட்சேபமானது. இந்த மாதம் வேலையில்லை. இக்காலம், தமிழருமை யறிந்து, தேவாரந் திருவாசகம், திருப்புகழ் முதலிய அருள் வாக்குகளைக் கருதிக் கற்பாருமில்லை.

பூங் :—கவலை வேண்டா. இன்னும் அரிசி ஒரு வாரத்திற்குவரும். கொல்லையில் பயிர்க்குழி யிருக்கிறது. இதோ எனது தாவடம் உள்ளது. மஞ்சளைக் கோத்துக் கட்டிக் கொள்ளுகிறேன். தங்கத்தை விற்று விடலாம். பொன்னும் நகையும் பொருட்டல்ல; தங்கள் இன்பமே எனது இன்பம். தங்கள் அன்பே என் அழகு.

சிவ :—கண்ணே, "இல்லதென் இல்லவள் மாண்பானால்?" என்பது உனக்கே தகும்.

அடியார்களை ஈசன் ஆதரிப்பான். பஞ்சத்திற் படிக்காசீந்த பரமன் நம்மைக் காப்பான். கண்ணே, மற்றொரு....கவலை....நமது பெண்ணுக்கு....

பூங் :—நாதா, இருப்பது ஒரு அருமை மகள்; வசந்த சுந்தரி புத்திசாலி. லக்ஷ்மியம்மாளின் அன்பைப் பெற்றுச் சேவாசனத்தில் நன்றாகப் படிக்கிறாள். அவளைப்பற்றிக் கவலையில்லை.

சிவ :—கண்ணே, நமது சுந்தரிக்கு வயது 16 ஆயிற்றே. உறவின்முறையார்களெல்லாம், 'இன்னுமா கலியாணம் செய்யவில்லை' என்கிறார்கள். கையிலோ பணமில்லை. பெண் பத்தாவது தேறி விட்டாள். அதற்குத் தக்க கணவனைத் தேடவேண்டுமே! அங்கங்கு தேவாரம் ஓதப்போகும் போது வரன் தேடினேன்; இதோ ஐந்து ஜாதகங்கள் உள்ளன.

பூங் :—இது யார் ஜாதகம் ?

சிவ :—இது மதுரை ; சுந்தர முதலியார் மகன் பழனியப்பன், வயது 22, பி. ஏ.

பூங் :—பாதகமில்லையே ! சொத்து ?

சிவ :—படிப்புதான் சொத்து.

பூங் :—வேலை கிடைக்கவேண்டுமே !

சிவ :—ரயில்வேயில் பார்த்துக்கொண் டிருக்கிறும் ; சிபாரிசு உள்ளதாம் ; ஆனுல் வரதட்சிணை........

பூங் :—வரதட்சிணையா ?

சிவ :—ரூ. 3000 கேட்கிறுன்.

பூங் :—மடக்கி வையுங்கள். வரதட்சிணை கொடுக்க நமக்கு இல்லை. இந்நாட்டில், பெண்ணை இப்படி இழிவு செய்யும் கலியாணக் கூலியை ஒழிப்போம். ஆணும், பெண்ணும் சரி சமமாக வாழ நினைப்போம். அடுத்தது ?

சிவ :—இது, தஞ்சாவூர். கார்காத்த வேளாளர் சிதம்பரநாத முதலியார் மகன், சிவக்கொழுந்து ஜாதகம். தலைக்கரை நிலம் 20 வேலியுள்ளது. ஆனுல், பையன் முதல் தாரத்தைப் பிறந்த வீட்டிற்கு ஓட்டி விட்டான். இரண்டாந்தாரமாக நமது பெண்ணைக் கேட்கிறுன்.

பூங் :—நடவாது ; மனைவியுள்ளபோது, இன்னொரு கலியாணம் செய்துகொள்ளும் வழக்கம் கொடியது. கொண்ட மனைவியைச் சரிவர நடத்தத் தெரியாதவன் ஆண் பிள்ளையா ? நமது பெண்ணையும் அப்படித்தானே நடத்துவான் ? என் அருமை மகள் சக்களத்தியாக வாழ விரும்பேன். மூன்றுவது ?

சிவ:—இது திருச்சி. பிள்ளைக்கு வீடு நிலம் உண்டு; பெரிய குடும்பம். முதல்தாரம் இறந்துபோனாள். வயது 45. இரண்டாந்தாரமாகக் கேட்கிறார். இரண்டு குழந்தைகள் உண்டு.

பூங் :—இன்னுமென்ன ? வயதிற்கேற்ற மனைவி வேண்டும். சுமார் 10 வயதுக்குமேல் தாரதம்யம் இருக்கக் கூடாது. ஈடில்லாது கட்டுவது, இளம் பெண் களைக் கொலை செய்வதாகும். இது வேண்டா. மேலே ?

சிவ :—சென்னை முத்யாலுப் பேட்டை - நெல்லை யப்பன், வக்கீல், ஆள்மெலிவு, திடமில்லை. வரும்படி விவரம் தெரியாது. வயது 25 தான்.

பூங் :—ஆள் திடமாயிருக்கவேண்டும். எலும்புந் தோலுமாயிருப்பவர், உடலைத் திடப்படுத்திக்கொண்டு தான் பெண்ணைக் கேட்கவேண்டும். கல்வியைப்போல உடலுறுதியும் அவசியம். மற்றொரு ஜாதகம்.... ?

(கதவுச் சத்தம்) பாருங்கள் யாரென்று........

சிவ :—சிவோஹம் ! (எழுந்து செல்லல்)

பூங் :—ஈசனே, என்னென்னவோ நினைக்கிறோம். உன் சித்தம் எப்படியோ அப்படி நடக்கும்.

[வருதல்: சிவக்கொழுந்து, தடபுடல் கிட்டு. கிட்டு வெகு முறுக் காக உடை யணிந்திருக்கிறான்]

சிவ :—வாருங்கள் ! பூங்கோதை, பலகை யெடுத் துப் போடு ; தாமோதரன் காரியஸ்தர்.

ஐயங்கார்வாள், உட்காருங்கள். பேச்செடுக்கப் போனேன் ; நீங்களும் வந்தீர்கள் ; சுபசகுனம்.

கிட்டு—முதலியார்வாள், இனி உங்களுக்கு எக் கவலையுமில்லை. சிவபக்தி கைமேல் பலித்தது.

சிவ :—எல்லாம் சிவன் செயல். தாகத்திற்கு ஏதாயினும்........மோர்........

கிட்டு :—போஸொடோ (Bossotto)வில் சாப் பிட்டுத்தான் வந்தேன். அண்ணாத்தையைப் பங்களா வுக்கு அனுப்பிவிட்டு, நான் தங்களைப் பார்க்க வந்தேன்.

சிவ :—தாமோதர முதலியார் சௌக்யமா ?

கிட்டு :—அது ராஜாங்கம் ; நடக்கிறது.

சிவ :—தாண்டவராய முதலியார் வமிசத்திற்கு ஒரு பிள்ளை, க்ஷேமமாயிருக்க வேண்டும். புது வீடு எப் படியிருக்கிறது ?

கிட்டு :—வீடா ? 'தாமோதர விலாஸ்' என்று சொல்லுங்கள். எல்லாம் சலவைக் கட்டிடம் ; மூன்று மாடி ; கீழே காவல் ; சேவகர், காரியஸ்தர் கள் - எல்லாம் ஆபீஸ் தினுசில் ; இரண்டாவது மாடியிலே எஜமான் தர்பார். மூன்றாவது மாடியிலே எஜமானுக்கு வேண்டிய காரியங்கள் ; சௌகரியங்கள் ; யாரும் அங்கே மூச்சுவிடக்கூடாது. டெலிஃபோன் வைத்துக் காரியம் நடக்கிறது. கைகட்டி, வாய் பொத் தித் தான் எஜமான் முன்னே வரவேண்டும். பெரிய பெரிய மிட்டதார்களெல்லாம், 'திமுதிமு' வென்று மோட்டாரில் வந்த மணியம், போன மணியமாயிருக் கின்றனர். அவர்களுக்கெல்லாம் சரியாக உபசரணை நடக்கிறது. எஜமானுக்கொரு ரோல்ஸ் ராய் கார், சிப்பந்திகளுக்கு ஒருஃபோர்டு கார் உள்ளன. முதலியார்

பேடாப் புறப்பட்டால், சோழ மகாராஜா தினுசிலே தான் இருக்கும்.

சிவ:—இதற்கெல்லாம் ஏராளமான செலவாகுமே.

கிட்டு:—செலவா? கர்ணன் கெட்டானே! வீட்டுக் கார்பார் முழுதும் தாஸனிடம் உள்ளது. எஜமான் தானும் தாட்டாகச் சாப்பிட்டு, வந்தபேர் போன பேருக்கும் தட்டில்லாமல் அள்ளிவிடுகிறார். உடை உடுப்பு, நகை வகை யெல்லாம் ஏராளம்; கை தாராளம். எத்தனைப் பாட்டய்யாக்கள் அவர்மீது கவிகளும் கீர்த்தனங்களும் பாடிச் சன்மானம் பெற்றுச் செல்லுகிறார்கள் தெரியுமா? கலியாணம், கார்த்திகை யென்று எத்தனை பேர் யாசகம் வாங்கிச் செல்லுகின்றனர் தெரியுமா? அதென்ன சரபோஜி மஹாராஜா தர்பாராகத் தானிருக்கிறது: அண்ணாத்தை மனதிலே ஒன்றுபட்டால், அது எப்படியாவது செய்தாகவேண்டும். அவர் அவ்வளவு காரியப் பிடிவாதமுள்ளவர்.

சிவ:—அதெல்லாஞ் சரி; இந்த வருஷம் பரீக்ஷை என்னவானது?

கிட்டு:—முதலியார்வாள், பட்டணமாளும் பகதூருக்குப் படிச்சுவர் இடிந்ததுதானா பெரிது! பெரிய செல்வச்சீமான் பிள்ளை, தாம் படித்தால் பள்ளிக்கூடத்திற்கு ஒரு கௌரவமாகுமே என்று மனது வைத்தார். இந்தப் படிப்பும் பள்ளியும் அவருக்கு லட்சியமா? எஜமான் யோசனை யெல்லாம் அபாரமானது. படித்து வேலையில்லாது திண்டாடும் வாலிபர்களுக்கெல்லாம் கதிமோட்சமாக ஒரு பெரிய

ஆகாசக் கம்பெனி நடத்த ஏற்பாடு நடக்கிறது. அமெ ரிக்காவிலே, ஹென்ரி போர்டு, மோட்டார் பண்ணிக் கோடீஸ்வரனானன். இந்தியாவிலே நமது மிட்டாதார் தாமோதர முதலியார் ஆகாசவிமானமாகப் பண்ணித் தள்ளி, பணம் பணமாகக் குவிக்கப்போகிறார் பாருங் கள். அதற்கென்று ஒருதரம் மேற்கே போய் வரவும் உத்தேசம். பிரபு நினைத்தால் எதுதான் ஆகாது?

முதலி :—சந்தோஷம்.

கிட்டு :—அதற்குள்ளா? பின்னால் பாருங்கள், சுக்கிர திசை அடிக்கிறது எஜமானுக்கு.

முதலி :—கலியாண விஷயமாக ஏதாயினும்........

கிட்டு :—அதைத்தான் பேச வாயெடுத்தேன். சுபம், சுபம்! முதலியார்வாள்! காவூர் ஜமீந்தார், கோவூர் மிட்டாதார், தானூர் லட்சப் பிரபு தேனப்ப முதலியார் இன்னும் பெரிய பெரிய இடங்களிலிருந் தெல்லாம் ஜாதகங்கள் வந்து குவிகின்றன. ஏராளமான சீரும் செல்வமும் தருவதாகச் சொல்லி வரன் கேட் கிறார்கள்.

பூங் :—அதனால், நாம் மனப்பால் குடிப்பதில் பய னில்லை.

கிட்டு :—கேளுங்கள் அம்மா; தங்களுக்கு நல்ல தசாநாதன் வந்திருக்கிறது. பூர்வ புண்ணியத்தால், தங்கள் சிவபக்தி சுக்கிரதசையாகத் திரும்பியது.

முதலி :—ஐய, எனது தேவாரமும், சித்திரமும் அரைக்கஞ்சிக்குக்கூடக் கட்டவில்லை. கூரை வீடு; அதில் வருணனும், சூரியனும் வாசம்; எனக்கெப்படிச்

சுக்கிரதசை வரும்? அந்தத் தருமப்பிரபு தயவு வைத்தால் ஏதாயினும் செய்யலாம்.

கிட்டு :—பிரபு பார்வை திரும்பினால், நாளையே இங்கே ஒரு தாஜ்மஹால் கிளம்பாதா ! எஜமானுக்குத் தங்களிடம் அபிப்பிராயம் விழுந்திருக்கிறது. சுத்தமான குடும்பம், யோக்கியமான சதிபதிகள் என்று.

முதலி :—அப்படியா ! இங்கே அவர் எட்டிப் பார்ப்பதுகூடக் கிடையாதே !

கிட்டு :—முதுகாறக் கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துக்கொண்டிருக்கிறார். முதலியார்வாள், உற்றுக் கேளுங்கள்: வசந்தசுந்தரியின்மேல், பிரபுவுக்கு அந்தரங்கத்தில் விருப்பம்.

சிவ :—சிவோஹம் ! அவ்வளவு பாக்கியம் எனக்கு எங்குக் கிடைக்கும் ?

கிட்டு :—இதோ நான் வந்தபோதே கிடைத்து விட்டது. சென்னையில், அவர் தங்கள் செல்வியைப் பார்த்திருக்கிறார்.

முதலி :—அரசனுக்கும் ஆண்டிக்கும் எட்டுமா ? அவர் தன்மை யென்ன ? எனது எளிமை யென்ன ? இது நடக்கிற காரியமா ?

கிட்டு :—பகதூர் இருக்கிறேன் ; நாளைச் சாயங் காலம் 4 மணிக்கு, அண்ணா சாவகாசமா யிருப்பார். இந்தாருங்கள் ரூபா 10. நல்ல வேஷ்டி வாங்கி உடுத்திக் கொண்டு, மரியாதைக்கு ஏதாயினும் சுபவஸ்துக்களை வாங்கிக்கொண்டு, பங்களாவுக்கு வாருங்கள். அழைத்து வர, சேவகனை அனுப்புகிறேன். பிரபுவிடம் மனதை

விட்டுப் பேசுங்கள். நான் பக்கத்தில் இருந்து காரியத்தை முடிக்கிறேன்.

முதலி :—சிவன் செயல், நடக்கட்டும். (மணி 10 அடிக்கிறது)

கிட்டு :—நல்ல சகுனம். நான் போய்வருகிறேன். நாளை 4 மணிக்கு ஆள் வரும்.

முதலி :—வந்தனம். காரியத்தை முடித்துவைத்தால் நன்றி மறவேன்.

கிட்டு :—பகதூர் இருக்கிறேன் !

(போகிறார் ; முதலியார் வழியனுப்புகிறார்)

## காட்சி 2

[தாமோதர விலாஸ்; இரண்டாவது மாடியில் அலங்காரக் கூடம். நிலைக்கண்ணாடி வைத்த பீரோ ; 2 வெல்வெட்டு சோபாக்கள் ; வட்டமேஜையைச் சுற்றி 4 வெல்வெட்டு நாற்காலிகள். தாமோதரன் ஒரு சோபாவில் சாய்ந்திருக்கிறான்]

கிட்டு :—அண்ணாவுக்குச் சமானம் இராவணன் தான் !

தாமோ :—அந்தப் பயல்கள் வராவிட்டால், நான் கலியுக ராவணனா யிருப்பேன்.

கிட்டு :—முக்காலும் உண்மை ; இந்தப் பயல்கள், கோட்டான் மாதிரி, ஊரில் விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாமோ :—எமன்கள், எப்படியோ வந்து விட்டார்களே ! எவ்வளவோ தாஜாப்பண்ணித் தந்திர

மாகக் கொண்டு போனோம். இந்த லாவண்யம் வழி யில் இறங்கியிருக்கக் கூடாது.

கிட்டு :—நியாயம்! பெண்ணின் வாயிலும் துணி அடைத்திருக்க வேண்டும்.

தாமோ :—அவள் அழகில் என் உயிர் வைத்திருந் தேன். அவளை எதுவும் செய்ய மனமில்லாமல் திரும் பினேன்.

கிட்டு :—அண்ணுவுக்கு அவ்வளவு தயாளகுணம் இல்லாவிட்டால், லைசென்ஸில்லாத நாலு துப்பாக்கியும் இப்படிக் குருவி சுடுமா ?

தாமோ :—அன்று வங்களாக்கடலில் 4 பிணங் கள் மிதந்திருக்கும் என்று சொல்.

கிட்டு :—புலி, என்ன சாமானியமா ?

(வருதல் சேவகன்)

என்ன ?

சேவகன் :—சாமி, யாரோ தமிழ்ப் புலவராம், பள்ளிக்கூடமாம், தருமங் கேட்கிறார் ; இதோ சீட்டு....

கிட்டு :—(சீட்டை வாங்கி வாசிக்கிறான்)

“ திருச்சி, செந்தமிழ் மந்திரம் தலைவர், இளமுருக ஞர், விண்ணப்பம் : தமிழ் - தமிழர் - தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்காக, ஒரு பெரிய தமிழ் மந்திரம் நிறுவி, அதில் எல்லாக் கலைகளும் பயிற்றி வருகிறோம். அதற்குத் தங்களைப் போன்ற செல்வர் ஆதரவை வேண்டுகிறோம்.”

தாமோ :—சரி போதும்....

கிட்டு :—ஆம் ; இந்த விஷயமெல்லாம் கேட்டால் அண்ணாவுக்குத் தலை வலிக்கும்.

சேவ :—நல்ல புண்ணியவான், தருமங்கேட்கிறார். கூட இரண்டு பேர் வந்திருக்கிறார்கள்.

தாமோ :—எனக்குச் சொல்லிக் கொடுக்கிறாயோ ? இவர்களையெல்லாம் யார் உள்ளே விட்டது ?

கிட்டு :—வந்தார்கள்.

தாமோ :—கேட்டுக் கதவை மூடி வைப்பதற் கென்ன ?

சேவ :—வந்துட்டாங்க....

தாமோ :—டாம் ! அந்த ரோஸ் என்ன செய்கிறது?

சேவ :—தூங்குதுங்க !

தாமோ :—தடியா லெழுப்பிச் சூ விடுவதற் கென்ன ? உன் தொண்டையெங்கே ? மடையா! இனித் தெரிந்துகொள். தருமம், யாசகம், பிச்சை, சந்தா, கடன் பாக்கி, என்று வந்தால், தந்திரமாக நாயை அவிழ்த்துவிட வேண்டும். நீயும் கண்டிப்பாக அவர் களைப் போகச் சொல்லவேண்டும். தெரியுமா ? உன்னை எதற்காக வைத்திருப்பது....டாம்....போ....

கிட்டு :—கேட்டாயா எஜமான் சொல்வதை ? இனிமேல் உஷாராயிரு போ....

சேவ :—(மனதுள்) அநியாயம், அநியாயம் ! இந்த அதிகாரம் எத்தனை நாள் நடக்குமோ, தெய்வமே !

(போகிறான்)

தாமோ :—நம் ஆட்கள் தான் உள்ளே வரலாம். இதரர் தலைகாட்டக் கூடாது.

கிட்டு:—போடண்ணு தடையுத்தரவு; இராவணன் கோட்டையிலே தருமம் புகக்கூடாதாம். அண்ணு கோட்டையிலே ஆள் கூடப் புகக்கூடாது. இந்தப் பயல்கள் வட்டம் போட்டுக்கொண்டே யிருப்பார்கள்.

(வருதல் சேவகன்)

சேவ :—எசமான், மளிகைக்கடை சுப்பையா; சவுளிக்கடை ராவுத்தர் ; பாக்கி வசூலிக்க வந்திருக்காங்க.

தாமோ :—(கோபமாக எழுந்து) டாம், நான்ஸென்ஸ், ஃபூல்!

சேவ :—எசமான், பற்றுவழிக்காரர்களுக்கு என்னுல் பதில் சொல்ல முடியுமா ?

தாமோ :—எசமான் முகாம் போயிருக்கிருர், வரப் பத்து நாளாகும் என்று சொல்.

சேவ :—எசமான், நான் பொய் சொல்ல மாட்டேன்.

தாமோ :—அரிச்சந்திராவதாரமோ? சாமான் செறித்துப் போச்சு ; சவுளி கிழிந்து போச்சு ; போகச் சொல்.

சேவ :—வாங்கியதற்குப் பணம் தர வேண்டாமா ?

தாமோ :—இடியட், இப்படித் தான் சேவகம் பார்ப்பதோ ? டாம் ! 'இல்லை' என்று சொல்.

சேவ :—எசமான் கண்டிப்பு ; என்னுல் பொய் சொல்ல முடியாது. ஆறு மாதம் எவ்வளவோ அநியாயங்களைப் பொறுத்து வேலை பார்த்தும் பலனில்லை. என் சம்பளப் பாக்கி, பைத்தாறு அறுபது ரூபாய் தந்து

தயை செய்யுங்கள். வேறெங்கேயாவது போய்ப் பிழைத்துக் கொள்ளுகிறேன்.

தாமோ :—என் முன்னே நில்லாதே ; போ ; டிஸ்மிஸ் ; கிட்டு, வேறே ஆளைப் பார்.

கிட்டு :—பார்த்தாயா சங்கிலி, எஜமான் நோக்கந் தெரியாமல் இப்படிப் பேசலாமா? அதென்ன சாமானியமான இடமா........போ ! பொறும்மையாயிரு ; எஜமானை நம்பு.

சேவ :—(அழுது கொண்டு, தலையிலடித்துக் கொண்டு போகிறான்) ஐயோ விதியே !

கிட்டு :—சரி அண்ணா, இனி நமது காரியம் பார்ப்போம்.

தாமோ :—சிவஞானம் என்ன சொன்னான் ? அவன் பழைய காலப் பேர்வழி ; தேவாரப் பூச்சி ; என் தகப்பனார் அவனிடம் தேவாரம் கேளாது சாப்பிடமாட்டார். எனக்கு மட்டும் 'தேவாரம் தாவாரம், முத்தி நெறி, பத்தி நெறி' யென்றால் தலைவலிக்கும்.

கிட்டு :—அண்ணா தினுசு அலாதி ; இது கலிகாவதாரம் !

தாமோ :—சம்மதித்தானா ?

கிட்டு :—சம்மதமா? அண்ணா மகிமையை வர்ணித்தேன் ; ஆள் அரண்டு போனான். 'குட்டிச் சுவரும் கூரை வீடும், கந்தையும், அரைக் கஞ்சியுமா யிருக்கிறீரே, எஜமான் ஒரு பார்வை பார்த்தால், இந்திர லோகமே இங்கு வந்து குதிக்காதா ?' என்றேன். ஆள் மகிழ்ந்து போனான்.

தாமோ :—ரூபா 100 தந்தாயா ?

கிட்டு :—ஆமாம்; சமூகத்திற்குத் தக்க சிறப்புடன் வரவேண்டும் என்றேன். 4 மணிக்கு அவசியம் வருவார்.

தாமோ :—ஆள் மயங்கிப் போக வேண்டும்; எப்படி உடுக்கலாம்.

கிட்டு :—எஜமானுக்கு நான் செய்யும் அலங்காரத்தில் மன்மதன்கூட மயங்கி விழுவான்.

(சேவகன் வருதல்)

சேவ :—எஜமான்! அம்மா வந்திருக்காங்க.

தாமோ :—உடனே வரட்டும். நீ போய் வாசலில் கவனமாயிரு. நாலு மணிக்கு, சிவஞான முதலியார் வருவார் : 50 வயதுக் கிழவர். அவரை வெகு மரியாதையுடன் உள்ளே அழைத்து வரவேண்டும். பங்களாவைச் சுற்றிக் காட்டவேண்டும். 'எஜமான் மகா தருமவான், நல்ல மனசு, செல்வச் சீமான், கல்விக் கடல்' என்று புகழ்ச்சியாகப் பேசவேண்டும். இங்கே கிராமஃபோன் வைப்பேன். சத்தங் கேட்டதும் உள்ளே அழைத்துவர வேண்டும். போ....

(சேவகன் போதல்) (வருதல் லாவண்யம்)

லாவண் :—கும்பிடுறேனுங்க!

(முறுவலுடன் நாணி நிற்றல்)

தாமோ :—வா, என் இன்பக் கிளியே. (எழுந்து முதுகை வளைத்து நடந்து, கைகுலுக்கி முத்தமிட்டு, தன்னருகே அமர்த்துகிறான்) இரு, உனக்கு அது கொண்டு வருகிறேன். (முதுகை வளைத்துச் செல்லல்)

அப்பா முதுகு........ (முகம் சுளித்தல்)

கிட்டு :—அண்ணாவுக்குச் சிரமம் வேண்டாம்.

(தான் போய் விஸ்கி எடுத்து வருகிறான்)

லாவண் :—(கோப்பையில் ஊற்றித் தாமோதரனுக்குத் தருதல்) முதுகு வலி எப்படியிருக்கிறது ?

தாமோ :—நிமிர முடியவில்லை.

கிட்டு :—தடிப்பயல்! 22 வருஷமாகச் சாப்பிட்ட பேளாஹூளியின் பலத்தையெல்லாம் அண்ணா முதுகில் வைத்து இறுக்கிவிட்டான்.

தாமோ :—அந்தக் குண்டுராயனை ஊமைக் குத்தாகக் குத்திக் கொல்லாவிட்டால், நான் தாமோதர முதலியாரில்லை.

கிட்டு :—அந்தச் சாமனுக்குப் பீமனாக, இதோ பஹதூர் இருக்கிறேன் !

தாமோ :—(குடித்து) லாவண்யம், நமது காரியத்தைக் கெடுத்த அந்த ஜயகோபாலனை நீதான்........அது வைத்து........

லாவண் :—இது இருந்தால் (கையைச் சுண்டி) எல்லாம் நடக்கும்.

தாமோ :—இந்தா ரூபா 50 வைத்துக்கொள் ; நடத்து வேலையை. உன் ஷோக்கிற்கும் தளுக்கிற்கும் தப்பும் ஆண்பிள்ளை உண்டா ?

கிட்டு :—ஜக்கம்மா, பைத்தியானந்த பஸ்பம் பண்ணியிருக்கிறாளண்ணா.

தாமோ :—ஆமடி, ஒருநாள் இரவு அவனை மயக்கி, பாலில் ஒரு சிமிட்டா தட்டிக் கொடுத்தால், ஆள் உன்னை விடமாட்டான். பலமாகப் பைத்தியம்பிடிக்கும். பிறகு நான் ஒரு மூச்சுப் பார்க்கிறேன்.

லாவண் :—மஹாராஜா மனதை நிறைவேற்றத் தானே அடியாள் காத்திருக்கிறேன்.

தாமோ :—என் ரதியே, நீதான் என் இன்பம்.

(மணி 3 அடிக்கிறது)

கிட்டு :—அண்ணா, அலங்காரம் பண்ணிக்கொள்ள வேண்டும். லாவண்யம், இன்று எஜமானை மன்மதாகாரமாக்கவேண்டும். ஒரு முதலியார் வருகிறார்.

தாமோ :—வெகு ஜோரா யிருக்கவேண்டும். பிரான்ஸிலிருந்து முத்துப் பல், முகச் சாயங்களெல்லாம் வந்திருக்கின்றன.

லாவண் :—என் இன்பக் காதலரை இந்திரனாக்குகிறேன்.

கிட்டு :—நீ மனது வைத்தால், குரங்கை மயிலாக்குவாய்; ஆனைத் தோலாக்குவாய்; தோலை ஆளாக்குவாய்........

தாமோ :—உடுப்பறைக்குப் போவோம்...........

(முதுகை நெளித்து நடக்கிறான்)

கிட்டு :—அண்ணா, முதுகு பத்திரம். நில்லுங்கள்; லாவண்யம், நீ கைலாகு கொடு; நான் முதுகைப் பிடித்துக்கொள்ளுகிறேன். உம், இப்போது அண்ணா நடக்கட்டும்; மெல்ல, பூப்போலே! (போகிறார்கள்)

## காட்சி 3

[தாமோதரன் வெகு முறுக்காக ஒரு வெல்வெட்டுச் சாய்மானத்தில் இருக்கிறான். புக்மஸ்லின் உடை; பட்டுச் சட்டை; ஜரிகைத் தலைப்பாகை; முன்னால் தீக்கோழி இறகு; மூக்குக்கண்ணாடி; காதில் வைரக்கடுக்கன்; பத்து விரலிலும் மோதிரம்; ஒரு கையில் தங்கப்பிடிபோட்ட பிரம்பு; மற்றொரு கையில் ரோஜாநிறக் கைக் குட்டை; லாவண்யம் வெற்றிலை மடித்துத் தருகிறாள். கிட்டு, ஆளை நகாசு பண்ணுகிறான்]

[மேஜையில் கிராமபோன் உள்ளது]

கிட்டு :—பலே மாப்பிள்ளை! அண்ணா எப்படி!

லாவண் :—இரதிதேவி கண்டால், காமன் எரிந்ததற்கு அழவே மாட்டாள்; இந்த மன்மதனையே மறுமணம் செய்து கொள்வாள்.

கிட்டு :—சரியான உபமானம்! நீ கைவைத்தால் ஆள் அனங்கனாவான்.

தாமோ :—கண்ணே இன்று முகம் எப்படி?

லாவண் :—வெள்ளைக்கார வேஷத்தைவிட நன்றாயிருக்கிறது.

தாமோ :—வேண்டுமென்றே நாகரிக வஸ்துக்களை பிரான்ஸிலிருந்து வரவழைத்தேன். கிட்டு, சிவப்பாயிருக்கிறேனா?

கிட்டு :—சூர்யகோடிப் பிரகாசம் தோற்றுப் போகும்! லாவண்யம் அலங்காரம் செய்தால், கேட்க வேண்டுமா? அவள் அன்னத்தை அண்டங் காக்காயாக்குவாள்; அண்டங் காக்காயை அன்னமாக்குவாள்; அவள் சாயத்திலே கைகாரி.

தாமோ :—நிசந்தான், நமது லாவண்யமல்லவா !
(முத்தம்)

கிட்டு :—ஆ ! மீசை கலைந்து போனதே ! (வாஸலைன் போட்டு, மீசையைத் திருகி விடுகிறான்) சரி மணி 4-45 ஆனது.

லாவண் :—உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன் ; வீட்டிலே சாமான் கிடையாது. வாங்கணும் ; டாக்டர் ஐயா, பணம் கேட்கிறார். சமூகத்தை நம்பிப் பத்தினி விரதம் பூண்டிருக்கிறேன்.

தாமோ :—கவலையென்ன ? இந்தா ரூபா 50 ; தாராளமாகச் செலவு செய். போய் வா.

லாவண் :—தருமராஜா, கர்ணாவதாரம். வந்தனம்!
[போகிறாள்]

தாமோ :—கிட்டு, வாசலில் எல்லாம் ஒழுங்காயிருக்கிறதா ?

கிட்டு :—சங்க்லி ! (சங்கிலி வருதல்)

சங்கிலி :—வில்லை சரியாய் மாட்டிக்கொள்.

தாமோ :—டாம் ! வந்ததும், 'எஜமான்' என்று கும்பிடாமல், உலக்கைத்தடி மாதிரி நிற்கிறாயா ?

சங்கிலி :—எசமான், சேவகன் !

தாமோ :—வாசலில் நமது ரோல்ஸராய் காரை நிறுத்தி வைக்கவேண்டும். முதலியார் கேட்டால், எஜமான் கலெக்டர் விருந்திற்குப் போகப் போவதாகச் சொல்ல வேண்டும், போ.

சங்கிலி :—(முணுமுணுத்து) இந்தப் புளுகு புளுக நம்மாலாகாது ! (செல்லல்)

தாமோ :—கிட்டு, முதலியாரைத் தாஜாப் பண்ணிப் பெண்ணை மெள்ள....

கிட்டு :—புலியிருக்கும்போது அண்ணுவுக்குப் பயமில்லை. வெள்ளையப்பன் வேலை செய்தால் எல்லாம் சரியாய்வரும்.

தாமோ :—இந்தா ரூபா 40, வைத்துக்கொள் ; நடத்து வேலையை !

கிட்டு :—(வாங்கிக்கொண்டு) பக்கா வேலை செய்கிறேன். அண்ணு, திண்டை விட்டு முதுகை எடுக்கக் கூடாது.

தாமோ :—சரி ; முதலியார் சிவபக்த ராயிற்றே. எனக்கும் பக்திக்கும் ஏழாம் பொருத்தமே. என்ன செய்வது ?

கிட்டு :—இதோ கிராமபோன். "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற...." ஆ....ஆ....

(ஆலாபனம் செய்கிறுன்)

தாமோ :—சரி. நீ தலையாட்டும்போது நான் தலையாட்டுகிறேன்.

(நாய் குலைக்கிறது: 'வள், வள் வள், ஹார் வப் ! ஊ...ள்')

அடே சங்கிலி ! (வருதல் சங்கிலி)

தாமோ :—ரோஸ் ஏன் குலைக்கிறது ? யாசகரா ?

சங்கி :—இல்லை ; சிவஞான முதலியார் வந்திருக்கிறுர்.

தாமோ :—டாம், இப்போதுதான் நாயைக் குலைக்க விடுவதோ ?

சங்கி :—நானென்ன செய்வேனுங்க ! வந்தவரைப் பார்த்துக் குலைப்பதும், கடிப்பதும் அதற்கு ராப்தாவாய்ப் போச்சுதுங்க.

கிட்டு :—டாம் ! அதற்கு ஏதாயினும் போட்டு அடக்கு.

சங்கி :—இதேதுடா வம்பு ! நாய்க்கு மேலே புலியா யிருக்கிறது. (முணுமுணுத்துச் செல்லுகிறான்)

தாமோ :—நான் எப்படி யிருக்க வேண்டும் ?

கிட்டு :—திண்டில் அண்ணு வலது புறமாகச் சாய்ந்து கொள்ளட்டும் ; இதோ டைம்ஸ் பத்திரிகை. அதில் ஆகாய விமானப் படம் உள்ளது. அந்தப் பக்கத்தை ஆழ்ந்து படிப்பதாகப் பாவனை செய்யட்டும். நமது ஆகாசக் கம்பெனியைப் பற்றி முதலியாரிடம் சொல்லியிருக்கிறேன். பேச்சில் அதுவும் வரும் ; கவனம். என் வார்த்தையைக் கவனித்தால் அண்ணுவுக்குப் பதில் அதிலிருக்கும். இனி என் வேலை.

தாமோ :—பெண் விஷயம் முடிவாகட்டும்.

கிட்டு :—பிளேட்டு வைக்கட்டும்.

(தாமோதரன் பிளேட் வைக்கிறான்; கிராமஃபோன் பாடுகிறது)

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் ; பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்;மத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்

மருவுபெண் ணாசையை மறக்கவேண்டும்; உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும்; நின்கருணை நிதிவேண்டும்; நோயற்ற
வாழ்வினான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
ஷண்முகத் தெய்வ மணியே!

[இப்பாட்டு இரண்டாவது வரி பாடும்போது, கிட்டு, சிவஞான முதலியாரை அழைத்து வருகிறான்]

சிவ :—சிவோஹம்! சிவ ஷண்முகா!

(தாமோதரன் பத்திரிகையில் ஆழ்ந்திருக்கிறான்)

கிட்டு :—(அடக்க வொடுக்கமாய்ப் பேசுதல்) எஜமான் ஆகாசக் கம்பெனியைப் பற்றியே பத்திரிகைகளைப் படித்து யோசிக்கிறார். இப்படி உட்காருங்கள். (தாமோதரனிடம் மெல்ல) முதலியார்வாள் வந்திருக்கிறார்.

தாமோ :—(மதிப்பாகத் திரும்பி, செல்வச் செருக்குடன் மூக்குக்கண்ணாடிப் பார்வை பார்த்து) ஹல்லோ! வாருங்கள்! பார்த்து வெகு நாளாயிற்று!

சிவ:—ஓம் சிவம்; பாட்டு நடக்கட்டும். (முதலியார் பாட்டைச் சுவைக்கிறார். கிட்டு தலையாட்டும்போது, தாமோதரனும் மண்டையாட்டுகிறான். பாட்டு முடிகிறது)

கிட்டு :—பாட்டு எப்படி முதலியார்வாள்!

சிவ :—வள்ளலார் வாக்கு தெள்ளமுது. உலகிற் கெல்லாம் சமரஸவழி இப்பாட்டிலுள்ளது!

கிட்டு :—இந்தப் பாட்டை உருவத்திலே பார்க்க வேண்டுமானால், இதோ சமூகத்தில் பார்க்கலாம்.

சிவ :—அதிலென்ன தடை? தாண்டவராய முதலி யாருக்கு இத்தனை குணங்களும் இருந்தன. அவர் மகா பக்திமான். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் இவை மனப்பாடம். அடியேனே அவருக்குப் பாடஞ் சொல் லித் தருவது. அவர் கை கற்பகம்; வாய், சொன்ன சொல் மாறாது. அவர் வீட்டில் எப்போதும் அடியார் கூட்டம் இருக்கும்.

கிட்டு :—இவ்விடத்திலும் அப்படியே. வடிகட்டின அடியார்தாம் இங்கே கிட்ட வரமுடியும்.

சிவ :—புலிக்குப் பிறந்தது எலியாகுமா? தகப்ப னார், பழைய வீட்டில், பெரியபுராணச் சித்திரம் எழுத ஏற்பாடு செய்தார். அடியேனே அவர் விருப்பத்தை முடித்தேன்.

கிட்டு :—இங்கேயும் பேஷாய்ச் சித்திரம் எழுதுங் கள். முதலில் எஜமானைப்போல் எழுதி, படக்காட்சிக்கு (Art Exhibition) அனுப்பினால், முதற் பரிசு உமக் குத் தான்.

தாமோ :—காலட்சேபம் எப்படி நடக்கிறது?

சிவ :—வேலை யகப்படுவது கடினமாயிருக்கிறது; தாண்டவராய முதலியாருக்குப் பிறகு கஷ்ட ஜீவனந் தான்.

தாமோ :—அடாடா, ஒரு வார்த்தை சொல்லப் படாதா? எத்தனையோ பேருக்குத் தான தருமம் நடக்கிறது. எத்தனையோ கலாசாலைகளுக்கு நன் கொடை தருகிறேன். தங்களுக்கு வேண்டியது நடக் குமே!

சிவ :—இன்று தான் கற்பக நிழல் கிடைத்தது. இனிப் பஞ்சமில்லை. தகப்பனுரே எனக்குக் கலியாணம் செய்துவைத்தார் ; அந்தச் சிறு வீடும் கட்டித் தந்தார்.

கிட்டு :—அந்தப் புண்ணியந்தான் தங்களுக்குச் சுக்கிர திசை கொணர்ந்தது. பிரபுவின் பார்வை தங்கள் மனையில் விழுந்தது. இனி யோகந்தான்.

சிவ :—ஏதோ சிவன் செயல் ! நடக்கட்டும்.

கிட்டு :—அதற்கு மேலே பிரபுவின் செயல் நடக்கும். வசந்த சுந்தரியை அழைத்து வந்து நாள் பாருங்கள்.

சிவ :—இன்று காலை ஒரு கடிதம் வந்தது.

கிட்டு :—வருவதாகவா ?

சிவ:—இல்லை ; சென்ற வாரம், கோகலே ஹாலில் பிரசங்கம் செய்தாளாம். அது முடிந்தபின், யாரோ மோசடியாக அவளை மோட்டாரில் ஏற்றி, சாந்தோம் கடற்கரையில் கொண்டு போய்....பயமுறுத்தினுர்களாம். ஜயகோபால் என்பவர் அவளைக் காப்பாற்றினுராம். துப்பு விசாரிக்கிருர்களாம்.

தாமோ :—(முகம் மூன்றும் பேஸ்து பிடிக்கிறது) அது தங்கள் குமாரியா ? ஊரிலே வதந்தி........ முதலியார்வாள், உம்மை ஒன்று கேட்கிறேன் : தங்கள் பெண்ணை ஏன் தூக்கிச் சென்றுர்கள் ?

சிவ :—காமக்கொழுப்பு அப்படிச் செய்கிறது.

கிட்டு :—அப்படியல்ல ; எஜமான் அபிப்பிராயம் வேறு. தங்கள் பெண்ணுக்கு வயதாயிற்றே ; கனிந்த

கனிக்குப் பட்சிகள் வரத்தானே செய்யும். சீக்கிரம் தக்க வரனைப் பார்க்கவேண்டும்........

தாமோ :—அதுதான் நான் நினைத்தது. சரி, இராவணன் சீதையைத் தூக்கிச் செல்வானேன் ?

கிட்டு :—இதற்குப் பதில் வால்மீகியும், கம்பனும் சொல்லமுடியவில்லை. பிரபுவுக்குத்தான் அந்த மர்மம் தெரியும்.

சிவ :—இராவணன் விதிமுடிய அப்படித் துர்ப் புத்தி தோன்றியது.

தாமோ :—இல்லை ; சீதையை இழக்க, இராமனுக் குத்தான் சூர்ப்பணகையை அவமானம் செய்யத் துர்ப் புத்தி தோன்றியது. இது என் கட்சி.

கிட்டு :—சபாஷ் ! நியாயம் ! இராமன் தம்பி மூக்கறுத்தான் ; சூர்ப்பணகை அண்ணன் பழி வாங் கினான். புதிதாக ஓர் இராவணாயணம் தயாராகிறது.

தாமோ :—சீதையின் அழகுதான் இராவணனைத் தூண்டியது. அழகான பொருளைத் தனியாக வைக்கக் கூடாது.

கிட்டு :—தெரிந்ததா கருத்து ? அழகுக் கனியை அநேக பக்ஷிகள் வட்டமிட்டுக் கொண்டே யிருக்கும். சீக்கிரம் முகூர்த்தம் வையுங்கள் என்றவாறு.

சிவ :—வசந்த சுந்தரி கடிதத்தில், மேலே படிக்கப் போவதாக எழுதியிருக்கிறாள்.

கிட்டு :—படிக்கட்டுமே ; ஆகாயக் கம்பெனி விஷயமாக, சீமைக்குப் போகப் போகிறார் எஜமான். தங்கள் மகளைப் பேஷாக கேம்பிரிட்ஜில் சேர்க்கலாமே.

தாமோ :—சரக்கு நமதானல், சமைக்கிறபடி சமைக்கிரேம்.

கிட்டு :—சரியான வார்த்தை. தங்கம் கைக்கு வந்தால், பிறகு வேலைப்பாடு செய்யத் தட்டானிருக்கிருன். எஜமானிடம் வந்த தங்கம், உருக்கி வார்த்த சொக்கு நகையாக மாட்டாதா! முதலியார்வாள் ஒரே பேச்சு: இந்தாரும், இதில் பணம் உள்ளது. வீட்டிற்குப் போய் எண்ணிக் கொள்ளும். நேராகப் பட்டணம் போம். பெண்ணை அழைத்து வாரும். முகூர்த்தம் வையும். இந்தப் பங்களாவில் ஸ்வஸ்தமாக அட்டணக்கால் போட்டுக்கொண்டு 'நாமார்க்கும் குடியல்லோம்' பாடும்.

சிவ :—அவள் நோக்கத்தையும் அறிய வேண்டும்.

தாமோ :—என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? தகப்பனர் வழிக்கு வராத பெண் பெண்ணு? முதலியார்வாள், என் தகப்பனர் உப்பைத் தின்றிருக்கிறீர்கள். எனது தகப்பனரிடம் தாங்கள் வைத்திருந்த நேசத்திற்கு நன்றி காட்டவே, இக்காரியத்தைத் தீர்மானித்தேன்.

கிட்டு :—படே, படே மிட்டாதார்களெல்லாம், எஜமான் ஜாதகத்தை வைத்துக் கொண்டு, தவம் செய்கிருர்கள்.

சிவ :—நான் செய்த தவந்தான், தங்கள் சம்பந்தப் பேச்சு வந்தது.

கிட்டு :—சுபமஸ்து; தவம் பலிக்கட்டும். அடுத்த வருஷம், இந்தப் பங்களாவில், தங்கள் பேரன், தங்கமணி கட்டி, கிணுகிணென்று தவழட்டும், சுபமஸ்து.

சிவ :—சிவன் செயல் நடக்கட்டும். விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

தாமோ :—புறப்படுங்கள் சென்னைக்கு. கிட்டு, வழியனுப்பு.

சிவ :— ஆஹா !

கிட்டு :—வாருங்கள், சிவமயம் ; திருச்சிற்றம்பலம் ! (வழியனுப்பி வருகிறான்)

தாமோ :—நெஞ்சம் படபடக்கிறதே ; வம்பு வருமோ ? (வருதல் கிட்டு)

கிட்டு:—சந்தேகமில்லை, அண்ணாவுக்கு கண்ணாளம்!

தாமோ :—கிட்டு, துப்பு விசாரிக்கிறார்களாமே. தெரிந்து போகுமோ ?

கிட்டு :—அவன் திருத்தாத்தா வந்தாலும், அண்ணாவைக் கண்டு பிடிக்க முடியாது. வெள்ளைக்காரர் தூக்கிப் போனதாகத் தானே வதந்தி. வெள்ளை முகமூடியைத் தான் தூக்கி எறிந்துவிட்டு வந்தோமே. அச்சமில்லை - சொல், அச்சமில்லை.

தாமோ :—இருந்தாலும், உள்ளே படபடா வென்கிறது.

கிட்டு :—அச்சமில்லை ; சிங்கம் இருக்கிறேன். ஆயிரம் தரம் கூட்டிலேறி, அற்புதமாகச் சாட்சிசொல்லி, வக்கீல்களைத் திணற அடித்திருக்கிறேன். பணத்தைக் கொண்டு எத்தனையோ பெரிய பெரிய ஆட்களைப் பதம் பார்த்திருக்கிறேன். இது பிரமாதமா ?

தாமோ :—கிட்டு, உன் தைரியத்தாலே தான் துணிந்தேன்.

கிட்டு :—நம்மை நம்பண்ணு.

தாமோ :—ஒருவேளை அந்தப் பயல் கண் போட்டிருக்கிறானோ? படிப்பு வயது, பணம், எல்லாம் பொருந்தியுள்ளனவே.

கிட்டு :—அண்ணு மனம் போட்டபின், யார் கண் போட்டாலும் நடவாது!

தாமோ :—அந்தப் பயல் புத்தியைப் பேதிக்க வேண்டும்.

கிட்டு :—அண்ணு கையிலே குட்டிச்சாத்தானிருக்கிறான்.

தாமோ :—வா ; ஜக்கம்மாள் சூனியம் எந்தமட்டிலிருக்கிறதெனப் பார்ப்போம்.

கிட்டு :—புறப்படு............கார் தயார்.

(இருவரும் புறப்படல்)

---

# அங்கம் - 3

## காட்சி 1

[பூந்தோட்டம் ; மாலை 6½ மணி ; மல்லிகை, ரோஜா, ஜவந்தி, அந்தி மந்தாரை, வாடா மல்லிகை முதலிய மலர்கள் பூத்திருக்கின்றன. தோட்டத்தின் நடுவே ஒரு அலங்கார மேடை. விடுமுறையாதலால், மாணவிகள் சொந்த ஊர்களுக்குச் சென்றிருக்கின்றனர். வசந்த சுந்தரி, செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றியபின், பாடிக்கொண்டே உலாவுகிறாள். தலையில் இரண்டு ரோஜா மலர்கள் உள்ளன]

**பூரி கல்யாணி - ரூபக தாளம்**

பல்லவி

கண்களாரக் காண்பேனோ !
　காமலர்களைப் பூண்பேனோ　　(கண்)

அநுபல்லவி

புண்களாரப் புரிந்தென் னுள்ளம்
　புகுந்து நிறைந்த புண்ணியனை நான்　　(கண்)

சரணம்

செந்தாமரை முகமும்—வீரச்
　சிங்கம்போன்ற புயமும்,
அந்தண் மையுங் கொண்டென் னுள்ளம்
　அள்ளி யுண்ட வள்ள லரசை　　(கண்)

வசந்த மாலையே, என் உள்ளத்திற் கோயில் கொண்ட திருமுகமோ உனது சாந்த வனப்பைத் தூண்டியது ? எனில் வணக்கம் ! செவ்வானமே, என்மனத்திற் கனலேற்றிய அந்த வீரச்சுடர்க் கொழுந்தோ நீ ?

எனில் வணக்கம்! மலர்களை முத்தமிட்டு மணவெறி யேறிய தென்றலே, என்னுயிர்க் கினியவர் உன்னிடம் ஒரு செய்தியும் சொல்லவில்லையா? இந்த ஏழைக் கன்னிக்கு அவர் இரங்கவில்லையா? எனது உள்ளத் துடிப்பைச் சொற்சித்திரமாக்கி யனுப்பினேனே. அச்சித்திரத்தைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லையா? எங்கும் நிரம்பிய ஆகாயமே, என்னுயிர்க்குயிரான மன்னவன் என்ன நினைத்தான், என்ன சொன்னான்? என்னருமை ரோஜாவே, என் கருத்தையுண்ட அழகன் முகத்திலே தானே உனது புன்னகை பிறந்தது? எனில் உனக்கொரு முத்தம்......." கண்களாரக் காண்பேனோ...."

(பாடி உலாவுகிறாள்)

[வருதல் லலிதா]

லலிதா :—காண்பாய், காணப்போகிறாய்!

வச :—லலிதா, என்ன செய்தி; உன் முகத்தில் புதிய இன்பம் காண்கிறதே?

லலிதா :—உன் காதலுக்கு ரசீது! இதோ பார்! ராஜமாபுரம் முத்திரை போட்ட கடிதம். இன்னொன்று, திருவொற்றியூர்க் கடிதம்.

[கடிதம் தருதல்; வசந்த சுந்தரி ஆவலாகப் பிரித்துப் பார்க்கிறாள்]

லலிதா :—உனது ரகசியத்தை நான் பார்க்கக் கூடாதென்றால்....போகிறேன்.

(திரும்புகிறாள்)

வச :—இரு லலிதா; உனக்குத் தெரியாத ரகசியமா! என் மனத்தின் கண்ணாடியன்றோ நீ! இது தகப்பனார் கடிதம்; அவர் நாளை வருகிறாராம்.

லலிதா :—உன் காதலர் செய்தி என்ன ?

வச :—காதலர் ! அவ்வாறு அழைக்கும் பாக்கியம் இன்னும் வரவில்லை ; இதோ பார்.

லலிதா :—இங்கு ஒருவருமில்லை ; இப்படி மேடையில் உட்கார்ந்து படிப்போம்.

வச :—அந்தி மல்லிகையின் அழகை வர்ணிக்கும் வண்டுகளா, எனது காதலர் மொழிமலர்த் தேனுண்டு பாடுங்கள்.

லலிதா :—இந்த வண்டுகளைத் தூதனுப்புவோம் ; உன் மணாளன் கருத்தைப் படி.

வச :—" அன்புள்ள சகோதரியே "....ஆ !....

லலிதா :—" அருமைக்காதலி " என்ன வில்லையே என்று திகைக்கிறாயா ? அன்பு, பஞ்சமம் ; காதல் உச்ச ஷட்ஜமம்...............நாளுக்குநாள் ஸ்தாயி மேலே ஏறும் ; பயப்படாதே. வாசி...........

வச :—என் மனத்தை எவ்வளவு விரைவாக நீ அறிகிறாய் ! என்னருமைத் தோழி !

(தழுவிக்கொண்டு படிக்கிறாள்)

கேள் : " தளிர்க்கரங்களால் எழுதிய தங்கக் கடிதம் வந்தது ; இங்கே பூத்த மலர் மணம், அங்கும் வீசியது போலும். சூரியன் எழுந்ததும், செந்தாமரையும், வெண்டாமரையும் சேர்ந்து பூக்கின்றன. அதுபோல, இருவர் உள்ளமும் ஒரே விருப்பத்தால் மலர்ந்தன. நமது விருப்பம் இன்புறுக ! நமது மனம் ஒன்றாயிருக்கிறது. அது, 'காதல்' என்னும் செடியில் பூத்த இரண்டு வாடா மலர் போன்றது. நன்று ;

தங்கள் பெற்றோர் விருப்பத்தையும் அறிய வேண்டும். கள்ளவுறவு கூடாது. என் குடும்பத்திற்கு நானே பெரியவன். என் வாழ்விற் கேற்ற துணைவி தாங்களே என்று கண்டேன். மற்றைச் செல்வர் வீட்டு ஜாதகங்களை யெல்லாம் மடித்து வைத்து விட்டேன். கல்வி, அறிவு, கலை, அழகு, அன்பு, ஒழுக்கம் - எல்லாம் ஒருங்கே சேர்ந்த தாங்கள் என்னுயிர்த் துணையாவது நான் செய்த பாக்கியந்தான். பெரியோர் மனமும் கூடி, இச்சுபகாரியம் நிறைவேற வேண்டும். தங்கள் தகப்பனார் அங்கு வரப்போவதாகக் கேள்வி. அவரை இங்கு அழைத்துவர, நாளையே சாமண்ணாவை அனுப்புகிறேன். எனக்கு வேண்டிய செல்வம் உள்ளது. அதைக் கொண்டு, நமது நாட்டை வருத்தும் வறுமை மடமைப் பிணிகளைப் போக்க என்னாலான தொண்டுகளைச் செய்யவே எனது நாட்களை அர்ப்பணித்திருக்கிறேன். பயனுள்ள கல்வி, தமிழ் வளர்ச்சி, உழைப்பும் பிழைப்பும் பெருகும் தொழில் வளர்ச்சி, பெண்ணடிமை தீண்டாமை சாதிமதச் சண்டை இவற்றை யொழித்தல், ஆத்ம சாதனம், இவற்றிற்காகவே நான் வாழப் போகிறேன். அதற்காகவே தங்களை உயிர்த்துணைவியாக ஏற்கிறேன். பெற்றோரிடமும் இக்கடிதத்தைக் காட்டலாம். மற்றவை சாமண்ணா மூலம் அறியலாம்.

அன்புள்ள சகோதரன்,
ஜயகோபாலன்.

லலிதா :—இவரும் உன் காதலர் போலவே வெகு அருமையானவர். என்ன மாசற்ற உள்ளம், உண்மை

யுரை, உயர்ந்த கொள்கை! உன்னை விரும்பும் காதலர் அப்படித்தானே யிருக்க வேண்டும்! உன்னழகிற்கு அவரே தக்கவர்.

வச:—நான் என்ன அவ்வள வழகா?

லலிதா:—இந்த வசந்த மாலை ஒரு கோயிலானால், வசந்த சுந்தரியே அதன் தேவதை! இப்படித் திரும்பு; கிளி மூக்கு, பவழவாய், கமலக்கண்; முத்துநகை; திருமுகம்; உருக்கி வார்த்த தங்கச்சிலை உயிர்க்கிறது. வசந்த சுந்தரி, உன்னைப் பார்த்தால், நான் என் ஆணாய்ப் பிறக்கவில்லை...........என்று தோன்றுகிறது!

வச:—அவ்வாறே நானும் உனது அழகையும், இனிய குணத்தையும் கண்டு வியக்கிறேன். லலிதா, நாமிருவரும் எப்போதும் பிரியாதிருக்கும்படி இறைவன் அருளுக!

லலிதா:—உனக்கு அருளியதும், உன் மூலம் எனக்கும் அருளவேண்டும் இறைவன்........

வச:—என்ன வார்த்தையை விழுங்குகிறாயே! வெட்கப்படாதே; சொல்லு....

லலிதா:—நானேச் சொல்லுகிறேன்.

வசந்:—தெரிந்துகொண்டேன் லலிதா; பாவாடையுடுத்தி, சொப்பு வைத்து விளையாடும்போது, இந்த உணர்ச்சி நமக்கு இருந்ததா? அப்போது விளையாட்டாகவும், கனவாகவும் நினைத்ததெல்லாம், இப்போது அனுபவத்தில் காண ஒரு ஆவல் உண்டாகிறதே. இயற்கையின் செயலைப் பார்?

லலிதா :—மொட்டிற்கு மணமுண்டோ? மலர்ந்ததும், அது தேன்மணம் வீசுகிறது; அழகு பொலிகிறது; வண்டுகள் வருகின்றன; தூது பேசுகின்றன; மகரந்தத்தை அள்ளிச் சென்று ஆவலாகக் காத்திருக்கும் பூக்களுட் பெய்கின்றன. பூக்கள் கனிகின்றன; வாழ்வுச் சோலை வளர்கின்றது!

வச :—ஆம்; ஆண் பெண் வாழ்வும், மணமலர் வாழ்வுதான். உள்ள மட்டும் மலர்போல இன்பமாயிருப்போம்; காதலர் எதை விரும்புகின்றனர்?

லலிதா :—இன்பத்தைத்தான்.

வச :—இந்த இன்பம் எங்குள்ளது? உடலிலா?

லலிதா :—உடலழகு இதழ் போல உதிர்ந்து போகிறதே!

வச :—மனத்திலா!

லலிதா :—மனம் அலைபோல அலைகிறதே!

வச :—ஆம், மனத்தை விலக்கினால், ஆத்மா உள்ளது. அதுவே இன்பப்பொருள். அதன் கதிரே உண்மைக் காதல். அதிற் கலப்பதே உண்மையின்பம்! அந்தக் கலப்புத்தான் என்னை அவரிடமும், அவரை என்னிடமும் ஈடுபடுத்தியது.

லலிதா :—காதலின் தத்துவத்தை நன்றாக விளக்கினை. உன் காதல் வெற்றி பெறுக!

வச :—அவ்வாறே, நீ சொல்ல நானும் விரும்பமும் வெற்றி பெறுக! (மணியடிக்கிறது)

லலிதா :—நல்லது! நிறைவேறும்! இது பிரார்த்தனை மணி! நாம் செல்வோம். நாளை உனது தந்தை வருவார். (போதல்)

## காட்சி 2

*[வசந்த சுந்தரியின் அறை-சுவற்றில் அலமாரி ; அதில் புத்தங்கள். ஒரு மேஜை ; அதில் ஜயகோபால் படம். அதன் இருபுறங்களிலும் மலர்ச்செப்பு.* **வசந்த சுந்தரி** *வீணையுடன் பாடுகிறாள்.* **சிவஞானம்,** *தாளம்போடுகிறார்]*

### திருப்புகழ்

*பாதி மதிநதி போது மணிசடை நாதனருளிய—குமரேசா*
*பாகு கனிமொழி மாது குறமகள் பாதம் வருடிய—மணவாளா*
*காது மொருவிழி காகமுறவருள் மாய னரிதிரு—மருகோனே*
*கால னெனையணுகாமலுனதிருகாலில்வழிபட—அருள்வாயே*
*ஆதி யயனொடு தேவர்சுரருல காளும் வகையுறு—சிறைமீளா*
*ஆடுமயிலினில் ஏறி அமரர்கள் சூழ வரவரும்—இளையோனே!*
*சூத மிகவளர் சோலைமருவுசு வாமிமலைதனில்—உறைவோனே*
*சூர னுடலற வாறிசுவறிட வேலை விடவல—பெருமாளே !*

சிவ :—*பேஷ்....தா - தாதா - தாபா - தாநீ-நீதா-பாதா - மாபா - ரீசா - ரீகா ரீசா - ரீகம - பமகரி - சா - "காலனெனை யணு காமலுனதிரு காலில் வழிபட - அருள்வாயே !" உலகின் துன்பங்களுக்குக் காரணமான அரக்கரை, சக்திவேல் கொண்டழித்த சிவகுமாரன் புகழை, எவ்வளவு அருமையான தமிழில் பாடுகிறார்—வாக்கிற்கு அருணகிரியே ! வசந்தம், உனக்கு நல்ல ஞானம் உள்ளது. சந்தோஷம்.*

வச :—*எல்லாம் பெரியார் ஆசீர்வாதத்தினால் வந்ததே.*

சிவ :—*இங்கே என்னென்ன கற்கிறாய் ?*

வச :—*பத்தாவதுக்குள்ள இங்கிலீஷ், கணக்கு, ரஸாயனம், தமிழ் இவற்றோடு, சங்கீதத்தை ஒரு பாட*

மாக எடுத்துக்கொண்டு முதலில் தேறினேன். அப்பா விடம் கேட்டுக் கேட்டு மனதில் ஊறிய தேவாரம், திருவாசகம், திருப்புகழ், முத்துத்தாண்டவர் பதங்கள், கவிகுஞ்சரி ஸ்காந்த புராண கீர்த்தனங்கள், ராமாயண கீர்த்தனங்கள், தியாகராஜ கிருதிகள், சில ஹிந்திப் பாட்டுகள்—இவை எனக்குப் பழக்கம். திருப்புகழ் தான் எனக்கு முதல் பரிசளித்தது. இத்துடன் சமயல், வீட்டு வேலை, மருத்துவம், பாய்கூடை முடைதல், தோட்ட வேலை முதலிய உபயோகமான பயிற்சிகளும் பெற்றேன்.

சிவ :—சிவன் செயல். குழந்தை முதல் நீ நல்ல புத்திசாலி. வசந்தம், சிவனருளால் தக்க கல்விப் பயிற்சி பெற்றாய். மனித வாழ்வில் கலைபயிலும் வாலிபம் ஒரு இன்பமான பருவம். அதன் பிறகு, இல்லறமென்னும் ஒரு பெரிய சோதனையுள்ளது. இது அறிவுச் சாலை ; இல்லறம் அனுபவச்சாலை. அதிலும் நீ இவ்வாறே இன்புற சிவஷண்முகன் அருள் புரிக !

வச :—பரம ஏழையாகிய எனக்குக் கல்வி யருளிய இறைவனே வாழ்வையும் அருளுவான். அப்பாவிடமிருந்து கடவுளன்பும், அம்மாவிடமிருந்து கற்பும் பொறுமையும் கற்ற அடியேனுக்கு, வாழ்வின் சோதனைகளைத் தாங்கவும் உறுதியுள்ளது. அப்பா, என்னமோ யோசிக்கிறீர்களே !

சிவ :—சுப சமாசாரந்தான்.

வச :—என்ன ?

சிவ :—உன் அதிர்ஷ்டவசம் நல்ல இடங்கிடைத்தது. நான் கனவிலும் நினைக்காத வரன் வலுவில் வந்தான்.

வச :—அவ்வளவு அபூர்வமான வரன் யார் ?

சிவ :—என்னை அன்புடன் ஆதரித்த தாண்டவ ராய முதலியார் குமாரனே, உன்னை மணம்புரிய ஆவலாயிருக்கிருன். இனி உனக்கென்ன குறை, எனக்கென்ன குறை....? தாமோதரன்........

வச :—'தடித் தாமோதரன்' என்னுங்கள். அது தான் சென்னையில் அவனுக்குப் பட்டப்பெயர். அப்பா, மோசம் போகவேண்டா !

சிவ :—ஏனிப்படி நறுக்கென்று வெட்டிப் பேசுகிருய் ? நான்கு ஆண்டுகளாக வரன் தேடித் தேடி அயர்ந்து, தளர்ந்து நொந்து போனேனே; எனக்கிருப்பவை கூரைக்குடிலும், தேவாரமும், பீலியுந்தாம். நான் பரம ஏழை; ஏங்கித் தவித்தேன். சிவன் செயலால் முதலியாரே வலுவில் கூப்பிட்டுக் காரியத்தைப் பேசி, உன்னை அழைத்துவரச் சொன்னுர்.

வச :—சிவ சிவா, வேண்டாம். அப்பா, அவன் பெரிய டம்பாச்சாரி.

சிவ :—மிட்டாதார் தாண்டவராய முதலியாரின் அருமைப் புதல்வனென்ருல், அந்தஸ்தோடுதானிருப்பான்.

வச :—தாண்டவராய முதலியார், தானதருமமும் தேவார திருவாசகமுமாயிருந்தார். அவர் குலத்தைக் கெடுக்கவே தடித் தாமோதரன் வந்தான்.

சிவ :—இவரும் தான தர்மம் செய்வதாகத் தானே சொன்னுர்கள் !

வச :—யார் ? தடபுடல் கிட்டு சொன்னுரோ ?

சிவ :—ஆம் ; "வெகு சிறப்பாகச் சொன்னர். பங்களா, சேவகர், மோட்டார், தாட்டுச் செலவு.... கை கற்பகம், மனம் காமதேனு" என்று என்னென்னவோ சொன்னரே ; பொய்யா ?

வச :—முழுப் புளுகு. தாண்டவராயர் வமிசம் இத்தோடு சரி. அப்பா, தடித் தாமோதரன், பத்தாவது படிக்கும்போது நான் இங்குவந்து சேர்ந்தேன். நான் தேறிவிட்டேன். அவன் இந்த வருஷமும் தவறினன். படிப்பு ஏறவில்லை. உபாத்தியாயர்களை உதைக்கப் போய், அவன் பெரிய கலவரம் செய்தான். கேள்விக் காயிதங்கள் திருடப்போய் அகப்பட்டுக்கொண்டு, லஞ்சங் கொடுத்துத் தப்பினன். ஊரில் எங்கே பார்த்தாலும் கடன் வாங்கியிருக்கிருன், இத்துடன் குடி, விபசாரம், சூதாட்டம், சூனியக்காரருடன் பழக்கம். அந்தக் கிட்டு பெரிய மோசக்காரன், ஜகஜல்லி ; அவனே இவனுக்கு மந்திரி. பிதுரார்ஜிதம் பாதிக்கு மேல் தீர்ந்தது. மீதியும் எரியும் மெழுகுதிரி மாதிரி கரைந்து போகும்.

சிவ :—உனக்கெப்படித் தெரியும் ? நீ அவனைக் கண்டிருக்கிருயா ?

வசந் :—அவன் என்னை நான்கு வருஷமாக வலை போடுகிருன். அந்தக் கதையைக் கேள். லலிதா, லலிதா!

(லலிதா வருதல்)

இவள் என் அருமைத் தோழி ;

சிவ :—ஓம் சக்தி ! அம்மா, இப்படி உட்காருங்கள்.

வச :—லலிதா, தடித் தாமோதரன் என்னைக் கேட்கிருனும். அவன் கதையைச் சொல்.

லலிதா :—அதேன் கேட்கிறீர்கள்! அவன் படு போக்கிரி; பட்டணமெல்லாம் துப்பும்படி காரியங்கள் செய்திருக்கிருன். நான்கு ஆண்டுகளுக்கு முன், இங்கு நடந்த ஆண்டு விழாவிற்கு வந்தான். வசந்த சுந்தரி, பாடினுள். அன்று முதல், அவனுக்கொரு பைத்தியம் பிடித்தது. நாங்கள் தோட்டவேலை செய்யும்போது, வேலிக்கு வெளியே கிட்டுவுடன் வந்து, இப்படி அப்ப டிப் பார்ப்பதும் சிரிப்பதுமா யிருந்தான். வசிய மை போட்டு மயக்கப் பார்த்தான். ஒரு நாள் நானும் அவ ளும் தனியா யிருந்தபோது, ஒரு பண முடிப்பும், காதல் கடிதமும் வீசியெறிந்தான். தபால் மூலம் கடி தங்கள் எழுதினுன்; அதெல்லாம் எரித்துவிட்டோம். பிறகு பயமுறுத்திக் கடிதங்கள் வந்தன. முடிவில் சாந் தோம் கடற்கரை சம்பவம் நடந்தது தங்களுக்குத் தெரியும்.

சிவ :—யார் அந்தப் போக்கிரிகள்?

லலிதா:—ஜயகோபாலனும் இன்ஸ்பெக்டர் டேவிட் பாலும் துப்பு விசாரிக்கிருர்கள். இன்னும் ஒரு மாதத் தில் எல்லாம் தெரியும். சரியான ருசுவில்லாமல், அதைப் பற்றி எதுவும் சொல்ல முடியவில்லை.

சிவ :—ஜயகோபாலன் யார்?

லலிதா :—அவர்தாம் தங்கள் வசந்த குமாரியின் உயிரையும் மானத்தையும் காத்தவர். அவர் பெரிய செல்வர், புண்ணியவாளர். அவர் பெயர் சொன்னுல்

ஊரெல்லாம் கையெடுத்துக் கும்பிடும். அவர் பி. ஏ., ஆனர்ஸ் தேறியிருக்கிறார். அவர் ராஜமாபுரம் மிட்டா தார்!

சிவ :—ஆ! புண்ணியகோடி நாயுடு மகனு தெரிந்துகொண்டேன். புண்ணியகோடி நாயுடுக்கு ஒருதரம் கிருஷ்ண படம் எழுதிக் கொடுத்தேன். இரண்டு கலம் நெல் அளித்தார், மகா தருமவான். பிள்ளையும் அப்படியா? சந்தோஷம்.

லலிதா :—பிள்ளை மஹா புருஷன்; கல்விக்கடல்; ஞான சூரியன்; வீரன்; லோகோபகாரி; தர்ம ஸ்தா பனங்களுக்கெல்லாம் அவர் ஏராளமான நன்கொடை யளிக்கிறார். மகா உத்தமர்.

வச :—அப்பா, தாண்டவராய முதலியார் குல மழியப் பிறந்தானே அந்தத் தாமோதரன் லட்சணத் தையும் பார்; இதோ இருக்கும் இவர் அழகையும் பார்!

சிவஞா :—ஆ, இவரா! ஆள் ஆஜானுபாஹு; முகத்தில் ராஜகளை; கண்ணில் என்ன கருணை; உதட் டில் சாந்தம் குடிகொண்டிருக்கிறதே!

வச :—இவர் திருவுருவைப் பார்த்ததும், அப்பா வுக்கு ஓர் இன்பம் உண்டாகவில்லையா?

சிவ :—ஆம்.

வச :—(லலிதாவுக்குக் கண் காட்டுகிறாள்)

லலிதா :—மாமா, இப்படிப்பட்ட மாப்பிள்ளை உங்களுக்குக் கிடைத்தால், சந்தோஷப்படுவீர்களா?

சிவ :—கிடைக்க வேண்டுமே!

லலிதா :—கிடைத்து விட்டது !

சிவ :—என்னமோ ரகசியமிருக்கிறதே !

லலிதா :—வசந்த சுந்தரி, தன் கணவனைத் தேடிக் கொண்டாள்; ஜயகோபாலன் தனது உண்மைக்காதலி யைத் தேடிக்கொண்டான். இதுதான் ரகசியம். தம்பதிகளை ஆசீர்வதிப்பது பெரியோர் கடமை ! சுப மஸ்து.

சிவ :—சாதி குலம் பார்க்க வேண்டாமா ?

வச :—அப்பா, மனம் பொருந்தி, உயிர் கலந்த பின், சாதி என்ன, குலமென்ன ? இந்தச் சாதி குலம் உண்டானதற்கு முன்பே காதலும், உயிரும், மனமும், ஆன்மாவும் இருந்தன. அன்பினால் அனைவரும் ஒன்று என்பதை, நமது திருத்தொண்டர் வரலாறுகள் விளக்க வில்லையா ? ஞானசம்பந்தர், அப்பர், திருநீலகண்டர், நந்தனார், சுந்தரர், பரவை நாச்சியார், இவர்களுக்கெல் லாம் அன்புதான் சாதிமதம். அந்த அன்புதான் எங் கள் மனத்தை ஒன்றாக்கியது.

சிவ :—என்னைக் கேளாமல், நீ இப்படிக் காரியம் செய்யலாமா ?

வச :—தங்களைக் கேட்கத்தான் வரவழைத்தது. தாங்கள் நாளை அவரைக் காணலாம். இதோ அவர் கடிதம்.

சிவ :—(படிக்கிறார்)

[கதவு சத்தம்]

லலிதா :—யாரது ?

(கதவைத் திறந்து ஒரு கடிதத்தை வாங்குகிறாள்)

ஆ, இவர் வந்திருக்கிறாரடீ ! உன் தகப்பனாருடன் பேச வேண்டுமாம். இதோ கடிதம். உன்னவர் எழுதி யுள்ளார்.

வச :—அப்பா இதோ பார். அவர் அழைப்புக் கடிதம்.

சிவ :—(வாசிக்கிறாள்)

இராஜமாபுரம்
க-தை-ஈசுவரஹ

அன்புள்ள பெரியீர்,

நாளை நாங்கள் ஒரு விருந்து நடத்துகிறோம். அதற்குத் தங்கள் திருமகளுடன் விஜயம் செய்யுமாறு வேண்டுகிறோம். தங்களுடன் தனித்து ஒரு விஷயம் பேசவேண்டும். தயவு செய்யுங்கள்.

அன்பன்
ஜயகோபாலன்

குறிப்பு :—இக்கடிதம் கொண்டுவரும் சாமண்ணு பி. ஏ., எனது உயிர்த்தோழர் ; உங்களை மோட்டாரில் இங்கே அழைத்து வருவார்.

சிவ :—சரி புறப்படு. மாசற்ற உள்ளமும், மறுவற்ற ஒழுக்கமும், கரவற்ற நெஞ்சமும், கடவுளன்பும் இருந்தால், சாதிமத வேறுபாடுகளுக்கு வேலையில்லை. நானும் உங்கள் மதம், சம்மதம் ! சிவோஹம் ! அவரை நான் கண்டு பேசுகிறேன். மகா பரோபகாரிகளான இந்தச் சேவாசதனத் தலைவர்களுக்கும் எனது வணக்கமுள்ள நன்றியைத் தெரிவிக்கிறேன்.

(கதவைத் திறந்து வெளியே செல்லுகிறார்)

வச :—அப்பா, சாமண்ணாவுக்கு எங்கள் தலைவரைத் தெரியும். எல்லாரும் அவரைச் சென்று பார்ப்போம். லீலா....

லீலா :—நான் மாட்டேனம்மா !

வச :—வெட்கமாயிருக்கிறதா ?

லீலா :—உன்னவர் வந்தால் உனக்கு.

வச :—சாமண்ணா உன்னவரா.......அப்படிச் சொல்லு! என் பின்னால் வா ; அவர் பிடித்துக்கொண்டு போகமாட்டார்.

[இழுத்துச் செல்லுகிறாள்]

## காட்சி 3

[ஜயகோபால் மாளிகை ; சலவைக்கூடம் ; மின்ஸார விளக்கு பளிச்சிடுகிறது. நடுவே கருங்காலி வட்டமேஜை ; எட்டு வெள்ளித் தட்டுகளில் உணவுவகைகள், கனிகள், சல்லாது, போளி, வடை, மைசூர்ப்பாகு முதலியவை. கண்ணாடிக் கோப்பைகளில் தண்ணீர். கையலம்ப மேஜையின் பக்கம் ஒரு பீங்கான் வட்டில்; மேஜை நடுவே அழகிய மலர்கள், ஊதுவர்த்தி. ஜயகோபாலுக்கு வலதுபுறம் ஹுஸேன், இடதுபுறம் டேவிட்பால், எதிரே சிவஞானம், வசந்த சுந்தரி, லலிதா, அடுத்தது சாமண்ணா, நந்தனார் ; ஹரிஜன ராமானுஜம் பரிமாறுகிறான்.]

(முதலில் அனைவரும் தெய்வ வணக்கம் செய்தல்)

இராகம் பியாகு—தாளம் ரூபகம்

பல்லவி

எல்லார்க்கும் இன்பமான
இறைவனை வணங்குவோம் (எல்)

அநுபல்லவி

அல்லா, பரம பிதா,
ஹரி, ஹர, பர ப்ரம்மமென்றே (எல்)

சரணம்

ஜாதி சமய நாமரூப
பேத மற்ற போதமாய்,
ஆதி யந்த மற்ற பொருளே
யாவ ருள்ளும் ஆன்ம நிறைவை (எல்)

உலகக்கோயிலில், உயிர்க்குயிராய் உலவும் அறிவுக் கடவுளே, எங்கள் உள்ளமெல்லாம் கோத்து உனக்கு வாடாத அன்பு மாலையாகச் சூட்டி வழிபடுகிறோம், ஓம்! (எல்லோரும் உட்காருதல்)

ஜய :—நண்பர்கள், அமைதியாக உண்ணட்டும். முதலியாரவர்களுக்கு எல்லாம் திருப்தியா?

சிவ :—பரமதிருப்தி; சிவோஹம்! இப்படிப் பட்ட அன்பர் கூட்டத்தில் இருக்கக் கொடுத்து வைக்க வேண்டுமே!

ஜய :—எங்கள் ஸமத்துவம் உங்களுக்கு எப்படிப் படுகிறது?

சிவ :—நன்றாக; தங்கள் தோத்திரத்தினின்று கொள்கை யறிந்தேன். திருத்தொண்டரெல்லாம் ஒரு குலந்தானே; உள்ளங் கலந்தால் உலகெலாம் ஒன்று; அன்பிற் கலந்தால் யாவரும் சமானம். ஒன்றே குலம்; ஒருவனே தேவன்.

ஹாபஸேன் :—அச்சா; நமது கொள்கையை நன்றாக அறிந்து கொண்டிருக்கிறார் பெரியவர். பெரியவரே,

எங்கள் உடைகள் பலவிதம்; உள்ளம் ஒன்று; நடைகள் பலவிதம்; நாட்டம் ஒன்று. அன்புதான் எங்கள் அளவுகோல். வேறு புறவேற்றுமைகளை நாங்கள் பாராட்டுவ தில்லை.

சிவ :—மாணிக்கவாசகர் "இன்பமே என்பெரும் அன்பே" என்று கடவுளை வணங்குகிறார். அன்பும், இன்பமும் யாருக்கும் விருப்பமே.

டேவிட்:—அன்பும் தியாகமும் பைபிளின் சாரம்; உண்மை யன்பும், மாசற்ற உள்ளமும் இருந்தால், எல்லாரும் ஒரு குலம்போல் வாழலாம்.

ஜய :—ஆண்டவனிடம் உறுதியான அன்பு, உயிர்களிடம் பரந்த கருணை, உடலுறுதி, மனத் தூய்மை, வாய்மை, நல்ல கல்வி யறிவு, பிழைப்பிற் கேற்ற தொழிலறிவு, பரோபகாரம் இவையே எங்கள் அனுஷ்டான நெறி.

சிவ :—தங்கள் கொள்கை, லௌகிகம், வைதீகம் இரண்டிற்கும் ஒத்ததாயிருக்கிறது. கடவுளுறுதியும், ஆருயிரன்புங் கொண்டு, இந்த மாதிரி எல்லாரும் வாழ்ந்தால், கலியுகம் போய் கிருதயுகம் வருமே. இருந்தாலும், மாந்தரியல்பு இன்னும் பண்படவில்லை. எத்தனையோ பெரியார்கள் வந்து உபதேசித்தும், இன்னும் உலகில் கொடுமைகளும், தீமைகளும் வளர்கின்றன. தாங்கள் சொன்னதுபோல தியாகமும் அன்பும் வேண்டும்.

ஜய :—இவர் எனது நண்பர், போலீஸ் இன்ஸ்பெக்டர். பத்து வருஷ அனுபவத்தில், மனிதரியல்பை நன்றாக அறிந்திருக்கிறார். ஒரு வாரமாக அவருக்கு அலைச்சல்; ஓய்வில்லை.

டேவிட் :—கடமைக்காக அலேவதே என் ஓய்வு ; மனச்சாட்சி மகிழப் பொது நலம் புரிவதே என் இன்பம்.

சாம :—அதுவே சிறந்த வழிபாடு. உலகம் கோயில் ; ஜீவகோடி கடவுள் ; தொண்டு வழிபாடு.

டேவிட் :—ஸர்வமத ஸமரஸ வேதத்தை மூன்று வாக்கியங்களில் அடக்கிவிட்டார், சாமண்ணு! தியாகச் சிலுவையேந்தி, ஏழை யெளியவருக்கு நன்மை செய் வதே மதமாகக் கொண்ட இந்த அன்பர் நட்பு மனத் திற்கு ஆறுத லளிக்கிறது. இந்நல்லோர் கூட்டத்தை விட்டு, வெளியுலகிற் சுற்றும் போது, எவ்வளவு கொடு மைகளேக் காண்கிறேன் !

ஜய :—எவ்வளவோ கொடுமைகளேக் கண்டு பிடித்து நன்மை செய்திருக்கிறீர்கள் ! ஸாந்தோம் சம்பவத்தையும் தாங்களே கண்டு பிடிக்கமுடியும்.

ஹுஸேன் :—மிஸ்டர் டேவிட் கண்டுபிடிக்கிறார் ; கண்டு பிடித்து விட்டார்.

ஜய :—ஏதாயினும் புலனுனதா ?

டேவிட் :—பாம்பின் வால்நுனி அகப்பட்டது !

ஜய :—என்ன !

டேவிட் :—இந்தப் பெட்டியைத் திறக்கச் சொல் லுங்கள்.

ஜய :—ராமாநுஜம் ஈபெட்டெ தெரிசி சூடப்பா.

ராமாநுஜம் :—சித்தமண்டி.

(ராமாநுஜம் திறக்கிருன்)

டேவிட் :—அதை எடுத்துக் காண்பி. (ராமாநுஜம் 4 முக மூடிகளை (Masks) எடுத்துக் காட்டுகிறான்)

எல்லாரும் :—ஆ....இவையே அந்தத் திருமுகங்கள் !

டேவிட்:—(வசந்தசுந்தரியைப் பார்த்து) அம்மா, இந்த முகங்கள் தாமே தங்களை அன்று........

வச :—ஆம், ஆம் ! அந்த முரடன் பேசிய ஆங்கிலங்கூட, தட்டுத்தடவலாயிருந்தது.

ஜய :—இதை எங்கே கண்டு பிடித்தீர்கள் ?

டேவிட் :—பீச்ரோட் பாலத்திற் கடியில், ஒரு குழியில்.

ஜய :—ஆதலால், ஆசாமி துரைவேஷம் போட்டு மோசம் செய்திருக்கிறான். ஆள் தெரிந்ததா ?

டேவிட் :—ஆராய்ந்தேன்; இவை பாரிஸினின்றே வரவழைக்கப்பட்டனவாகத் தெரிந்தது. வரவழைத்தவர் தனி நபர்தான், கம்பெனியல்ல.

ஹுஸேன் :—உபயோகமான உளவு. மோடார் நம்பர் தெரிந்ததா ?

டேவிட் :—அன்று இரவு 10-45க்கு, ஒரு ரோல்ஸ் ராய் கார் திருவல்லிக்கேணிப் பக்கம் திரும்பியதாக பீட் கான்ஸ்டேபிள் சொன்னான். சென்னையிலுள்ள ரோல்ஸ்ராய் கார்களைப் பார்த்தேன். சந்தேகப்படத் தக்க ஆட்களில்லை ; நகருக்கு வெளியேயுள்ள ஒரு செல்வர் காராகத்தா னிருக்க வேண்டும் அது.

சாம :—தடித் தாமோதரன்கூட ரோல்ஸ்ராய் வைத்து ஜமாய்க்கிறான்.

டேவிட் :—அவன் மேலும் சந்தேகந்தான் ; ருஜுவில்லை.

ஹூஸேன் :—அவனுடைய முதன் மந்திரி தடபுடல் கிட்டு, தந்திரமாக வேலை செய்திருப்பான். இருவரையும் அவசியம் கண் காணிக்க வேண்டும்.

டேவிட் :—ஆறு மாதமாக ஒரு சங்கிலியை முதலியார் அரண்மனையில் நுழைத்திருக்கிறேன். பக்கம் பக்கமாக அறிக்கை வருகிறது.

ஜய :—தாமோதரன் கம்பெனியைப் பற்றியா ?

டேவிட் :—ஆமாம், ஆமாம், விநோதமான மோசடிகள் செய்கிறான். தாமோதரன் என்றால், பஞ்சமா பாதகம் ; கிட்டு என்றால் சைத்தான் என்று சொல்லலாம் ; சுமார் இருபது கொடிய குற்றங்கள் இவர்கள் மேல் உள்ளன. இந்தக் கேஸ் விசாரணையானதும், அவர்களுக்கு அந்தமான் சுவர்க்கம் கிடைக்குமோ, தூக்கு மேடை மோட்சம் கிடைக்குமோ தெரியவில்லை.

சிவ :—ஆகாசக் கம்பேனி வைத்துக் குபேரராகப் போகிறாராமே !

சாம :—அவர்கள் வியாபாரமே ஆகாசக் கம்பெனிதான்.

சிவ :—பரமபக்தரான தாண்டவராய முதலியாருக்கு இப்பாவி பிறந்தான் !

டேவிட் :—வீடு, நிலமெல்லாம் அடமானத்திலிருக்கின்றன. சில்லறைக் கடன்களுக்கு ஆள் தப்பியொளிக்கிறான்.

ஹ¯பஸேன் :—அதற்குத்தான் மோட்டார் வைத்திருக்கிறானே ? இவன் ஆகாசக் கம்பெனிக்கு முதல் ஏது !

சாம :—ஆகாசக் கம்பெனிக்கு, நட்சத்திர மண்டலந்தான் முதல் !

எல்லாம் :— (சிரித்தல்) எல்லாம் கிட்டுவின் அவுட்டா ?

சிவ :—ஆ, ஏழை, மோசம் போக இருந்தேன். புண்ணியவான்கள் காப்பாற்றினீர்கள்.

டேவிட் :—கடன் மட்டுமா ? விபசார விஷமங்கள் எத்தனை ? சூனிய வியாபாரம் வேறே செய்கிறான்.

ஜய :—அதுவும் தெரியுமா ?

டேவிட் :—அதற்கு இரண்டு மாயாவிகளை வைத்திருக்கிறான் ; சங்கிலி மூலம் செய்தி கிடைத்தது. அடுத்த வாரம் உளவு பார்த்துச் சொல்லுகிறேன்.

ஜய :--மிஸ்டர் டேவிட், இந்த விஷப்பூண்டுகளைக் கெல்லி யெறியவேண்டும்.

ஹ¯பஸேன் :—இந்தச் சைத்தான்களைத் திருத்த வேண்டும், அல்லது ஒழிக்கவேண்டும்.

டேவிட் :—எட்டியை இனிப்பாக்க முடியுமா ?

நந்தனார் :—புலியைப் பழக்கி விளையாட்டுவது போல, மனித வியல்பையும் பழக்கவேண்டும்.

ஜய :—முடிந்த மட்டும் பார்ப்போம்.

டேவிட் :—ஒரு தாசி மோகத்தில் திரிகிறான். அவளுக்கு இவன் அந்தரங்கம் தெரியுமாம். விசாரித்

துக்கொண்டிருக்கிறேன். சாந்தோம் விஷயத்தின் இரகசியம் தாமோதரன் கும்பலிலே தான் உள்ளது.

ஹூஸேன் :—இன்னும் ஒரு மாதத்தில் எல்லாம் வெளியாகும். மிஸ்டர் டேவிட் சாமானியமா ?

ஜய :—எவ்வளவு கொடிய செயல் !

டேவிட் :—இதைவிடத் திடுக்கிடுஞ் செயல்கள் நடக்கின்றன. விடுதிகள் நின்றதும், இந்தமாதிரி வெறியாட்டங்கள் கிளம்பியுள்ளன. காமக் கொலைகள் அதிகரிக்கின்றன.

ஜய :—எவ்வளவு சன்மார்க்கம் போதித்தாலும், பஞ்சமா பாதகங்களின் வெறியாட்டம் ஒழியக் காணோம் !

நந் :—போதனை புத்தகத்திலும் மூளையிலும் இருந்தால் போதாது. அவரவர் வாழ்வில் வரவேண்டும். மனித வியல்பே மாறவேண்டும்.

ஜய :—ஆம், வாழ்வு ஒரு யோக ஸாதனம். அது உள்ளேயிருந்து திருந்தி, புதுமை பெறவேண்டும்.

நந் :—உதாரணமாக, இந்தப் பெரியாரைப் பாருங்கள். அவர் வாக்கிலும், மனத்திலும், வாழ்விலும் தேவாரம் பேசுகிறது !

ஜய :—எளிய வாழ்வு, உயர்ந்த நினைப்பு, பரந்த உள்ளம், ஆழ்ந்த அன்பு—இவற்றை இப்பெரியாரிடம் காண்கிறேன்.

(சாமண்ணு தட்டில் உப்பட்டு காலியாகிறது)

ஜய :—ராமாநுஜம் ராயலுவரிகி நாலுகு உப்பட்லு அடுகு ! முதலியாரிகி, ஆமெகு, மைசூர்பாகு

விசாரிஞ்சு. (ராமாநுஜம் பரிமாறுகிறான்) உப்பட்டு என்றால் சாமண்ணாவுக்கு உயிர்.

உப்பட்டு உனக்காகவே தட்டச் சொன்னது.

சாம :—ஒந்து சாகு........(ஏப்பம் விடுகிறான்); வயிறு வண்ணாந் தாழியா!

ஐய :—நன்றாகச் சாப்பிடு.

சாம :—ஒந்துசாகு; ஹேவ், ரசீது வந்துவிட்டது. அங்கே விசாரி. (லலிதாவிற்கு)

லலிதா :—(புன்சிரித்து) ஒன்றே போதும்....... ....

சிவ :—போதும், போதும்.

ஐய:—மிஸ்டர் டேவிட் பாலுக்கு, தித்திப்புப் பிடிக்கும். மைசூர்பாகு சாப்பிடட்டும். ராமாநுஜம், வீரிகி மைசூர் பாகு அடுகப்ப!

டேவிட் :—போதும், திருப்தியாகச் சாப்பிட்டாயிற்று. இனி எழுந்திருக்க வேண்டியதுதான்.

ஐய :—பெரியவர்களெல்லாம் இந்த மட்டும் தயவு செய்தது பெரும் புண்ணியம். நமது விருந்தைப் பன் மடங்கு இன்புறுத்திய சகோதாருக்கு வந்தனம்.

சிவ :—இப்படிப்பட்ட நல்லோர் கூட்டம் கிடைத்ததே எமது தவப்பயன்.

வச :—எந்தை சொன்னதை யான் ஆதரிக்கிறேன்.

ஐய :—முதலியார் சேர்க்கை நமது சங்கத்திற்கே புதிய பலமீந்தது.

ஹாஸேன் :—முதலியார் குடும்பம் முழுதும் நமது சங்கமே!

சிவ :—*ஏதோ பரம ஏழை ; சிவனை நம்பி, திருவா சகத்தைப் பின் பற்றி வாழுகிறேன். ஓவியத் தொழில் கூட நடக்கவில்லை. இருப்பது ஒரு பெண். அவளுடைய விவாகத்திற்காகப் பிரயாசைப்பட்டேன். பணமே பெரி தென்னும் இக்காலத்தில், தக்க வரன் கிடைப்பது கடினமாயிருக்கிறது !*

சாம :—*கவலையென்ன ? இதோ சரியான வரன் ! சரியான பொருத்தம் ! பலமான விருப்பம்.*

எல்லாரும் :—*எல்லாருக்கும் அதே விருப்பம்.*

சாம :—*ஜயகோபாலுக்கு ஜேய் !*

ஹுஸேன் :—*ஸ்ரீமதி வசந்த சுந்தரிக்கு ஜேய் !*

எல்லாரும்:—*தம்பதிகள் நீடு வாழ்க ! சுபம் சுபம் !*

சிவ :—*நல்லோர் விருப்பம் நிறைவேறட்டும். எல் லாம் ஈசன் செயல்!*

ஜய .—*இனி எழுந்திருப்போம். காது குளிர அருட்பாடல்களைக் கேட்போம். (திரை விழுகிறது)*

## காட்சி 4

*[ஜயகோபால் மாளிகை ; உப்பரிகையில் ஒரு சலவைக்கல் மேடை ; அதில் இரத்தின கம்பளம் விரித்து, வசந்த சுந்தரியும் ஜயகோபாலனும் வீற்றிருக்கின்றனர்]*

ஜய :—*அந்தப் பூரணச்சந்திரன் விண்ணிலிருந்து நிலவைத் தருகிறான் ; வசந்தா, உன் மதிமுகம் உலகி லிருந்து என் வாழ்விற்கு நிலவளிக்கிறது.*

வச :—*நாதா, என் உள்ளத்திற்குத் தங்கள் புன் னகை சூரியகாந்தி யளிக்கிறது.*

ஜய :—வெள்ளி நிலாவுடன் தென்றலும் கலந்து, நமது காதலை ஆசீர்வதிக்கின்றன.

வச :—மௌனமாகப் பார்க்கும் அந்தச் சப்த ரிஷிகளும் நம்மை ஆசீர்வதிக்கின்றனர்.

ஜய :—வசந்தா, அதோ பார் துருவ நட்சத்திரம்; எல்லா நட்சத்திரங்களும் அதைச்சுற்றி ஓடுகின்றன. அதுமட்டும் அசையாமல் நிலைத்திருக்கிறது.

வச :—அதுபோலே, என் உள்ளம் தங்களிடம் நிலைத்திருக்கிறது.

ஜய :—கண்ணே, நீயே என் உலகம்.

வச :—காதல, தாங்களே என் வாழ்வு.

ஜய :—கண்ணே, நீ என் உயிர்.

வச :—காதல ! தாங்கள் என் உயிர்ப்பு.

ஜய :—என் வாழ்வின் நித்திய வசந்தமே, மல்லிகைப் பந்தல்போலே வானம் விரிந்துள்ளது ; சந்திரன் சாட்சியாக நம்மைக் காண்கிறான் ; தென்றல் மங்கலம் முழங்குகிறது ; உள்ளத்தில் ஆர்வத் தீ எறுகிறது ; மனச்சாட்சி மந்திரம் ஓதுகிறது ; இந்த மௌன உலகம், நமது மனமொன்றிய திருமணத்தால் மகிழ்ந்து பொங்குகிறது !

வச :—அறிந்து மனம் பொருந்திய காதலர் உள்ளமும், உயிரும் ஒன்றுகின்றன ; அத்தகைய காதலைக் கண்டு இயற்கை இன்புறுகின்றது.

ஜய :—வசந்தா, என்னை நீ எவ்வாறு மதிக்கிறாய் ?

வச :—வானையும், கதிரையும் உலகு எப்படி மதிக்கிறதோ அப்படித் தங்களை மதிக்கிறேன். வான்மழை உலகிற்கு வளந்தந்து வறுமையை நீக்குகிறது ; கதிரொளி இருளைப் போக்குகிறது.

ஜய :—நல்ல உதாரணம் காட்டினை ; வறுமை, மடமை இவ்விரண்டும் நமது சமூதாயத்தை அள்ளி விழுங்கும் கபந்தக் கரங்களாம். நல்ல கல்வி, தொழில் வளர்ச்சி, சுத்த சன்மார்க்க சாதனம் இம்மூன்றும் மடமை, வறுமைப் பிணிகளை மாற்றும் வகையாம். கண்ணே, எனது நிலங்களையெல்லாம் இப்பணிக்கே பயனுக்கப் போகிறேன். என்னைச் சுற்றி ஆயிரக்கணக்கான ஏழைகள், கல்வி கற்று, தொழில்புரிந்து, சந்தோஷமாக வாழக் காண்பேன் ; ஏழைகளையும், பஞ்சை மக்களையும், சிறுமனைகள் கட்டிக் குடியேற்றி, அவரவருக்கு ஏற்ற பயிர் நிலங்களையும், தொழிற் கூடங்களையும் அமைத்துத் தரப்போகிறேன். எல்லாருக்கும் தாராளமான கல்வி வழங்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யப் போகிறேன். உண்ண, உடுக்கத் தட்டில்லாமல் அனைவரும் என்னைச் சுற்றி வாழவேண்டும். ஹுஸேன், அவன் மனைவியுடன் இங்கே நெசவுத் தொழில் நடத்துவான். சாமண்ணு பள்ளிக்கூடங்களை நடத்துவான். அடுத்த புதன், முகூர்த்தம் முடிந்ததும், உன் பெற்றோர், உள்ள மட்டும் இங்கேதான் இருக்க வேண்டும்.

வச :—நாதா, கலியாணச் செலவுகளைச் சுருக்கித் தாங்கள் விரும்பும் நிலையான பணிகளை வளர்ப்போம். நண்பருக்கு விருந்திட்டு, ஏழைகளுக்கு ஆடையும் உணவும் அளித்தால் போதும்.

ஜய:—ஹாஸேனுக்குத் தறிச்சாலையும், சாமண்ணு வுக்குக் கலாசாலையும் அன்று திறக்க உத்தேசம்.

வச :—சாமண்ணுவுக்கும், லலிதாவுக்கும் நல்ல மனப் பொருத்தம் உள்ளது.

ஜய :—தெரியும் ; நமது மணமேடையில் அவர் களும் உட்காருவார்கள். அன்று இரண்டு திருமணங் கள் நடக்கும். கண்ணே, நாளை திருவொற்றியூர் சென்று, திங்கட்கிழமை காலை எல்லாரும் இங்கு வரு வீர்கள் ; பிறகு இங்கேதான் இருக்கை.

வச :—நமது எண்ணங்கள் இடையூறில்லாமல் நிறைவேறட்டும் ; முருகன் அருளுக !

ஜய :—ஆ, ரேவதி உச்சத்திலிருக்கிறதே ! மணி ஒன்று ; நீங்கள் 5 மணிக்குப் புறப்படவேண்டுமே ; சற்றே கண்ணயர்வோம் வா.

(இருவரும் செல்லல்)

# அங்கம் - 4

## காட்சி 1

கிட்டு :—அண்ணாவுக்குக் கண்ணாளம் !

தாமோ :—கிட்டு, ஜக்கம்மா வேலை பலித்திருக்குமா ?

கிட்டு :—குட்டிச்சாத்தான் சாமானியமா ? இதற்குள் வேஷ்டியைக் கிழித்துக் கொண்டிருப்பான்.

தாமோ :—அந்தப் பயல் தெருவில் ஓடவேண்டும். நான் மாடியிலிருந்து கல்லெறிய வேண்டும்.

கிட்டு :—பலமான புள்ளையார் சதுர்த்தி பண்ணி விடுவோம்.

தாமோ :—ராஜமாபுரம் சிரிக்க வேண்டும் ; என் வயிறு குளிரவேண்டும்.

கிட்டு :—ராஜமாபுரம் மிட்டாதார், முழுப்பயித்தியம் என்று பத்திரிகையில் போட்டு விடுவோம், பயப்படாதே.

தாமோ :—சபாஷ் ! கிட்டு ; அவள் மயங்கியிருப்பாளா ?

கிட்டு :—டாகினி வேலை சாமானியமா ? அலறிக் கொண்டு வருவாள் பார் !

தாமோ :—வந்ததும் முகூர்த்தம்.

கிட்டு :—ஜமாய்ப்போம். பணம் பறந்தால் எல்லாம் நடக்கிறது.

தாமோ :—கிட்டு, 10,000 ஆவது செல்லுமே.

கிட்டு:—கூடப் பதினையிரம் ஆகட்டுமே. தாண்டவ ராயருக்கு அத்தி பூத்தாற்போல ஒரு பிள்ளை.

தாமோ :—கிட்டு, கடன் ஏறிவிட்டது. வீட்டு மேலே 10,000 ; நிலத்தின் மேலே 30,000 ; சில்லறையில் 10,000 ; கடன் கழுத்தைப் பிடிக்குதடா!

கிட்டு :—பட்டை நாமம் வைத்து விடுவோம் அண்ணு, பயப்படாதே. பயல் இருக்கிறேன். விடு தலைப்பத்திரம் எழுதி அவரவர் கையெழுத்தை அப்படியே போட்டுச் சரிப்பண்ணுகிறேன். நம்மை நம்பு அண்ணு ! நூறு கூடேறிய சிங்கம் இருக்கிறேன்.

தாமோ :—வீட்டு வாசலில் பழி போடுகிருர்களே கடன்காரர்.

கிட்டு :—வாசலில் ரோஸ் இருக்கிறது. இன்னொரு கொச்சி நாய் வேண்டுமென்றாலும் கட்டி வைப்போம். தப்பி உள்ளே வந்தால் ரோல்ஸ்ராய் இருக்கிறது. கொல்லைத்தோட்டம் வழியாக அண்ணு அந்தர்த்தானமாகலாம் ! 'எஜமான் முகாம்' என்றால் போகிருர்கள். சங்கிலி யிருக்கிருன், சொல்லுகிருன். கவலை யென்ன ?

தாமோ :—சரி, கலியாணக் கடனுக்கு வழி.

கிட்டு :—டுேங்காபாய் சேட்டிடம் 20,000 வாங்குவோம்.

தாமோ :—அடமானம் கேட்டால் ?

கிட்டு :—கைலாசம் போலே வீடு இருக்கிறதே.

தாமோ :—வீட்டின்மேல் வில்லங்கம் இருக்கிறதே.

கிட்டு :—அதெல்லாம் வெளியே தெரியாமல் வேலை செய்வோம், சிங்கம் இருக்கிறேன். கலியாணச் செலவைப்பற்றி யோசிப்போம்.

தாமோ:—கிட்டு, புதியமுறையில் நடக்கவேண்டும். ஒரே கண்டிப்பு: பூரி கீரி, தட்சிணை கிட்சணை, ஓமம் கீமம், எல்லாம் கிட்டவரக் கூடா. நமது பங்களாவில் வைதீகப் புகை உதவாது. ரூபா 100-க்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்களை மட்டும் அழைப்போம். மோதிரம் மாற்றிக் கொள்ளுவதோடு முகூர்த்தம் சரி. நல்ல இங்கிலீஷ் பாண்டு வாசிக்கட்டும்; தாட்டாக ஒரு விருந்து; ஜிம்மி லாட்ஜ் டிஷ் பரிமாறட்டும். தமாஷாக இரண்டு சதுர்க் கச்சேரிகள்; காதிற்குக் குளுமையாக 4 தாசிகள் பாட்டுக் கச்சேரி. சிறப்பான ஊர்கோலம். பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு நமது பெயர் போட்ட வெள்ளித் தட்டு பரிசு - இந்த மட்டுடன் சரி.

கிட்டு :—ஆஹா சித்தம்போலே நடக்கட்டும்.

(வருதல் சங்கிலி)

சங்கிலி :—எஜமான், தபால்; இதோ மணியாடர் ரூபா 15....(தபால் தருகிறான்; தாமோதரன் மணியாடர் கையெழுத்திட்டு வாங்குகிறான்)

வாசலிலே கவிராயராம் யாரோ வந்திருக்கிறார்.

தாமோ :—டாம், கவிராயருக்கு இங்கென்ன வேலை? திருப்பி யனுப்பு.

சங்கி :—எசமான்மேல் வெண்பாப் பாட வேண்டுமாம்!

தாமோ :—ரோஸ் கிட்டப் பாடச்சொல்லு; இரண்டு பேர் பாட்டும் எனக்குச் சரிதான்.

சங்கி :—கடன்காரர் நாலுபேர் பிடிவாதமாக உட்கார்ந்திருக்கிறார்கள்.

தாமோ :—வாயெங்கே ! நாயெங்கே ! எஜமான் பேடா போயிருக்கிறார் என்று சொல்லேன் ! முட்டாள் ! போ !

சங்கி :—எஜமான் எத்தனைநாள் இப்படிப் புளுக முடியும் ?

தாமோ :—டாம், உன்னையார் கேட்டது ? சொல்வதைச்செய்.

சங்கி :—நீங்கள் செய்வதைச் சொல்லுகிறேன்.

(போகிறான்)

கிட்டு :—தபால் என்ன மஞ்சள் தடவியிருக்கிறதே !

தாமோ :—(பிரித்துப்பார்த்து) ஹா, வயிறெரியுதடா, கிட்டு, கிட்டு ! பார் அநியாயத்தை ! ஜயகோபாலனுக்கும் வசந்த சுந்தரிக்கும், புதன்கிழமை, ராஜமாபுரத்தில் முகூர்த்தமாம் ! எனக்கு அழைப்பு வந்திருக்கிறது !

கிட்டு :—என்ன அநியாயமண்ணா ! அண்ணா ! கலி முற்றிப் போச்சுது! பேச்சொன்று செயலொன்றாயிருக்கிறது ! கலியாணமா....அட இழவே !

தாமோ :—வரட்டும் அந்த முதலியார்ப் பயலைப் பலிவைக்கிறேன் ! ஏழைக் குறும்பு என்னிடமா ?

கிட்டு :—அயோக்கியன். பெண்ணை அழைத்து வரப் பணமும் கொடுத்தேன். இருக்கட்டும் வெடிவைப்போம். அடுத்த கடிதம் ?

தாமோ :—(பார்த்து) நீயே படி; கூட்டெழுத்து தெரியவில்லை....முதலியார் எழுதியிருக்கிறார். மணியாடர் ரூபா 15 அவரே அனுப்பியிருக்கிறார்.

கிட்டு :—அடபாவி, அண்ணாவுக்குப் புத்தி சொல்லுகிறான்!

தாமோ :—நமக்கா, நமக்கா? என்ன சொல்கிறான் தேவாரப் பூச்சி?

கிட்டு :—கேளண்ணா, அநியாயத்தை—"சிரஞ்சீவி தாமோதர முதலியாருக்கு ஆசீர்வாதம்."

தாமோ :—சிரத்தைச் சீவிவிடமாட்டேனா இவனை!

கிட்டு :—பொறுமையாய்க் கேளு.

"இத்துடன் தங்கள் மந்திரி கிட்டுவிடம் பெற்ற பதினைந்து ரூபாயும், மணியாடரில் அனுப்பியுள்ளேன். பெற்றுக் கொள்ளவும்." அடப்பாவி, அண்ணா கொடுத்த 140-ம் அவல் போல வாங்கிக்கொண்டு, பதினைந்து என்கிறானே என்ன மோசடி?

தாமோ :—கிட்டிபோட்டு வாங்கி விடுவோம்; நமது பணத்தை மிச்சங்கொண்டு போகவா? வாசி....

கிட்டு :—எனது மகள் வசந்த சுந்தரியைத் தங்களுக்குக் கேட்டீர்கள். எனக்கும் முதலில் அபிப்பிராயம் இருந்தது. தாண்டவராய முதலியாரிடம் எனக்குள்ள விசுவாசத்தால் இணங்கினேன். சென்னையில் விசாரித்ததில், என் மனம் மாறிப்போயிற்று. தங்கள் நடத்தை உலகப் பிரசித்தமா யிருக்கிறது. அவ்வளவு பிரசித்திபெற்றவர்களுடன் பரம ஏழையாகிய அடியேன் சம்பந்தம் செய்யத் தகாதென்று விட்டுவிட்டேன், மன்னிக்கவும்.

வசந்த சுந்தரி, தன் கணவனைத் தானே தேடிக்கொண்டாள். ராஜமாபுரம் மிட்டாதார், நல்ல அறிவாளி, படிப்பாளி, செல்வன், யோக்கியன், பரோபகாரி, தர்ம சிந்தனையுள்ளவன், பரிசுத்தவான் !....

தாமோ :—ஐயோ, ஐயோ ! எரிகிறதே, எரிகிறதே வயிறு வேகிறதே !....

கிட்டு :—வேண்டாம், அண்ணு வேண்டாம். இதோ பனிக்கட்டி - சோடா சாப்பிடு. (தருகிருன்)

தாமோ :—டாம், அந்த ஜக்கம்மாளைச் சுட்டுப் போடுகிறேன். அந்தப் பேயாண்டியைக் கொலை செய்கிறேன். பணம் வாங்கிக்கொண்டு மோசம் செய்தான் ! அந்தக் குட்டிச் சாத்தான் பொம்மையை உடைத்தெறிகிறேன். டாகினியைத் தவிடு பொடி யாக்குகிறேன் !

கிட்டு :—வேண்டாம் அண்ணு ! வேண்டாம் ! அவர்களென்ன செய்வார்கள் ? இந்த அயோக்கியப் பயல்கள் எதிர்மந்திரம் போட்டு, நமது வேலையைக் கெடுத்து விட்டார்கள். கேளு : " அன்று சாந்தோமில், முரட்டு அயோக்கியப் பாவிகளிடமிருந்து தன்னைக்காப்பாற்றிய வீரனையே அவள் மனமுவந்து மணக்கிருள். தங்களுக்குத் திருமணப் பத்திரிகை வருகிறது........ "

தாமோ :—ஐயோ ! என் பிழைப்பைக் கெடுத்தானே ! என் வாயிலே புழுதிமண்ணைப் போட்டானே !

கிட்டு :—அவன் வாயிலே, வருத்த உப்புமண்ணைப் போடுவோமண்ணு : பகதூர் இருக்கிறேன். இந்த முதலியார் கொழுப்பை முதலில் அடக்குவோம். பார் அதிகப்பிரசங்கித் தனத்தை ! " மகாபக்தி

மாஞன் தாண்டவராய முதலியார் பெயரைத் தாங்கள் கெடுத்து வருகிறீர்கள். வேசையும், கள்ளும், தீயார் உறவும், சூனியப் பழக்கமும், குலத்தைக் கெடுக்கும்; நலத்தைக் கெடுக்கும். இத்தீமைகளை இன்றே விடுத்து, 'நல்லவன்'என்று நாலுபேர் மதிக்க நடந்துகொள்ளவும். தாண்டவராய முதலியாரின் பேரிலுள்ள அன்பினுல் இவ்வுரை சொன்னேன். யோசித்து, நன்மை கடைப் பிடிக்கவும்! பெண்ணும் நானும் இன்று ஊர் வந்து சேர்ந்தோம்...."

தாமோ :—என்ன கடைப் பிடிக்கவும்....? முப்ப தாம் பசலித் தமிழ் எழுதுகிருன்.

கிட்டு :—தமிழைப்பற்றிக் கவலையில்லை யண்ணு. நாம் கள்ளா குடிக்கிறோம்? தொடுவோமா?

தாமோ :—அவனுக்கென்ன தெரியும், போர் டோவிலிருந்து நமக்கு நேராக வரும் சரக்குகள்? பிச்சைக்காரப் பயல்!

கிட்டு :—கழுதைக்குத் தெரியுமா வெள்ளைக் குதி ரையின் வேகம்!

தாமோ :—நமது லாவண்யத்தையா வேசை யென்கிருன், ஹா!

கிட்டு:—அவள் காதிற் பட்டால் நாக்கை அறுத்து விட மாட்டாளா?

தாமோ :—கிட்டு (1) இந்த முதலியாரை முதலில் தொலைக்கவேண்டும். (2) அந்தக் கூரைக் குச்சு சாம்ப லாக வேண்டும். (3) அந்தப் பெண்ணை அப்படியே....!

கிட்டு :—அப்படியே அபக் பண்ணி விடுவோம்!

தாமோ:—ஜயகோபாலன், இனி அவளைப் பார்க்க முடியாதபடி செய்யவேண்டும்.

கிட்டு:—சொக்குப் பொடி போட்டு வேலை செய்வோமண்ணு!

தாமோ:—கிட்டு, சொல்லு வழி.

கிட்டு:—சூட்சுமம் ஆகாசக் கம்பெனியில் இருக்கிறது.

தாமோ:—அதற்கு முதல்?

கிட்டு:—பத்திரிகைகளில் விளம்பரம் போட்டுப் புரளி பண்ணுவோம்.

தாமோ:—எப்படி? இரண்டு லட்சமாவது முதல் வேண்டுமே.

கிட்டு:—5 லட்சம் வேண்டும்.

தாமோ:—வழி?

கிட்டு:—இன்றே அச்சிட்டு விளம்பரம் பறக்கட்டும். இதோ அதற்கெல்லாம் எழுதிவைத்திருக்கிறேன்.

ஆகாசக் கம்பெனி

சகலவிதமான ஆகாசவிமானங்களும் செய்து, உலகெங்கும் ஆகாசக்கப்பல் விடும். 5 லட்சம் முதலுடன் ஆரம்பித்திருக்கிறது. லட்சம் ஷேர்களாக அந்த முதல் பிரிக்கப்பட்டுள்ளது. ஷேருக்கு ரூபா 5 தான்.

வேலையில்லாதவருக்கு வேலைவேண்டுமா?

நமது பாரததேசத்தின் வறுமைநீங்கவேண்டுமா?

நாட்டில் தொழிலும் செல்வமும் ஓங்கவேண்டுமா?

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜர்மனி போன்று நமது தமிழ்நாடும் குபேரநாடாக வேண்டுமா ?

உங்களுக்குத் தேசாபிமான மிருக்கிறதா ? தேச சேவை செய்யப் பிரியமா? ஏழைகளை ஆதரிக்க மனமா? எனில், எங்கள் ஆகாசக் கம்பெனியில் உடனே வேண் டிய பங்கெடுத்துக் கொள்ளுங்கள். முந்துங்கள், நல்ல லாபம் ! நல்ல சந்தர்ப்பம் ! எங்கள் கம்பெனி சர்வாதி காரியான மிட்டாதார் T. தாமோதர முதலியார், ஆகாசக் கப்பல் பயிற்சி பெற, சீமைக்குப் போயிருக் கிறார். தக்க பயிற்சிபெற்று, தக்க துணைவருடன் அடுத்த ஜனவரிப் பண்டிகைக்குள் வந்து சேருவார். உடனே வேலைதொடங்கும்" என்று தடபுடலாகப் பத்திரிகைகளில் போட்டுத் துண்டுப் பிரதிகளும் வழங் குவோம். ஆகாயமார்க்கமாக அண்ணு சீமைக்குப் பறந்து போய்விட்டதாகச் செய்தி பறக்க வேண்டும். நமது முகாம், இனி, வேறிடத்தில். இந்தப் பங்களாவில், 'ஆகாசக் கம்பேனி லிமிடெட்' என்று எலெக்ட்ரிக் விளம் பரம் சிமிட்டிக்கொண்டிருக்கட்டும். நான் இங்கிருந்து ஐந்தைந்து ரூபாய் தக்ஷிணை வாங்கி, ஆகாசக் கணக் கெழுதுகிறேன்.

தாமோ:—அதெல்லாம் செய்வோம். நாம் மறைவா யிருக்க, ஸ்ரீரங்கம் பங்களா உள்ளது. லாவண்யம் வீடுள்ளது ; இந்த ராஜமாபுரத்தானையும், இந்தத் தேவாரப் பூச்சியையும் அவமானப் படுத்தவேண்டும். கலியாணம் கலைந்து போகவேண்டும்.

கிட்டு :—இதோ இருக்கிறேன் கலியுக நாரதன்.

தாமோ :—என்னவோ எனக்குத் தெரியாது. பெண் வடக்குத் தெரு பங்களாவுக்கு வந்து சேர வேண்டும்.

கிட்டு : தயார்! புறப்படு. பேயாண்டி, கருப்பன், மலையாண்டி, முத்துராக்கு இவர்களுக்குப் பலமான பானக பூஜை நடத்தினால், வீட்டோடே பெயர்த்துக் கொண்டுவந்துவிடுவார்களே........அதோடே ஜக்கம்மா வேலையும் உள்ளது! புறப்படு. இன்றுமுதல் அண்ணு அஞ்ஞாதவாசம் செய்யவேண்டும்.

தாமோ:—முதலில், "மிட்டாதார் தமோதர முதலியாருக்குத் தங்கள் பெண் அனுவசியம். அவர் ஆகாசக் கம்பெனி விஷயமாகச் சீமைக்குப் பறந்து போயிருக்கிறார். வந்ததும் உங்கள் பேரில் மான நஷ்டிக்காகவும், மோசடிக்காகவும் பிராது போடப்போகிறார். பயமிருக்கட்டும்" என்று தேவாரப்பூச்சிக்கு எழுது.

கிட்டு :—5 மணி தபாலுக்குக் கடிதம் சேரும்.

(போகிறார்கள்)

## காட்சி 2

[இரவு $9\frac{1}{2}$ மணிக்கு சிவஞானம், பூங்கோதை, வசந்த சுந்தரி, மூவரும், தமது குறைதீர்க்க இறைவனருளைப் பாடித் தொழுதல். வசந்தசுந்தரி வீணை மீட்டுகிறாள்]

புழுவாய்ப் பிறக்கினும், புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே,
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய் பாதிரிப் புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே!

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும், மாலை மதியமும்,
வீசு தென்றலும், வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே!

விறகிற் றீயினன், பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான் ;
உறவு கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் னிற்குமே

சிவஞா :—சிவபெருமானே, உன்னருட் பெருமையை யறிந்தோம். நீ அன்பர்க்கன்பன், அடியார் துணைவன் என்னும் உண்மை ஒவ்வொரு நாளும் விளங்குகிறது. இறைவனே, உனது திருவடியே நம்பினோம், நம்புவோம்! ஓம் நமச்சிவாய!

பூங்கோதை :—எம்பெருமான் திருவருளால், மலை போல்வந்த கவலை, பனிபோல் விலகியது.

சிவ :—நமது வறுமை தீர்த்த வள்ளலைப் பணிவாம். நமது அருமை மகளுக்கு, வரனைக் கொடுத்த அரனைப் பணிவாம்.

பூங்கோ :—உயர்ந்த இடந்தான்; ஜாதி வேற்றுமைக்காகத் தான் யோசித்தேன்.

வச :—அம்மா, மனமும் உயிரும் அன்பும் கலந்து ஒன்றான பிறகு, சாதியும் குலமும் என்ன செய்யும்? அம்மா, வள்ளி மணாளன் சாதி பார்த்தானா? சுந்தரர்

சாதி பார்த்தாரா? பரவைக்கும் சுந்தரருக்கும் இருந்த தெய்வக் காதலாலன்றோ சிவனும் தூது சென்றான். அன்பு, உண்மை, நல்லொழுக்கம், ஜீவகாருண்யம் பரோபகாரம் இவை கொண்டவரே மேலோர். செருக்கும் பொறாமையும், ஆசை வெறியும், தீமையும் இழி நடையும் கொண்டவர் கீழோர். தமது உடல் பொருள் ஆவியெல்லாம் பரோபகாரத்திற்கும், தேச நன்மைக்கும் இட்டார் பெரியோர்; சுயநலங் கொண்டு இடாதார் இழி குலத்தோர்.

பூங்கோ:—நியாயந் தானம்மா. தாமோதரன் உருட்டி மிரட்டிக் கடிதம் எழுதியிருக்கிறானே. ஆகாசக் கம்பெனியாம்; சீமை போகிறானும்; வந்ததும் பிராது செய்வானுமே.

வச:—அம்மா, எல்லாம் சுத்தப் பொய்; தடபுடல் கிட்டுவின் ஜம்பம்; அது பலியாது. உன் மாப்பிள்ளை குணக்கடல். அவரிடம் தாமேதர வேலை நடவாது. இவ்வளவு செல்வவான், இவ்வளவு தருமவான், இவ்வளவு அன்புள்ள உபகாரி உலகில் அரிது. அம்மா, நீ அவரை ஒரு முறை பார்த்தால், பிறகு சாதி எண்ணம் ஓடிப் போகும்.

பூங்கோ:—கண்மணி, உன் மனத்திற்குப் பிடித்திருந்தால் சரி. உன்னால் தான் எங்களுக்கு இன்பம். நீ மகிழ்ந்து மங்களமாக வாழ்ந்தால் சரி. உன்னிஷ்டப் படியே நடக்கட்டும்.

வச:—அம்மா, சம்மதித்தால், எல்லாருக்கும் சம்மதமே. அப்பா இந்தக் குடிசை வாழ்வு இன்றுடன் சரி.

சிவ :—நாளை விடிந்தால் ராஜமாபுரம் புறப்படு வோம். மூட்டையெல்லாம் தயார். வண்டி வைத்தா யிற்று. பூங்கோதே, தாமோதரனைப் பற்றிப் பயப் படாதே. அவன் அதோகதியாகப் போகிறான் பார்.

பூங் :—அஞ்சுவது யாதொன்றுமில்லை! அஞ்ச வருவதுமில்லை!

வச :—அதுவே உண்மை! நாமார்க்குங் குடியல் லோம்; நமனையஞ்சோம்! வறுமையால் வாடாது, செல் வத்தால் செருக்காது சமநிலையில் இருப்போம். எல் லாம் வல்ல இறைவன் அடியாரைக் காப்பான். இக் குடிலில் எப்படி எளிமையாக, இறைவனடிபற்றி அன்பு செய்து வாழ்ந்தோமோ, அவ்வாறே ராஜமாபுரத்திலும் வாழுவோம்.

சிவ :—அங்கே நமக்கு ஏராளமான அருட்பணி யுள்ளது. ஜயகோபாலன் ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டுபண்ணுகிறான். எத்தனையோ எளிய குடும்பங்களைப் பாதுகாக்கிறான். அவனது தொண் டில் நாமும் ஈடுபடுவோம்.

பூங் :—தாங்கள் எங்கு எப்பணி செய்கிறீர்களோ, அங்கு தமக்குக் கைபோல் உதவி செய்வதே எனது இன்பம்.

(மணி பத்து அடித்தல்)

சிவ :—மணி பத்து. வசந்தம், சற்றே கண்ணயர் வோம். காலை 5-மணிக்குப் பயணம். நான் திண் ணையில் உறங்குகிறேன். நீ அம்மாளுடன் இந்த ரேழி யில் உறங்கு. அம்மா, இனிக் கவலையற்றுத் தூங்கு வோம்.

பூங் :—புழுக்கமாயிருக்கிறது. கதவு திறந்திருக் கட்டும்.

சிவ :—இருக்கட்டும். ஊரில் கள்ளர் பயமில்லை. நமது குடிலுக்கு யார் வரப் போகிறுர் ?

வச :—அப்பா, வணக்கம் ; தூங்கப் போகிறேன். சிவா ! முருகா !

சிவ :—கண்ணே, சந்தோஷமாக உறங்கு. சிவா, முருகா !

[எல்லாரும் துயில் கொள்ளல்]

## காட்சி 3

[சிவானந்தர் வீட்டுக் கொல்லை. மின் - தீவர்த்தி மினுக் கில், 4 திருடர் ஜாடையுடன் பேசுகின்றனர்—புனை பெயர் பூண்டிருக்கின்றனர். பெயர்—**புலிவேட்டி, மலை மிழுங்கி, குண்டக்கல், அம்மாசே !** உடம்பெல்லாம் ஒரே கறுப்பு ; இருவர் வாள், இருவர் துப்பாக்கி வைத்திருக் கின்றனர். ஒரு பையில் களவுக்கு வேண்டிய ஆயுதங் கள் உள்ளன]

அம்மா :—அடா மலைமிழுங்கி, இந்தா ஜக்கம்மா மருந்து (மூக்கை உறுஞ்சி) தெரியுமா, மயங்கிடுவாள். ஒரே தூக் !

மலைமிழுங்கி:—குண்டக்கல், மதையானையை கூடத் தூக்கிடுவானே. அவனும் நானும் உம்....(தலைப்புறம் **கால்** புறம் என்று ஜாடை காட்டுகிறுள்) புலிவெட்டி,நீ உஷா ராய் வாசல்புறம் ; தெரியுமா ?

அம்மா :—முதலியாரு விழிச்சிக்கிட்டா ?

மலை :—இந்தா துணியை வாயில் அடை. இந்தா கயிறு; கம்பத்திலே கட்டு. மீறிவந்தால் ஒரே கொத்து!

அம்மாசே :—அம்மாளும் பெண்ணும் கூடத்திலே.

குண்ட :—அம்மா வாயிலே துணியடைத்து முதலிலே கட்டிப் போடு. கண்ணையுங்கட்டு.

அம்மா :—அம்மாளுக்கும் மயக்கத்தைக் கொடுத்தால்.

குண்ட :—சவாசடா அம்மாசே! மலை மிழுங்கி, அம்மா மூக்கிலே வை, அப்புறம் மகளுக்கு. மயக்கத்திலே மகளைத் தூக்கு. அட கொல்லைக் கதவு வேலையாச்சா?

புலி :—மண் சுவருதானே, ஒரு தட்டிலே கதவு மல்லாந்திடுச்சு!

குண்ட :—புலிவெட்டி, இங்கே உசார். மோட்டார் அந்தா நிக்கிது. நாம் கொண்டு வச்சு புறப்படுமட்டும் அசையாதே. அங்கே போய் ஊதுரேம். ஒத்தையடிப் பாதையிலே ஓடோடி வந்து ஏறு! வரும் போது, இந்தா இதைக் கூரையிலே சொருகு, பிடிச்சிக்கும்.

புலிவெட்டி :—சரி போங்க, நல்ல சமயம்!

மலைமிழுங்கி :—

முாட்டு முனியாண்டி,
முடக்கருப்பா, நல்லண்ண
திருட்டுப் பலித்து விட்டால்
சேவற் பலிதருவேன்!

[மெல்லக் கொல்லையில் நுழைகின்றனர்; கூடத்திற் செல்கின்றனர்]

## காட்சி 4

[பூங்கோதையும், வசந்த சுந்தரியும் அயர்ந்து உறங்கல். அம்மாசே, பூங்கோதையின் மூக்கில் மயக்க மருந்தை வைக்கிறான். பிறகு வசந்த சுந்தரி மூக்கில் வைக்கிறான். வசந்த சுந்தரி சற்று விழித்து, பிறகு மயங்கி விழுகிறாள்]

குண்ட :—(தலைப் பக்கம் நின்று ஜாடை காட்டல்) உம், கிளப்பு ! ஏல கருப்பண்ணேன் !

மலைவிழு :—ஏலேல வீராயி !

(தூக்கிச் செல்லல்)

[சிறிது நேரத்தில் வீடு தீப்பிடிக்கிறது]

பூங்:—(மயக்கந் தெளிந்து) ஐயோ சிவனே! சிவனே! வீடு எரியுதே ! வசந்தம் ! ஆ, வசந்தம் எங்கே ! (வாசலுக்கு வருதல்)

சிவ ;—உ அ-ஊ....! (வாயில் துணி ; தூணில் கட்டிருக்கிறது. பூங்கோதை துணியை எடுத்துக்கட்டவிழ்க்கிறாள்) ஆ ! கள்ளர், கள்ளர் என் மகளைத் தூக்கிச் சென்றனர் ! ஐயோ ! சிவனே ! த்ருபுராந்தகா ! என் வீடு வேகுதே ! மகள் போனாளே ! பூங்கோதை, வா, ஓடிப் பார்ப்போம் ! இந்த வழிதான் போனார்கள் ! இங்கொரு திருடன் இருந்தான். பொலீஸில் சொல்லுவோம். மாப்பிள்ளைக்குத் தந்தியடிப்போம்.

(இந்த மூட்டைகளை வாசலில் எறி)

[திரைக்குப் பின்னால் பலர் குரல் "எங்கே, எங்கே, பிடி, தாத்து அடி" என்று சத்தம் கேட்கிறது.]

## காட்சி 5

[இராஜமாபுரம் ; ஜயகோபால் மாளிகைமுன் கலியாணப் பந்தல் ; சாமண்ணு, ஹுஸேன், ஜயகோபால் மூவரும், கலியாண ஏற்பாடுகளைப் பற்றிப் பேசுதல்]

ஹுஸேன் :—ஜயகோபால், பந்தல் எப்படி ?

ஜய :—உன் அன்பு அமைத்த பந்தல், அழகின் வசந்தச் சோலை போலத்தா னிருக்கும். மஹான்களையெல்லாம் கலியாணத்திற்கு அழைத்து வந்து விட்டாய் ! பரமஹம்ஸர், விவேகானந்தர், ராமதீர்த்தர், ரமண மகர்ஷிகள், அரவிந்தர், ரவீந்திரர், மஹாத்மா, திலகர், வள்ளுவர், ஔவை, கம்பர், தியாகப்ரம்மம், வேமனு, துளசிதாஸ், கபீர், நானக், குரு கோவிந்தர், ராம்தாஸ், சிவாஜி, சைதன்யர், ஏகநாதர் செய்ண்ட ப்ரான்ஸிஸ், ஜரதுஷ்ட்ரர், புத்தர், கண்ணன், சங்கரர், ராமானுஜர், மத்வாசாரியார், அப்பர்........ சிவன், முருகன், கண்ணன், ராமர் எல்லாரும் நம்மைச் சுற்றி யுள்ளனர். காபா, பிறை இரண்டையும் அழகாக அமைத்தாய். அற்புதப் பந்தல் ! பஹுத் அச்சா.

(முதுகில் தட்டிக் கொடுக்கிறுன்)

ஹுஸேன் :—என் வேலை பந்தலோடுதான். சாமண்ணு வேலை அபாரமானது.

ஜய :—சாமண்ணு பீமண்ணு ! நான்கு நாளில், அவன் ஆறு மாத வேலை முடித்திருக்கிறுன். எல்லாக் காரியங்களையும் நமது நண்பரே நிறைவேற்றினர்.

சாம :—சமயல் சாப்பாடுகளுக்கு நல்ல ஏற்பாடு ; நந்தனர் உக்கிராணி. டாக்டர் நாராயணன் ஹரிஜன

மாணவருடன் சமயற் கட்டில் இருக்கிறூர் ; பரி மாறுவதற்கு ராமானுஜம் கோஷ்டி !

ஹஸேன் :—என், நான்தான் மிட்டாய் தினிசுகள் பரிமாறுவேன் !

ஜய :—அச்சா ! உனக்கேற்ற இனிய வேலே ! சாமண்ணு, சங்கீதத்திற்கு முதலியார் போதுமா, வேறே........

சாம :—முதலியார் திருப்புகழும், தேவாரமும் வெகு இனிமையாயிருக்கின்றன. உனது மனைவியின் பாட்டு சொல்லவேண்டியதில்லே. அருள் பெற்ற மஹான்களின் பாடலே நமக்கு வேண்டும்.

ஜய :—உனது மனைவியும், இனிமையாகப் பாடுவாளாம்.

சாம :—சரி, எல்லாரும் கேட்கலாம் ! அந்த இலாகா உன் மாமனுரைச் சேர்ந்தது.

ஜய :—வேறென்ன ? விருந்தினரை உபசரிக்க டேவிட் பால் இருக்கிறூர். அவர்களுக்கு ஜாகையெல்லாம் செளகரியந்தானே !

சாம :—எல்லாம் தக்கபடி அமைந்தன. சுமார் 300 பேருக்கு 30 வீடுகள். நமது வீரர் 50 பேர் அங்கங்கு இருந்து விருந்தினரைக் கவனிப்பர்.

ஜய :—சாமண்ணு, நான்கு நாட்களும், சுமார் 8000 ஏழைகளுக்காவது சாப்பாடு போடவேண்டும். பெண்களுக்கு 12 முழப் புடவையும், ஆண்களுக்கு 6 முழ வேட்டி 4 முழத் துண்டும் தரவேண்டும். அது ஹஸேன் பொறுப்பு. முன் பணம் கொடுத்தாயிற்று.

ஏழைகளின் வாழ்த்தொலி கேட்கவேண்டும். அவர்களுக்குச் சில நல்லுரை சொல்லப்போகிறேன். அத்தனை பேரும் வேலை செய்ய இஷ்டமானால், இதோ 300 ஏகர் வெட்ட வெளி; அதில் குடி ஏற்றித் தொழில் செய்து பிழைக்கச் செய்கிறேன்!

ஹுஸேன் :—ஐயம், உனது மனம், புத்தர் மனம் போலக் கருணைவெள்ளமாயிருக்கிறது. நாங்களெல்லாம் அந்த வெள்ளத்திற்கு வாய்க்கால்களா யிருக்கிறோம்.

ஐய :—செய்தது துளி; செய்யவேண்டியது கடலள வுள்ளது.

சாம :—நமது மூச்சுள்ள மட்டும் எல்லாரும் ஒரே குடும்பமாக, பரோபகாரம் செய்து வாழுவோம்!

ஐய :—இறைவன் அருளுக! ஏற்பாடெல்லாம் சரி தானே!

ஹுஸேன் :—அச்சா; பெண் வீட்டுக்காரர் வரவேண்டியதுதான் தாமதம்.

ஐய :—இன்று காலை புறப்பட்டிருப்பர்; நண்பர் நாளைவருவர்............(வருதல் ராமாநுஜம்) ஏமப்ப ராமாநுஜம்!

ராமா :—ஐய! தந்தி வச்சினதி!

ஐய :—(அவசரமாய் உடைத்து) ஹா! என்ன! தெய்வமே! ஹ!........

ஹுசேன் :—என்ன செய்தி! (தந்தியைப் பார்க்கிறான்) ஹா, எந்த ஷைதான் வேலை!!

" திருடர்! வீடு வெந்தது! வசந்தா தூக்கிச் செல்லப்பட்டாள். உடனே வருக.

சிவஞானம் "

சாம:—என்ன ஆபத்து! கைக் கெட்டியது வாய்க் கெட்டவில்லையே! ஹா..........

ஜய:—இருக்கட்டும். இன்பமும் துன்பமும் வாழ் வாற்றின் இருகரைகள்......

நல்லது வந்திட்டாலும், நாமெதிர் பாரா வண்ணம்,
பொல்லது வந்திட்டாலும், பொறுமையை யிழந்திடாமல்,
எல்லையிற் கருணையாகும் இறைவனை யெண்ணி, மெய்யால்,
அல்லலை;வெல்வோம்;என்றும் அஞ்சிடோம்;அன்புசெய்வோம்!

புறப்படுங்கள் உடனே.

ஸுபேன்:—ஜயகோபால், இது சபதம்: வசந்த சுந்தரியைக் கண்டுபிடித்துத்தான் இனி உன்னைக் காண்பேன்! என்னுயிர் போனாலும் சரி! நீ இங்கிருந்து காரியங்களைப் பார்.

சாம:—ஜயகோபால், சந்தேகம் வேண்டாம். இது தடித் தாமோதரனும், தடல்புடல் கிட்டுவும் செய்த காரியந்தான்.

ஜய:—தாமோதரன் சென்ற வாரமே ஆகாசக் கம்பெனிக்காகச் சீமைக்குப் புறப்பட்டானாம். பத்திரிகைகளில் பிரமாதப்படுகிறது.

சாம:—இதெல்லாம் பத்திரிகை உடான்! புறப்படு திருவொற்றியூர்; வழி சொல்கிறேன். டேவிட்பாலையும் கூட்டிச் செல்வோம்.

ஜய:—முதலியாருக்கு ஆறுதல் கூறுவோம்; பரம்பொருளே துணைசெய்!

(செல்லல்).

# அங்கம் - 5

## காட்சி 1

[ஒரு காடு; குண்டடக்கல், மலே விழுங்கி, அம்மாசே, புலி வெட்டி கரிபூசாமல் இயல்பா யிருக்கின்றனர். நிரம்பக் குடித்துக் களிக்கின்றனர்]

அம்மா :—ஹ, ஹ, ஹ-குண்டன் வேலே சரியான வேலே!

குண்ட :—புலிவெட்டி ஷக்கே போடு போட் டான்!

புலி :—அடெலே, காட்டிக் கொடுத்திடாதே! மனசு பக்கு பக்கிங்கிறதடா!

குண்ட :—அட இதென்னடா பிரமாதம்! கூரைக் குச்சு. எசமானுக்காக இணங்கிேேனும்! ஐயரும் உண் டனக் கொடுத்தாரு. பெரிய பெரிய இடங்களே யெல் லாம் பார்த்திருக்கிறேம்.

மலே :—இருந்தாலும், இந்த இடம் பொல்லாதடா! இராசமாபுரம் மிட்டாதார் எடுத்த பெண்ணுமல்லே. கண்டால் கண்ணேப் பேத்திடுவார்!

குண்ட :—அட போடா, அந்த மிட்டாதாரை மாட்டிவைக்க எசமான் வேலே செய்யருர் பாரு.

மலே :—இனிச் சாகை சீ........

அமா :—உஷ் பேசாதே! மனஸிலே வச்சிக்க!

மலே :—அடே யாரடா அறியப்போருன். எசமாங் தான் சீமைக்கிப் போயிருக்கிருரின்னு பேப்பர் வந்தி டிச்சே!

அமா :—இருந்தாலும் ரகசியமடா! காத்து வாக்கிலே தெரிஞ்சிடும்.

மலே :—உனக்கு நிரம்பத் தெரியுமோ ?

அமா :—உனக்கு என்ன தெரியும் ?

மலே :—எனக்குத் தெரியாத கொலே, களவு இந்தச் சில்லாவிலே இருக்குன்னு நினேக்கிருய் ?

மலே :—நான் மலே மிழுங்கி.

அமா :—நான் ஆள் மிழுங்கி

குண்ட :—நான் பணம் மிழுங்கி.

புலி :—நான் புலி. உங்களெல்லாரையும் சேர்த்து விழுங்கிடுவேன். உசார்தேகோ !

குண்ட :—மகா மனிசன். வா ஒரு கை.

புலி :—பார் ; உன் குடலே எடுத்து மாடக் கருப்பனுக்கு மாலே போடுகிறேன்.

(இருவரும் சண்டைசெய்தல்; ஒரு போலீஸ் ஊது கேட்கிறது)

மலே :—அட, போலீசுடா....ஓடு - ஓடு....

(ஓடி ஒளிகின்றனர்)

[வருதல் : கிராமத்தார்போன்ற மாறுவேடம் போட்டு டேவிட், ஹுஸேன்]

டேவிட் :—கால் தடம் இங்குதான் வருகிறது. சுற்றிப் பார்ப்போம்.

ஹுஸேன் :—இந்தப் பொன்னேரிக் கள்வர்தாம் தடையில்லே........மிஸ்டர் டேவிட், தைரிய மிருக்கிறதா?

டேவிட் :—இல்லாதென்ன ? வெளியாகு மட்டும், பேச்சு மூச்சில்லாமல், சமயத்திற்குத் தக்க வேஷம் போட வேண்டும். பலமான வேலே நடந்திருக்கிறது.

ஹூஸேன் :—பாவம், முதலியாரும் அந்த அம்மா ளும் அலறித் தவிக்கின்றனர். ஜயகோபால் எவ்வளவு ஆறுதல் சொல்லியும் பயனில்லை.

டேவிட் :—ஜயகோபால் சோர்ந்து போனான்.

ஹூஸேன் :—ஏற்கெனவே வேதாந்தி ; இந்தச் சம்பவத்தின் பிறகு மனம் மாறித்தா னிருப்பான். அதோ காட்டில் காலடிச் சத்தம் கேட்கிறதே! ஓடிவா.

(ஓடுதல்)

## காட்சி 2

[வசந்த சுந்தரியின் உருவப்படம். அதன்முன் ஜயகோபால் சோகமுற்றுப் புலம்பல்]

வெண்ணிலா வுனது மூரல் ! விரிமலர் வனமுன் காட்சி !
தண்ணிளங் காற்றுன் சொற்கள்! தாமரை யுனது கைகள் !
கண்ணுளே மணியேயுன்னைக் காண்கின்றேன்;எங்குங்காணேன்
பெண்ணுளே மணியே உன்னைப் பெற்றது மிழந்தே னந்தோ!

என் கண்ணே ! என் மனக்கோயிலில் விளங்கும் அழகுத் தெய்வமே, உன்னைப் பெற்றதும் இழக்க நேர்ந்ததே ! பசித்தவன் கனியைக் குரங்கு கௌவிச் சென்றது போலிருக்கிறதே ! அழகமுதமே, உன்னைக் காணுமுன் கவலையற்றிருந்தேன் ; உன்னைக் கண்டு கொண்டதும் வசந்தக் கனவுகள் கண்டேன் ! ஆ, உன்னைப் பிரிந்ததும், மாரியால் வருந்துகின்றேன்! மிகப் பொலிவு கொண் டெரிந்து, பக்கென்று அணைந்த விளக்குப் போன்றது என் இன்பம்! உன் இளநகை யின்றி மனம் இருண்டது. உனது இன்சொல்லின்றி, வீணையும் புளித்தது. நீ என்னருகில் இல்லாது வாழ்

வும் கைத்தது! உன் பரிசமின்றி இத்தென்றலும் தீயம்பு போலிருக்கிறது; உன் மலர் முகம் பாராமல், மலர்களும் முட்கள் போல் உறுத்துகின்றன. சூரியனில் ஒளியில்லை; சந்திரனில் குளிரில்லை; மலரில் நகை யில்லை, பாலிற் சுவையில்லை, வாழ்வில் இன்பமில்லை - வசந்தமே, நீ யின்றி நானில்லை! கதிரின்றிக் கதிரவ னில்லை! சுந்தரீ, என் வாழ்வை வசந்தப் பூஞ்சோலை யாக்கினை! உன்னைப் பிரிந்து, இருண்ட புயல்வானம் போலானது வாழ்வு.

மலரும் மணமும் போல், அழகும் குணமும் அமைந்த அற்புதமே, நீயின்றிப் பாதியுடல், பாதி உயிர் இழந்தேன்! தந்தியின்றி வீணைபேசுமோ? அரு ளின்றி ஆடலுண்டோ?

ஈசனே, இயன்ற மட்டும் தேடிப்பார்த்தோம்! எனது இன்பமணியைக் கள்வர் எங்கே கொண்டு போய், என்ன செய்தனரோ தெரியவில்லை. அவள் அருகிலிருந்தால், நூறு மடங்கு உற்சாகத்துடன் பொது நலப்பணி செய்வேன். ஈசனே, என்பாதியை ஏன் பிரித்தாய்? காதலன் அழுகிறேன்; ஈன்றவர் கண் ணும் கண்ணீருமாகத் தவிக்கின்றனர், மணியிழந்த நாகம் போல் பதறுகின்றனர். வள்ளலே, நாங்கள் செய்த பிழையென்ன?

அன்பரை வஞ்சித் தேமோ, அறவினை தடுத்திட் டோமோ?
வன்கொடுங் கோலர் போல மக்களை வருத்தி னோமோ?
என்பிழை செய்தோம் ஐயா! ஈசனே! எமது வாழ்வின்
இன்பத்தை யொளித்து வெய்ய துன்பத்தை யீந்த தேனோ!

இறைவ, உலகில் இதென்ன அதிசயம்? பாண்ட வர் வருந்தலேன்? பாவிகள் ஆள்வதேன்! உயிர்களைக்

கொன்று குவிக்கும் கொடிய அரக்கர் வெற்றி முரசடிப்பதேன்? பொறுமையுள்ள தரும வீரர் நாடிழந்து, வீடிழந்து தவிப்பதேன்! ஈசனே உனது திருவிளையாட்டின் இரகசியம் யாருக்குப் புலனாகும்?

அடியவர் வருந்துகின்றார்; அறிவறியாத மூடக்
கொடியவர் வருத்துகின்றார்; குணமிகு நல்லோரிங்கு
மிடியிருளடிமையாலே மெலிவதேன்? உயிர்கட் கெல்லாம்
படியளந் தெங்கு மொன்றாய்ப் பரவிய கருணை வள்ளால்!

(வருதல் ராமாநுஜம்)

ராம:—ஐய, காயிதம் வச்சினது.

(கடிதம் தந்து செல்கிறான்)

ஐய:—(உடைத்துப் பார்த்து) இதென்ன வியப்பு, வசந்த சுந்தரியின் கடிதமா? கையெழுத்து, சரிதான்!

"என்னருமைக் காதல!

இக்கடிதம் கண்டவுடன் வண்ணாரப்பேட்டை டிராம் முனையிலுள்ள, 101-வது எண் வீட்டிற்கு வரவும். இரவு 10 மணிக்குத் தங்களை எதிர்பார்க்கிறேன். தங்களைக் காணாவிடில், உடனே தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து போவேன். கள்ளரிடமிருந்து தப்பி இங்கு மறைந்திருக்கிறேன். நான் தப்பிப் பிழைத்து இங்கு வரப் பெருந்துணை செய்த ஒரு நண்பருக்கு ரூபா 500 வாக்களித்துள்ளேன். அந்தத் தொகையும் கைவசம் கொண்டு வருக. மற்ற விவரங்கள் நேரில் பேசிக்கொள்ளலாம். தாங்கள் மட்டும் தனியே வரவேண்டும். பேதையினிடம் தங்களுக்கு உள்ளன்பிருந்தால், இரவு பத்து மணிக்கு வந்து

இன்பந்தருக. இன்றேல், இக்கடிதத்தையே எனது இறுதி மொழியாகக் கொள்ளுக.

ஆருயிர்க் காதலி,

வசந்த சுந்தரி.

கண்மணீ, புறப்பட்டேன்! வருகிறேன். 'ரூபா 500, தனியே வரவேண்டும்'....இரண்டிலும் சந்தேகமிருக்கிறது. வந்து அழைத்துச் செல்லுங்கள் என்று ஒன்றும் எழுதவில்லை. இது உண்மைக் கடிதமா? பகைவர் சூழ்ச்சியா? கையெழுத்து அந்தப் பொன்னெழுத்துத் தான். அந்த இடத்தில் தமிழ்க் கையச்சு ஏது?........... இருப்பினும் செல்வோம். வஞ்சகர் சூழ்ச்சியாகுலும், எதிர்த்து வெல்வோம். வசந்த சுந்தரி அங்கில்லாவிடினும், அவளைப்பற்றி ஏதாயினும் துப்பறியலாம். பரம் பொருள் துணை! (செல்கிறான்)

## காட்சி 3

[ஜயகோபால் குறித்த வீட்டிற்கு வருகிறான். அது ஒரு மாளிகை. (ஒருவன் வெகு மரியாதையாக வரவேற்று, ஒரு அலங்காரக் கூட்டத்தில் அமர்த்திச் செல்லுகிறான். கூடம் சலவைக் கல்லால் இழைக்கப்பட்டது. கிருஷ்ண லீலை, மன்மதன், கோபிமார் முதலிய படங்கள்; அலங்காரமான சோபா; நாற்காலிகள்; வில் கட்டில் (Spring Cot) கள்; ஒரு வட்டமேஜைமேல் தங்கத்தட்டில் கனிகள்; மலர்கள்; தங்கக் கிண்ணத்தில் பால், கூஜாவில் காப்பி, தேயிலை; நாற்புறமும் பெரிய நிலைக்கண்ணாடிகள் உள்ளன. ஜயகோபால் இதைத் தாசி வீடென்றறிகிறான்]

ஜய :—ஆ எண்ணியது சரி; வஞ்சகர் மோசமே; இது தாசிவீடன்றோ! தப்பிச் செல்ல வழி? இந்த

அலங்கார நரகத்தில் சிறைப்பட்டுள்ளேனே. தெய்வமே, வேசைப் படுகுழியில் விழாது காப்பாற்று; மாயையை வீரவுறுதி கொண்டு வெல்லத்துணை செய். சுத்தனே, பரமாத்மனே, ஜீவசாக்ஷியே, உலக மாயத்தை வெல்ல வைராக்கியக் கனலருள். எனது சித்தவுறுதியாலும், பொறுமையுள்ள நன்மொழியாலும், இந்த வேசையைத் திருத்தி, விலை வாழ்வை யொழிக்க அருள். வசந்த சுந்தரீ, உனது கற்பு என்னைக் காக்கட்டும்.

காமனை எரித்த கனல் விழியே, துணை !

[தியானிக்கிறான். சிறிது மௌனம்; பிறகு யாழும், குழலும், மிருதங்கமும், பொற்றாளமும், கிண்கிணியும் கேட்கின்றன. பிறகு குரல், நடனம்]

நாட்டை—ஆதி தாளம்

பல்லவி

வரவேண்டும்—துரையே—என் மனக்குறை தீர (வரவேண்).

[சிறிது பாட்டு நிற்றல்; பிறகு, யாழ் குழல் மட்டும்; ஒரு திரை திறக்கிறது; பொன்னும் முத்தும் வைரமும், ஜரிகைப் பட்டணியும், மாலையும் குலுங்க, கையில் ஒரு ரோஜாமாலை யேந்தி, லாவண்யம் பாடி யாடிப் புன்னகை பூரித்து வருகிறாள்]

லாவண் :—

வரவேண்டும்—துரையே—என் மனக்குறை தீர... (வர).

[ஆடிப்பாடி மாலையைச் சூட்டுகிறாள். ஜயகோபால் மாலையைக் கையில் வாங்கி, எதிரேயிருக்கும் கிருஷ்ண படத்திற்குப் போடுகிறான். நடக்கிற கூத்தெல்லாம் நடக்கட்டுமென்று, மனத்தை அடக்கி மௌனமாயிருக்கிறான்.

*அவள் தன்னைத் தொடுவதைமட்டும் தடுத்துக் கொள்ளுகிறான். லாவண்யம் சதுராடி மோகவலை வீசுகிறாள்]*

லாவண் :—

*அநுபல்லவி*

*தரவேண்டும்—தங்க மலர்க்கைகள்.........*
*தாகந் தணியக் கட்டித் தழுவி யின்பமுற (வரவேண்)*

*[தழுவ வருகிறாள்; ஜயகோபாலும் அவள் நாட்டியத்திற்குத் தக்கபடி வளைந்துசென்று, தப்பித்துக் கொள்ளுகிறான்]*

ஜய :—*நிறுத்து உன் பாட்டை; மோகப்பேயே, எட்டி நில்!*

லாவண்:—*அரசே, துரையே! நெடுநாளாகத் தங்கள்மீது மோகங் கொண்டேன். இன்றுதான் தங்கள் அருள் கிடைத்தது. இனித் தாங்களே கதி.*

ஜய : *சகோதரி, தெய்வத்தைக் கதியென நம்பு; விலை வாழ்வை விடு; குல மகளாக வாழு.*

லாவ :—*என் துரையே, தங்களுடனே வாழுவேன். காதலெல்லாம் தங்களிடம் வைத்தேன். இன்பமணாளா........*

ஜய :—*சகோதரி, என் மேல் காதல் வைக்க வேண்டா. இறைவன் மேல் காதலை வை. என்னை வஞ்சியாதே.*

லாவ :—*அரசே, நான் வஞ்சியேன்! தங்களைத் தஞ்சம் புகுந்தேன். மோகத்தால் தளர்ந்தேன்! துரையே, இன்பந்தருக! இப்படிப் பஞ்சணையில் அமர்க!*

ஜய :—*இது பஞ்சணையல்ல; மாந்தரைப் பஞ்சையாக்கும் நோய்ப் படுக்கை!*

லாவண் :—மணுளா, என்னைக் காதலித் தின்புறும் !

ஜய :—நான் காதலிப்பது ஒரு கற்பரசியை—வசந்த சுந்தரியை. அவள் கையெழுத்திட்டு ஒரு கடிதம் வந்தது. நீதாணு அதை எழுதியவள் ?

லாவ :—ஐயோ யானறியேனே ! ஸாமீ, தங்கள் மேல் நெடுநாளாக மோகங்கொண்டேன். தங்களைப் பல முறை சென்னையில் பார்த்துள்ளேன். நாணத்தால் நெருங்கவில்லை. இன்று தெய்வத் திருவருளே தங்களைக் கொண்டு சேர்த்தது. அரசே, என்னை மணம் புரிக; சுகமாக வாழுவோம் !

ஜய :—என்னை மணப்பது ஒரு கற்பரசி ; உன் எண்ணம் பலியாது.

லாவ :—என் இன்பக் காதல, நான் உயிர் வைத்திருக்க வேண்டுமானுல், இப்படி யமர்ந்து எனது உபசாரங்களை ஏற்றருளும். இதோ பால், அருந்தும்.

(பாலை ஆற்றித்தருகிருள் ; ஜயகோபாலன் மறுக்கிருன்)

ஜய :—இரவு ஏழு மணிக்குமேல் யான் எதுவும் உண்பதில்லை.

லாவ :—என் கையினுல் இந்தத் தங்கக் கிண்ணத்திலுள்ளதை மட்டும்....

ஜய :—உன் கையையும் விரும்பவில்லை ; உன் கையால் தருவதையும் விரும்பவில்லை. எட்டி உட்கார்.

லாவ :—ஆசைக் காதல, தாங்கள் என்னை வெறுத்தால், ஏழை எந்தக் கதி யாவது? ஒரு முத்தம் (பலாதகாரமாக முத்தமிடுகிருள். இச்சமயம் திடீரென்று ஒருவன் (கிட்டு)

வந்து காமிராவை அழுத்தி மறைகிருன்) கண்ணளா! இந்தப் பாலைக் குடித்துத்தான் ஆகவேண்டும். கிளி போன்ற என்னை வெறுக்கலாமா? நான் அழகிற் குறைவா, அன்பிற் குறைவா?

ஜய :—ஈசனே,

துன்பங் கொண்டங்க மெலிந்தற,
நொந்தன்பும் பண்பு மறந்தொளி
துஞ்சும் பெண் சஞ்சல மென்பதி—லணுகாதே
இன்பந்தந் தும்பர் தொழும்பத
கஞ்சந்தந் தஞ்ச மெனும்படி
என்றென்றுந் தொண்டு செயும்படி—யருள்வாயே!

லாவ :—கண்ணளா, சட்டையெடுங்கள், உடல் குளிரச் சந்தனம் பூசுகிறேன்; அது உலர வீசுகிறேன்!

ஜய :—வேசையே, நின் பூச்சும், வீச்சும், பேச்சும் வஞ்ச வலைகள். என் வசந்த சுந்தரியை நாடி வந்தேன். இது வஞ்சகர் சூழ்ச்சியென் றறிந்தேன். இங்கும் ஒரு கடமையுள்ளது; செய்து செல்லுகிறேன்.

லாவ :—அதெல்லாம் நடவாது. தாங்கள் இங்கே தான் இருக்கவேண்டும்; என்னையே காதலிக்க வேண்டும். என் இன்பத் துரையே, துரையே, துரையே.

ஜய:—சகோதரி, எட்ட நில். பலாத்காரம் நடவாது. நான் கேட்பதற்குப் பதில் சொல். சகோதரி, உனக்கு நன்மையான மொழிகளைச் சொல்லுகிறேன். இன்னும் இந்த விலைநரகில் விழாது, நீ உய்யும் வழியைச் சொல்லுகிறேன். உன்னை எனது சொந்தத் தங்கையாகப் பாவித்து, இதமொழி கூறுகிறேன்! சகோதரி, உனது அழகும் நகையும், மினுக்கும், பூச்சும் ஒரு சிறிதும்

என்னை மயக்கவில்லை. இவ்வளவு அழகும், இனிய குரலும், அறிவும் கொண்ட எனது தமிழ்நாட்டுப் பெண் மணி ஒருத்தி, இப்படி விலைமகளாகி, நரக வாழ்வு வாழு கிறுளே என்று பச்சாதாபப்பட்டுச் சொல்லுகிறேன். சகோதரி, அப்படி உட்காரு.

லாவ :—(திடுக்கிடுக்கிருள் ; ஓர் அச்சம் பிறக்கிறது) ஆ, நமது மாயவலையிற் சிக்காதவர் இல்லை. இவர் அபூர்வ மான மஹானுகக் காண்கிருரே. சீ, இவரிடம் வஞ் சனை பலியாது. இவர் எனது குருநாதன். ஐய, சொல் லுங்கள் கேட்கிறேன்.

ஐய :—சகோதரி, உள்ளத்தில் கைவைத்துச் சொல் ; உனக்கு இத்தொழில் நல்லதென்று படுகிறதா ? இன்பமா யிருக்கிறதா ?

லாவ :—(கண்ணீருகுத்து) குருநாதா, வேசை வாழ்வு மோசமே ; நரகமே. ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஐய :—சகோதரி, உன் மேல் மினுக்கும், ஒவ் வொரு பொன்னும், வைரமும், எத்தனை குலங்களைக் கெடுத்து அழிநகை புரிகின்றன ? யோசித்துப் பார் ; நீ எத்தனை பேரை வஞ்சித்தனை ? உன்னுல் எத்தனை மனைவியர் பரிதவிக்கின்றனர் ? எத்தனை ஆடவர் உன் னுல் உடலும், பொருளும் இழந்து, வறுமையானுர் ? எத்தனை பேருக்கு மாயவெறி யேற்றி அறிவைக் கெடுத் தனை ? உன்னுல் எத்தனை பேர் காசமும், சூலையும், புண் ணும், மெலிவுமுற்று, எமன் வாய்ப்பட்டனர் ? சகோ தரி, எத்தனை பேர் உன்னுல் குடி பழகிக் குடியோடு கெட்டனர் ? சகோதரி, எத்தனை பேர் உன்னுடன் சூதாடிச் செல்வ மிழந்தனர் ? எத்தனை வாலிபர் உன்

மோக வலைப்பட்டு, இளமையின் சக்தியை உனக்குப் பலியிட்டு நடைப்பிணமாயினர்? நான் சொல்வது உண்மையா, பொய்யா?

லாவ :—உண்மைதான், நான் கொடியவள் தான்; குடித்தேன்; குடிகெடுத்தேன்; வஞ்சத்தால் பலரைப் பஞ்சையாக்கினேன்.

ஐய :—சகோதரி, உன் மனச்சாட்சி இவ்விலை வாழ்வை ஒப்புகிறதா!

லாவ :—ஆ, மனச்சாட்சி என்னைச் சுடுகிறதே!

ஐய :—ஆம் உனக்கும் ஒரு மனச்சாட்சி உள்ள தல்லவா? சகோதரி, என்னை உனது தமயனாகக் கருது. உனது தளுக்கு மினுக்குகள், மாயா ஜாலங்கள் எல்லாம் பிள்ளை விளையாட்டாக நினைத்தேன். உன் வலையை அறுத் தெறிந்தேன்; உன்னிடம் அளவற்ற இரக்கத்தால் சொல்லுகிறேன், கேள். நீ புத்திசாலி யாயிருக்கிறாய். இவ்விலை வாழ்வு நரகவாழ்வென உணர்கிறாய்; உனக்கு இதில் விருப்பமில்லை. சகோதரி, உண்மையைச் சொல்லு. நீ ஓர் இளம்பெண். உனக்கு 25 வயதிருக்கலாம். உன்னைக் காதலிக்கும் ஒரு நல்ல கணவனைக் கட்டிக்கொண்டு, ஒழுங்கு முறையாக இல்லறத்தில் வாழுவது நல்லதா, அல்லது, இப்படிப் பல மனிதரை வஞ்சித்துப் புணர்ந்து, குடிகளைக் கெடுத்து நீயும் கெட்டுத் திரிவது நல்லதா? குலவாழ்வா, விலை வாழ்வா-எது மேல் என நினைக்கிறாய்?

லாவ :—ஆ மனச்சாட்சி என்னை வாளால் அறுக் கிறதே! எனது குருவே, குலவாழ்வுதான் மேல்; ஐயோ எனக் கந்தப் பாக்கிய மில்லையே! (அழுகிறாள்)

ஜய :—சகோதரி, உன்குரல் மிகவும் இனிமையா யிருக்கிறது. அதனால் கேவலம் சிற்றின்பப் பாட்டுகள் பாடி மாந்தரைக் கெடுப்பது நலமா, அல்லது, இறைவன் புகழைப் பாடி அவனருளைப் பெறுவது நலமா ?

லாவ :—ஆ, என் ஸத் குருவே, இனி என் குரல் இறைவனையே பாடும்.

ஜய :—சகோதரி, உடலை இத்தனை முத்து வைரங்களால் மினுக்குகிறாயே; இவற்றால் இவ்வுடல் நரை திரை மூப்புற்றுப் பிணமாவதைத் தடுக்க முடியுமா ? எவ்வளவு நகை மினுக்கினாலும், பிணவுடல் மணவுடலாகுமா ? சகோதரி, நீ குல மகளானால், சாதாரணமாக ஒரு சுதேசிப் புடவை ரவிக்கை யணிந்து, குங்குமப் பொட்டிட்டு, மலர் முடித்து, கணவனுக்கு அடங்கி நடந்தால் இன்புறுவாயன்றோ ?

லாவ :—ஆமாம், குருவே, ஆமாம் ! இந்த நகையைச் சுமப்பது பிணவுடலே; அவ்வுடல் விலை வாழ்வால் பிணி சுமக்கிறது ; பிறருக்கும் பிணியொட்டுகிறது !

ஜய :—உன் அழகும் பூச்சும் மாயந்தானே ?

லாவ : ஆமாம், மாயந்தான்.

ஜய :—சகோதரி, நமது தமிழகம், கற்பிற் சிறந்த உத்தமிகளின் நாடு ; பெண்கள் பெண்மைக்கும், ஆண்கள் ஆண்மைக்கும் புகழ்பெற்ற நாடு. நீயும் ஒரு தமிழ்ப் பெண் ; உனது நரம்பில் தமிழ் ரத்தம் ஓடுகிறது. நீ என் சகோதரி. என் சகோதரி இப்படி வேசையாகக் காண்பேனா ? எனது நாட்டு நங்கை ஒருத்தி, இவ்வாறு

குடித்து, பலரைக் கெடுத்து, விலைவாழ்வு வாழுவது, எனக்கே அவமானமல்லவா ? நளாயணியும், அருந்ததியும், சீதா தேவியும், சாவித்திரியும், பத்மாவதியும், ஒளவையும், வாசுகியும், கஸ்தூரி பாயும் உதித்த ஹிந்து தேசத்தின் மானம் உன்னால் கெடுகிறதல்லவா ? சகோதரி, யோசித்துப்பார்.

லாவ :—ஹா....என் மனம் பச்சாதாபத்தால் வெடிக்கிறதே ! என் தந்தை தாய் ஸத் குரு எல்லாம் தாங்களே. ஐய, நான் கெட்டேன் ; பலரைக் கெடுத்தேன். இன்றோடு இவ்விலைத் தொழிலை விடுத்தேன். தங்கள் காலைப் பிடித்தேன். வழி காட்டுக !....

(காலில் விழுந்து நமஸ்கரிக்கிறாள்)

ஐய :—சகோதரி, உன்னிடம் எனது தூய அன்பு பதின்மடங்கானது. நீ நல்ல வழிக்கு வருவாய் ; புத்தி மயங்கி இந்த இழிதொழில் புரியும் பல சகோதரிகளையும் திருத்துவாய்! சகோதரி, உன் ஊர் பெயரென்ன ? எவ்வாறு நீ இவ்வாழ்வை மேற்கொண்டாய் ? நீ இதை விரும்பினையா ? யாராயினும் உன்னை மயக்கிக் கெடுத்தார்களா ? சொல் உண்மையை.

லாவ:—என் கண்ணைத்திறந்த கருணைவள்ளலே! உண்மையைச் சொல்லுகிறேன் : என் ஊர் கும்பகோணம். நான் ஒரு வடமப் பெண் ; என் பூர்வ நாமம் மதுராம்பாள். என் பெற்றோர் பரம ஏழைகள். வரதட்சிணைக்கு விதியில்லாமல், ஒரு கிழட்டுத் தாசில்தாருக்கு என்னைக் கட்டினர்.அவருக்கு எப்போதும் காசநோய். மணவாழ்வின் இன்பத்தை அணுவும் நான் அனுபவிக்கவில்லை.

இளமைக்குரிய ஆசைகள் என்னை விடவில்லை. ஆதலால், என் வீட்டிற்கு எதிரேயுள்ள ஒரு வாலிப வக்கீலைக் காதலித்தேன். அவர், தன் மனைவியைத் தள்ளிவிட்டு, என்னையே இரகசியமாக வைத்துக் கொண்டிருந்தார். இருவருக்கும் சம்பந்தம் பலமானது. நடுவே இடர் கட்டையாயுள்ள எனது கிழட்டுக் கணவனுக்கு விஷம்வைத்தேன். ஐயோ! (அழுகிறாள்) அவர் இறந்து போனார். பெற்றோர் என்னை மொட்டை போட்டு மூலையி லடைத்தனர். விதவை வாழ்வு எனக்குப் பிடிக்கவில்லை. நான் விதவையானதும், அந்த வக்கீலுக்கு என் மேலிருந்த மோகம் போயிற்று. எனக்குப் பாசம் போகவில்லை. எனது இளமை பழி பாவங்களை காணவில்லை. எனக்கு இயல்பாகவே சங்கீதத்தில் பயிற்சியுண்டு. பல நாடகங்கள் பார்த்திருந்தேன். நான் காதலித்த வக்கீலின்கட்சிக்காரர் ஒருவர், நாடகக் கம்பெனி வைத்திருந்தார். அவர் எனக்கு முன்பே பழக்கம். அவருக்கொரு கடிதம் எழுதினேன். என்னைத் தன் கம்பெனியில் நடிகராக ஏற்றுக்கொண்டார். மஹா சிவன்ராத்திரியன்று, எனது பெற்றோர் கோவிலுக்குப் போயிருந்தனர். அது தான் சமயமென்று, வீட்டை விட்டுத் தப்பிச் சென்னைக்கு வந்தேன். இங்கு லாவண்யம் என்ற புனைபெயருடன் நாடகக் கம்பெனியில் சேர்ந்து,சதாரம், மாதவி, வள்ளி, சீதை, சாவித்திரி முதலிய வேடங்களில் நல்ல பெயர் பெற்றேன். என்னுடன் நடிக்கும் தாசி நவமணியின் சிநேகமும் கிடைத்தது. அவளிடமிருந்து நடனக் கலை பயின்றேன். ஒருநாள் கோவிலன் சரித்திரம் நடந்தது. அதில் நான் மாதவியாக வேடம் பூண்டு நடனம் புரிந்

தேன். எனது ஆடல் பாடல், அழகில் மயங்கி, ஒரு பணக்கார முதலியார், மாதம் ரூபா 500 தருவதாகப் பேசி வைத்துக்கொண்டார். அவருக்கு என்னைக் கூட்டி யவன் ஒரு பெரிய ஜகஜாலப் புரட்டன். அம்முதலியார், ஆறு மாதம் என்னை மிகவும் காதலித்தார் ; இந்த வீடு கட்டித் தந்தார். பிறகு என்னை விட்டு ஓடிப்போய் வேறொரு பெண்ணைத் தூக்கித் திரிகிறார். நான் தங்களை நான்கு முறை பார்த்துள்ளேன். தாங்கள் ராஜமாபுரம் மிட்டாதார் என்றறிவேன். தங்களை வசப்படுத்த முயன்றேன். அக்கடிதம் எழுதியது நானல்லேன் ; முன்னே சொன்ன ஜகஜாலர். ஐயோ, தங்களை இன்னும் பலவிதத்தில் கெடுக்க நினைத்தேன். குருவே, மன்னிக்க வேண்டும்........ (அழுகிறாள்)

ஐய :—சகோதரி, மன்னித்தேன். உனக்கு நல் லுணர்வு வந்ததே போதும்.

லாவ :—ஐய, என் இழிதொழில் உலகறிந்த தாயிற்றே ; இனி யார் என்னை நம்புவர் ? இவ்வேசைத் தொழிலில் எனக்குக் கிடைத்தது ரூபா 20,000. அத் தனையும் நாளைக்கே ஏழை எளியவர்களுக்கு வாரியிறைக் கிறேன். ஐய, பின்பு ? புகலிடம் ? இப்பாவிப் பரத் தையை நல்லோர் நம்பி ஏற்பரோ ? (அழுகிறாள்)

ஐய:—சகோதரி! கவலை வேண்டா. இனியுன் க்ஷேம லாபங்கள் என்னைச் சேர்ந்தவை. உன்னை நாளைக்கே ஔவை ஆசிரமத்தில் சேர்க்கிறேன். உன் பொருளை அதற்குக் கொடுத்துவிடு. உனக்கு எழுதப்படிக்கத் தெரி யும். சங்கீதத்தில் அபூர்வ ஞானமுள்ளது. அந்த ஆசிரமப் பெண்களுக்கு நல்ல பக்தி ரஸமான தமிழ்ப்

பாட்டுகளைச் சொல்லிக்கொடு. நீயும் உனது இஷ்ட தெய்வத்தை ஆராதித்து, அங்கிருந்து நன்மை பெறு.

லாவ :—அப்படியே செய்கிறேன். புகல் கண்டேன்! வந்தனம் ஐய!

ஐய:—சகோதரி, நீ உய்ந்தது போதாது. இன்னொரு பணி உனக்குள்ளது. உன்னைப்போல் எத்தனையோ சகோதரிகள், இந்த விலைவாழ்வினால், நரகவேதனைப் படுகின்றனர். அது பெண்மைக் கிழிவு; நாட்டிற் கிழிவு; அவர்களை நல்லவழிப்படுத்த உதவு.

லாவ :—ஐய, அது என் விரதம்: விலை வாழ்வின் காரணம் நன்கறிவேன்.

ஐய :—நமது சமூகத்தைப் பிடித்த மூடப் பழக்கந்தான் அதன் காரணம்!

லாவ :—ஆம்!

ஹிந்து சகோதரிகள்—என்
ஹிநது சகோதரிகள்—படும்
இன்னல்கள் கொஞ்சமில்லை!
பந்தக் கொடுமைகளால்—மூடப்
பழம் பழக்கங்களால் (ஹிந்து)

சம்மத மற்ற மணம்—தொட்டுத்
தாலிகட்டக் கூலி,
பொம்மைக் கலியாணம்—கிழப்
பொக்கைக் கிளங்கன்னி!
கட்டினவன் இறந்தால்—வாழுங்
காத விளந்திருவை
மொட்டை யடித்திடுவார்—இருள்
மூலை யடைத்திடுவார்!

ஆசை யடங்கிடுமோ—ஊரில்
அறிந்தும் அறியாதும்
வேசைத் தொழில் வலுக்கச்—செய்த
விந்தையிப் பெண்ணடிமை
கண்மனம் நேர்மையின்றி—ஒரு
கட்டுக் கடங்காதார்
பெண்ணினத்தைப் பழிப்பார்—இங்கே
பெண்ணின்றி வந்தவர் யார் ?

ஜய :—ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானமே. இருவகை உருக்கொண்டதும் ஒரு பொருளே.

லாவ :—ஜய தாங்கள் பெண்மையின் சிறப்பை நன்ருய் அறிந்திருக்கிறீர்கள்.

ஜய :—சகோதரி, இதுகாறும் உனக்கு இனியதைச் சொன்னேன். இனி, எனக்கு இனியதைச் சொல்வாயா ?

லாவ :—இவ்வுடல் பொருள் ஆவியெல்லாம், என் கண்ணைத்திறந்த தங்களுக்கே அடைக்கலம். எது வேண்டுமானாலும் கேட்கலாம்.

ஜய :—உன்னை அழைத்து வந்த முதலியார் யார் ?

லாவ :—தங்கள் பிரதிவாதி தாமோதர முதலியார்.

ஜய :—அந்த ஜகஜ்ஜாலர் யார் ?

லாவ :—டாபர் கிட்டு! (இரகசியமாய்) இங்கே இருக்கிருர். பக்காப் பேர்வழி. அவர் மோசங்களைப் பேச வேண்டுமானல், நாம் தனியாக மேல் மாடிக்குப் போகவேண்டும். இன்னும் இரண்டு பேர் இங்கிருக்கின்றனர்.

ஜய :—அவ்வாறே செய்வோம். தாமோதரன் எங்கிருக்கிறான் ? வசந்த சுந்தரியைப் பற்றி ஏதே னும் தெரியுமா...?

லாவ :—அனைத்தும் அறிவேன். இங்கேதான் முதலில் தங்கள் கற்பரசியை ஒளிய வைத்தான் பாவி. வாருங்கள் மேலே, சில இரகசியங்கள் உள்ளன....

(இருவரும் மேலே செல்லல்)

## காட்சி 4

(வருதல் கிட்டு)

கிட்டு :—ஹை ஷக்கே! மாட்டிக் கொண்டான்! பணத்திற்குத் தக்க வேலை செய்தேன்! அண்ணு கட்டளை முடிந்தது! இவன் வண்டவாளம் படத்தில் உள்ளது. ஜயகோபாலன் தாசி தாசன்; நான் ராஜமாபுரம் மிட்டாதார். ஆயிரம் ஆயிரமாகப் பணம் கறக்கிறேன். மாடியிலிருந்து வரட்டும்; கிட்டிபோட்டு 1000 ரூபா வாங்குகிறேன்! இங்கிருப்பதை நாஸ்தி பண்ணுவோம். இதென்ன, லட்டா? தள்ளு உள்ளே! தங்கக் கிண்ணத்திலே பாலா! லட்டுப் பெருமாளுக்கு அபிஷேகம் பண்ணு (லாவண்யம் ஜயகோபாலனுக்கு வற்புறுத்திய பாலை முழுதும் குடிக்கிறான்). இதென்ன கஸ்தூரி தாம்பூலமா: தீரு! ஹேவ்! படுபஞ்சணையிலே! சோக்கு! ஆ இதென்ன மயக்கமாக வருகிறதே! அட மூளை எங்கே போகிறது! ஆகாசக் கம்பெனிக்கா? பிடி, பிடி மூளையே (தாமோதரன் சூட்சியால், கிட்டுவின் தூண்டுதலால், ஜக்கம்மா கொடுத்த பைத்திய மருந்தைப் பாலில் கலந்து ஜயகோபாலனுக்குக் கொடுக்க முயன்றாள் லாவண்யம். அதே

பாலைக் கிட்டு தெரியாமல் சாப்பிட்டான். பைத்தியம் பிடிக்கிறது. வேஷ்டியைக் கிழிக்கிறான்) பிடி, பிடி மூளையை!

(நாலு மூலையும் ஓடுகிறான்)

அரே, ஷபாஷ்! பிடிச்சுட்டேன்! மூளைக்குக் கோமணங் கட்டுகிறேன். பரட்! (வேஷ்டியைக் கிழிக்கிறான்) இல்லை புடவை (அங்கிருந்த ஒரு பட்டுப் புடவையைக் கிழிக்கிறான்; புடவை அழுத்தமாயிருக்கிறது) ஹை, ராஸ்கல், கிழிய மாட்டாயா! உனக்கு இவ்வளவு அழுத்தமா? உன்னைக் கடித்துச் சாப்பிடுகிறேன்! அண்ணு, எல்லாப் புடவையும் நம்ம சொன்னபடி கேட்க வேண்டும். இல்லாவிட்டால்? டப்! டம்! டமார்! டர்ர்ர்! வீசு கல்லு! (தன்னிழலைக் கண்ணாடியில் பார்த்து) சிரிக்கிருயா! போடு பூசை! தடார்! (பாத்திரங்களை எடுத்து நிலைக்கண்ணாடி மீது எறிகிறான். சத்தங் கேட்டு லாவண்யம் ஓடி வருகிறாள்)

லாவ:—ஆ இதென்ன! பைத்தியமா! கிட்டு! உம்! போ அந்தண்டை! ஆ! விஷப்பாலைக் குடித்து விட்டான்! அந்த மகானுக்குக் கொடுத்தேனே பாவி! நல்ல வேளையாய் மறுத்தார். போ, இனித் தெருவிலே நாய் மாதிரி அலை! உன் வினை உன்னைச் சுட்டது!

கிட்டு:—டாம்! என்னைச் சுடுவாயா! டுப்! உன்னைக் காலைவாரிக் கம்பத்திலே அடிக்கிறேன் பார்! தட்டுவாணி! கொண்டா ரூபா 1000,....சுடு!

(ரகளை பண்ணுகிறான்)

லாவ:—ஐயோ வாருங்கள்! வாருங்கள்!

[உள்ளே இருந்து இருவர் வருதல்; மச்சிலிருந்து ஜய கோபால் வருதல்]

இருவர் :—என்ன, என்ன? என்ன செய்கிறுன் இந்தப் பத்மாஷ்!

லாவ:—இவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது; சாமான்களை உடைக்கிறுன். பயமுறுத்துகிறுன்.

இருவர் :—பத்மாஷ், போ வெளியே.

ஜய :—நண்பரே இருங்கள். விசாரிப்போம். கிட்டு, உனக்கு உடம் பென்ன ?

இருவர் :—அவன் உடம்பில் சைத்தான் பூந்திருக் கிறுன், பத்மாஷ்!

கிட்டு:—அண்ணு மோட்டாரிலே வசந்தசுந்தரி டும்! பம்பம்! டர் ர்ர்! சந்தோம் கடற்கரை கும் கும் கும்! ஐயோ! அண்ணு முதுகிலே சாமண்ணு பும்! மோட் டாரிலே ஏறி டுர்ர்ர்ர்!

இருவர் :—தெரியும் உங்கள் லட்சணம்!

ஜய:—ஆ, இரகசியம் வெளியாகிறது! பைத்தியம் பயமறியாது. கிட்டு, நடக்கட்டும் பிரசங்கம்.

கிட்டு :—ஜக்கம்மா மருந்து படபட்! பால் கட கட கட! ஆகாசக் கம்பெனி பிர்ர்ர்!

இருவர் :—ஆகாசக் கம்பெனி வைத்து வாழலியா திருடா!

கிட்டு :—அஞ்சஞ்சு ரூபாய் கிணு கிணு! ஹிஹி! எல்லாம் வயிற்றிலே - ஹோவ்! ஹிஹி!

லாவ :—போதும் கதை, வெளியே போ!

ஜய :—பாக்கியும் கேட்போமே!

கிட்டு :—ஜயகோபாலனுக்கு, பிடி பைத்தியம்! ஹாஹா! கல்லு! தேவாரப் பூச்சிக்கு வாயிலேதுணி. உஉஉ! ஹிஹிஹி! தேவாரம் பூச்சி வீடு புஸ் - சாம்பல்! ஹிஹிஹி! ஏறு மோட்டார், சலோ ஸ்ரீரங்கம்! ஹாஹா! வடக்குத் தெரு! ஹாஹாஹா! வசந்த சுந்தரி........... தன்னானே! தானானே! ஆடுபேயே! அப்படி ஆடு பேயே! டும் டும் டும்!

(பேய் மாதிரி ஆடுகிறான்)

இருவரில் ஒருவர் :—இது சம்க்ஷேப தாமோதராயணம்! கிட்டு காப்பு மாட்டிக்கொள்.

கிட்டு :—சிங்கம்! போடு தோடா!

(விலங்கு போடுகிறார்)

ஜய :—இந்த நண்பர் யார்?

லாவ :—இவர்கள், தங்களுக்கு முன் என்னிடம் வந்தவர்கள். தாங்கள் வந்ததும், வேறு அறையில் இவர்களை விடுத்து வந்தேன். என் தொழில் முறை அது!

ஜய :—நண்பர்களே, நீங்கள் யார்? பொலீஸ் இலாகாவா? விலங்கு போடுகிறீர்களே!

இருவரும்:—(ஜயகோபாலைத் தழுவிக்கொண்டு) எனது நண்ப, டேவிட், ஹாஸேன் இருவரையும் இந்த வேஷத்தில் காண்கிறாய்!

ஜய :—ஆ நண்பரே! இங்கு வந்ததேன்?

ஹாஸேன் :—தாமோதரன் குட்டு, இங்கேதான் வெளியானது. நீ வரப்போவது கடிதம் மூலம் தெரிந்து, முன்பே இங்கே புகுந்தோம். பிறகு மெல்ல விஷயங்களை யறிந்தோம். எல்லாம் உனக்கும் தெரியும்.

ஜய :—ஆ எனக்காகவா சிரமப்பட்டீர்கள் ?

டேவிட் :—நான் தொழிலுக் குரியதைச் செய்தேன்.

ஹூபசேன்:—நான் நட்புக் குரியதைச் செய்தேன்.

ஜய :—சாமண்ணு எங்கே ?

ஹூபஸேன் :—இப்போது மந்திரவாதி ; ஸ்ரீரங்கத்தில் இருப்பான். நாங்கள் நாளைக் காலை அங்கே அவசியம் இருக்கவேண்டும். மிட்டாதார் தாமோதர முதலியாருக்குக் குறிசொல்ல வேண்டும்.

ஜய :—நானும் வருகிறேன் ; வசந்த சுந்தரியை அழைத்து வருவோம்.

டேவிட்:—தாங்கள் தலைகாட்டக் கூடாது. ஆசாமி பெரிய மோசம் ! வலுத்த கயவர்களைச் சேர்த்து வைத்திருக்கிறான். நாங்கள் இதமாக வேலை செய்கிறோம். ஸ்ரீரங்கம் - திருவானைக்காவல் ரஸ்தாவில், ஒரு பெரிய பங்களா அமர்த்தியுள்ளோம். அதன் பெயர், தர்ம விலாஸ். அது இரகசியமான இடம். அங்கே தாங்கள் இருங்கள். திருவானைக்காவல் பொலீஸ் முழுதும் அங்கு முகாம். 4 மோட்டார் மட்டும் தயாரில் இருக்கட்டும். மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். சங்கிலி அங்கு இருக்கிறான். தங்களை அறிவான்.

ஜய :—தயாராய் இருக்கிறேன். நீங்கள் முன்னே செல்லுங்கள். நான் ஏற்பாடாகப் பின்னே வருகிறேன்.

ஹூபஸேன் :—இந்த அயோக்கியனை என்ன செய்யலாம் ?

கிட்டு :—ஹ ஹ ! ஸ்ரீரங்கம் ! டும் ! டும் அண்ணு டர்ர்ர் !

டேவிட் :—உனக்கு ஒரு 'சுர்ர்' கொடுக்கிறேன்.

ஜய :—அவன் செய்த பழிக்குத் தண்டனை பெற்ருன். பலமான பயித்தியம் பிடித்தது, பாவம் ! அவனைப் பயித்திய சாலைக்கு அனுப்பிவிடுவோம் ! தீமை செய்தாலும் நமது தமிழன் தானே ; காப்பாற்றுவோம்.

டேவிட் :—முதலில் சிறையில் வைப்போம். கேஸ் முடிந்ததும் வேறு யோசனை.

லாவ :—இந்தப் பைத்தியம் தணியவே தணியாது............

ஜய :—நம்மாலானதைப் பார்ப்போம். சகோதரி, நாளை உன்னை ஔவை நிலயத்தில் சேர்த்து, நான் வசந்த சுந்தரியின் காரியத்தைக் கவனிக்கிறேன். நாங்கள் விடைபெற்றுக் கொள்ளுகிறோம்.

கிட்டு :—அகாசக் கம்பெனி டுர்ர் ! அண்ணு பணம் கிர்ர்ர் ! முதலியார் வீடு பக் ! வசந்த சுந்தரி டும் டும் ! தன்னுனே தானுனே ! நமக்கு தோடா !............கிண் ! கிணி கிண் ! ஹ ஹ ஹ........

[டேவிட், கிட்டுவை விலங்கு மாட்டித் தள்ளிக் கொண்டு போகிருன். மற்றவர் பின்னே செல்கின்றனர்]

லாவ :—விலைத்தொழிலே விடைபெற்றுக்கொள் ! என் செல்வத்தை, என்னைப் போன்று கெட்டழிந்த சகோதரிகள் திருந்தி நல்ல வழிக்கு வரவே அர்ப்பணம் செய்கிறேன். இன்று இந்த மஹானுல் புனர்ஜன்மம் எடுத்தேன் !

---

# அங்கம் - 6

## காட்சி 1

[ஸ்ரீரங்கம் - தாமோதரன் வீட்டுக் கூடம். ஒரு கம்பியறையில் வசந்த சுந்தரி பேய்க்கோலத்துடன் காணுதல். தாமோதரன் கவலையுடன் ஒருபலகையில் உட்கார்ந்திருக்கிருன். அடிக்கடி வெற்றிலை மெல்லுகிருன். சுருட்டுப் புகைக்கிருன். ஜக்கம்மாளும், பேயாண்டியும் உடுக்கடித்துப் பேயோட்டுகின்றனர். பேயாண்டி உடுக்கடித்துக் காத்தவராயன் பாட்டுப் பாடுகிருன். ஜக்கம்மாள், வேப்பங் குழையடித்து, ஒவ்வொரு வரிக்குப் பின்னும் 'சவாசு' என்கிருன். ஒரு மூலையில் மூக்கும் முழியும் பயங்கரமாகக் குட்டிச் சாத்தான், கங்காளம்மா, கருப்பணசாமி முதலிய சிறு தெய்வங்களின் மரவுரு; எதிரே கோலமிட்டு, ஏராளமான காய்கனி, மலர், சாராயம், முட்டை முதலியன வைக்கப்பட்டுள்ளன. ஒரு தட்டில் குங்குமமும் திருநீறும் உள்ளன ; இடையிடையே சூடன் காட்டிச் சாராயம் குடிக்கின்றனர்.]

பேயா .—சொல்லடி ஜக்கம்மா சொகுசாக ஒரு குறிப்பு ; டும் டும்! எந்த மரத்துப்பேய் ? டும் டும் ! வனிவளைப் பிடித்துக்கொண்டாய் ? ஆடடீ, அடங்காப் பேயே ! ஆடிச்சொல் உன் கதையை ; யாது செய்தால் அடங்கிப் போவாய், வாது செய்யாமல் சொல்லடியோ.... !

(இடையிடையே உடுக்குத் தட்டுகிருன்).

புளியமரப் பொந்தினிலே—சவாசு
பூச்சாண்டித் தேவனடா—சவாசு
ஆலமரச் சாவடியில்—சவாசு
அம்பட்டக் கருப்பனடா—சவாசு
அரசமரக் கொம்பினிலே—சவாசு
அங்காயி புருசனடா—சவாசு
வேலமரக் காட்டினிலே—சவாசு
வீரமாக் காளியல்லோ—சவாசு
சாலமரத் தூரினிலே—சவாசு
ஜக்கம்மா ராச்சியமாம்—சவாசு

வச :—(வெகு உக்கிரமாய் தலைவிரித்து எழுந்து) ஹா, வாடா உன்னைக் கிழித்து மாலை போடுகிறேன்! உன் சதையைத் துண்டு துண்டாக வெட்டிப் பலிவைக்கிறேன்! அடே நான் வீரமாக்காளி! காமக்ரோத லோப மோகம் பிடித்த அரக்கரைப் பிளந்தெறிவேன்! ஹ............ (வாளை ஓங்குதல்)

தாமோ :—ஐயோ பயமாயிருக்கிறதே! ஜக்கம்மா ........பாரு!

ஜக்கம்மா :—இதோ மந்திரம் போடுகிறேன். வை மூன்று ரூபாய்.

தாமோ :—(பணம் வைக்கிறான்) எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கிக்கொள். பேயைப் பெண் சாதி யாக்கு.

ஜக், பேயாண்டி :—பூ....குட்டிச்சாத்தான் பூ சின்ன மஸ்தா! பூ கருப்பாயி புருசா!

(விபூதி பூதி, சூடன் கொளுத்தி ஆவேசம் நடிக்கின்றனர்)

வச :—தூ மானங்கெட்ட பயல்களா ! தூ திருடர்களா ! தூ தூ, அயோக்கியர்களா........

ஜக், பேயாண்டி :—

ஆடடி பொம்மலம்மா—சவாசு!
ஆடு கோழிப் பொங்கல் வைப்பேன் ! - சவ்வாசு
சாடடி கொண்டலம்மா—சவாசு
சாராயக் குப்பி தாரேன் —சவாசு

(சாராயங் குடித்தல்)

(வசனமாக நீட்டல்)

ஜக்:—ஹா, சொல்லடா கருப்பாயி புருசா, இந்தச் சுட்டிப் பேய் வந்த கதையைத் தானே.

பேயா :—சொல்லடி ஜக்கம்மா, மலையாள பகவதி, சொகுசாக உன் குறிப்பை ! முட்டைக்கண் கருப்பாயி,மூன்று குளம் ராக்காயி-சொல்லடி நல்லகுறி. இந்த முரட்டுப் பேய் எந்தவூர் என்னபேர், பிடித்தவகை, பரிகாரம் உடனே சொல்லிடடீ ஜக்கம்மா, மந்திரக் காளி !................

ஜக், பேயா :—

தயங்காது பொருள் கொடுத்தால்—சவாசு
தப்பாது குறி சொல்வேன்—சவாசு !

தாமோ :—வேண்டிய பொருள் வாங்கிக்கொள். சாராயம் ஆடு கோழி, எது வேண்டுமோ உண்டெனப் பெற்றுக்கொள். பேய் போய், பெண்டாட்டியாகட்டும்.

ஜக், பேயா:—

குறிசொல்லி ஓட்டுகிறேன்—சவாசு
கொல்லவரும் பொல்லாப் பேய்—சவாசு
கருவேலங் காட்டினிலே—சவாசு
கட்டி யடிக்கிறேன்பார்!—சவாசு!

வச:—ஹா! நான் யாரென்று நினைத்தாயடா! பார் நாளையே. (பாடிக் குதித்தல்)

கொழுப்பெடுத்த மடப்பேயை—சவாசு
கொள்ளிவைத்துக் கொளுத்துகிறேன்—சவாசு
காமக்கடாமுனிக்கு—சவாசு
கழுதைக்கா லுதை கொடுப்பேன்—சவாசு!
அகங்காரப் பணப் பேயை—சவாசு
அழுத்தி மிதித்திடுவேன்!—சவாசு!
உயிர்க் கொலைசெய் கரும்பேயை—சவாசு
உருட்டி விழுங்கிடுவேன்—சவாசு!

ஹா, என் சந்நிதானத்தில் என்ன அக்கிரமம் நடக்கிறது! வேதாந்தமும், சித்தாந்தமும் விளங்கும் புண்ணிய பூமியில், இந்தப் பாழும் பொய்த் தெய்வங்கள் எங்கு வந்தன—குட்டிச் சாத்தனைகுட்டையிலேபோடுகிறேன் பார்! ஹா—உயிர்க்கொலையா! குடியா! கள்ளா! சூனியமா....விபசாரமா! கொழுப்பெடுத்த மடப்பேய்களா, போங்கள் வெளியிலே!

ஜக்:—ஹா—முரட்டுப் பேயா யிருக்குதடா!

தாமோ:—ஐயோ என்ன செய்யலாம்.

வச:—என்னை ராஜமாபுரத்திலே கொண்டு சேரடா! இல்லாவிட்டால், நாளையே நீ குட்டிச் சுவராய்ப் போவாய்!

தாமோ:—அடி அந்த இழவு ஊரைச் சொல்லாதே. அவன்தான் பித்துப்பிடித் தலைகிறானே. இன்னொரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு கட்டித் தழுவு கிறான்; பார், இந்தப் படத்தை....(ஒரு படத்தை விட் டெறிகிறான்)

வச:—(படத்தை எடுத்துக் கிழித்து) பொய்! பொய்! வஞ்சம்! திருட்டு! தூ நீ மனிசனா தூ, தூ, தூ, துஷ்டா! போ என் கண்முன் நில்லாதே!

தாமோ:—ஜக்கம்மா, இனி என்ன செய்யலாம்? முரட்டுப் பேயா யிருக்கிறதே! குறி கோடங்கி பார்த் தாயிற்று.

ஜக்:—(வசனம் நீட்டல்) ஹா சொல்வதைக் கேட் டால் சுகமுண்டு நிச்சயமாய்! டும் டும்! உறுதியாய்ச் சொல்லுகிறேன். இது ஒரு பேயல்ல; டும்டும்! பத்துப் பேய் சேர்ந்து பிடித்திருக்கிறது. முனியாண்டி, பேயாண்டி, குட்டிச்சாத்தான், கொண்டலம்மா, பொம்மலம்மா, கருப்பாயி புருசன், வீராயி, காட்டேறி, பனையடிக் கருப்பன், ஆலடிப் பேச்சியம்மன் இத்தனை தெய்வங்களுக்கும் ஆட்டுப்பொங்கல், கோழிப்பொங்கல், முட்டை, சாராயம் படைத்து, குறிபார்த்தால் நிச்சய மாகப் பலனுண்டு. அரிச்சந்திரன் வார்த்தை தப்பினா லும் என் வார்த்தை தப்பாதடா! உறுதி கொடுக் கிறேன். டும் டும்! காணிக்கை கொடுத்தால் கைமேல் பலனாகும்! டும் டும் டும்....!

தாமோ:—சரி செய்து பார். என்ன ஆகும்?

ஜக்:—அதிகம் வேண்டாம்; இருநூறில் முடித்து விடுகிறேன்.

தாமோ:—இந்தா, போ, உடனே காரியத்தைச் செய். நமது விரோதி வயிறு வெடித்துச் சாகும்படி ஒரு ஏவலும் வை; புறப்படு.

ஜக் பேய்:—இதோ பார்; ஜல் மந்திரக்காளி!

(சாமான்களை எடுத்துச் செல்லுகின்றனர்)

வச:—உடை இந்தப் பேய்களை; இந்தக் கங்காளி பொம்மையைக் கல்லிலே போட்டு உடை! இங்கே இனி உடுக்குச் சத்தம் கூடாது! உடை, பொய் மடப்பொம்மைகளை! (பேய்ப் பூசையைச் சின்னபின்ன மாக்குகிறாள்)

## காட்சி 2

தாமோ:—(சோபாவில் சாய்ந்து) என்னசெய்வேன்! மந்திரத்தில் பலியாது போலிருக்கிறதே! இந்தச் சனியனிலே ஏன் புகுந்தேன்! இவளைச் சுட்டுப் போடுவோமா! அவள் அழகைக் கண்டால், ஆத்திரமெல்லாம் அடங்கிப் போகிறதே! நமக்கு மேலே சட்டம் பேசுகிறாள்! கிட்டு இருந்தால் பதில் சொல்லுவான். அவன் எங்கு தொலைந்தானோ வரக்காணோம்; லாவண்யம் தகவலுமில்லை! வீடும் கடன்காரர் கையிலிருக்கிறது! பாவிப்பயல்கள்,மூலைக்கொருவராக வியாச்சியம் போட்டிருக்கிறார்கள்! பணமும் பறக்கிறது. எல்லாம் போகட்டும், இவளைக் கட்டி ஒரு முத்தமிட்டால் போதும்! பேய்! கிட்டப்போக முடியவில்லை.......வாளொன்று வைத்து, பயமுறுத்துகிறாள் ஆ...........இன்னும் எந்த மந்திரவாதியைப் பிடிப்போம்...........

(உள்ளிருந்து பெருங் குரல்)

வச :—யாரடா, இன்னும் தீமை நினைக்கிறான்! குடலைக் கிழிக்கிறேன் பார்! இனிக்கோடாங்கிக் கூத்து இங்கே கூடாது! கிட்டவந்தால் வெட்டுவேன்.

தாமோ :—ஐயோ! பயமா யிருக்கிறதே! வெளியே போனாலும் பொலீஸ் உபத்திரவம்! என்ன செய்வேன்! என் பணத்தைக் கொட்டிக்கொண்டு, இந்த இழவெடுத்த தெய்வங்களும் வேடிக்கை பார்க்கின்றன!

(வாசலில் குடுகுடுப்பை)

குடு குடு :—டுகு டுகு டுகு டுகு! ஜயம் வருகுது! ஜயம் வருகுது! நல்ல வார்த்தை சொல்லடி மலையாள பகவதி, மந்திரக்காளி! (டுகு டுகு டுகு)

(வருதல் சங்கிலி)

தாமோ :—அட தடியா, உன் மூளையிலே என்ன கழுதை லட்டா! நம்ம வீட்டு வாசலிலே யார் குடு குடு வென்று சத்தம் போடுகிறான்: விரட்டியடி! தண்ணீக் கொட்டு!

சங்கி :—இல்லேங்க, எசமான். குடுகுடுப்பை, அற்புதமாகக் குறி சொல்லுகிறான், மகா சித்தன். ஊரெல்லாம் வேட்டி துணி பணங்காசு கொடுத்துக் குறி கேட்கிறார்கள். ஐயாவுக்கும் நல்ல குறி சொல்வான்!

தாமோ :—நமக்குத்தக்க குறி சொல்வதானால் கூப்பிடு. ஏதாயினும் தாறுமாறாகச் சொன்னால், உன்னையும் அவனையும் கட்டிவைத்து, ஈச்சம் வளாரால் தீட்டுவேன்! பத்திரம்! கூட்டிக்கொண்டுவா!

சங்கி :—சம்பளங் கேட்டாலும் அப்படித்தானே அரட்டுறீங்க! உம், காலம்! (போகிறான்)

[வருதல் குடு குடுப்பை. தோளிலே ஏராளமான பழைய வேஷ்டிகள். அரையிலே ஒரு தைலி—தட்டானட, தலையிலே பெரிய முண்டாசு—மீசை தாடி; நெற்றியிலே அகலமான குங்குமப்பொட்டு, புருவத்திலும் கண்ணிலும் மை]

குடுகுடு:—டுகு டுகு டுகு! ஜயம் வருது! ஜயம் வருது! டுகு டுகு! நல்ல குறி சொல்லடி கம்மளத்தாயி, மதுரை மீனாட்சி, கஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, டுகு டுகு!

தாமோ:—குடு குடுப்பை, நீ எந்த ஊர்? உன் பெயரென்ன? உனக்கு இதுதானா தொழில்? பெண்டாட்டி பிள்ளை, குட்டி வீடுவாசல் உண்டா?

குடு:—(உடுக்கை யடித்துக்கொண்டே) உள்ளத்தைச் சொல்லுகிறேன், ஊக்கமுடன் கேளுங்கள். ஊரெல்லாம் என்னூரு; உலகெல்லாம் என் குடும்பம். என் சாதி ஆண் சாதி; எனது குலம் மனித குலம். எனது மதம் சம்மதம். எனது பெயர் அன்பாண்டி! மனைவி எனக்கில்லை. மனையெல்லாம் என்னவரே! காசி முதல் கன்னியாகுமாரி மட்டும், நான் குறி சொல்லா ஊரில்லை, ஆளில்லை, பெத்த பேரில்லை. சொன்ன குறி தவறாது. வந்த வினை பார்த்து வருவினைகள் சொல்லிடுவேன். தாயைப் பார்த்து, மக்களுக்குக் குறி சொல்வேன். கண்களைப் பார்த்துக் கருத்தறிந்து சொல்லிடுவேன். காதலியைப் பார்த்துக் காதலன் குண மறிவேன்.

தாமோ:—பெரிய பேர் வழியா யிருக்கிறாயே. நீ எந்தப் பெரிய மனிதருக்குக் குறி சொன்னாய்? ருஜு வென்ன?

குடு:—அப்படிக்கேளுங்க! ராஜ்ஜாதிபதி, அளவாகச் சொல்லுகிறேன். மஹா ராஜ்ஜாதிபதிகளுக்கெல்லாம் மகுடம் வருமென்று குறி சொன்னேன். நாட்டுக்குப் பாடுபடும் நல்லோர்க்குக் குறி சொன்னேன்! தேர்தல் வரும்போதெல்லாம் என்னைக் குறி கேட்பார். மந்திரி பதவி தந்திரி பதவிக்கெல்லாம் தந்திரமாகக் குறி சொல்வேன். தேசாபிமானிக்கு ஜயவாக்கு நான் தருவேன். நியாயம் பெரிதென்று நல்ல குறி சொல்லிடுவேன். அநியாயப் பாவிகளுக்கு ஐயோனு போகுது பார்! லோகமான்யா, மஹாத்மா, லாலாஜி, தேசபந்து, மோதிலால், தாதாபாய், சுபாஷ் போஸ், ஜவஹர்லால், முஹம்மதாலி, அன்ஸாரி, கவிக்குயில் பாரதி, வீர மணி ஐயர், ராஜன் பாபு, ராஜாஜி முதலிய - எல்லாருக்கும் சொன்ன குறி கைமேல் பலித்தது. கவியரசருக்குக் கனகப் பரி சுரைத்தேன்! விஞ்ஞானி ராமனுக்கு வெகுமதிகள் வருமென்றேன்.

தாமோ :—போதும் உன் ஜாப்தா. இதற்கெல்லாம் ருஜுவென்ன?

குடு :—நேற்று நடந்ததெல்லாம், இன்று நடப்பதெல்லாம், நாளை வருவதெல்லாம் நான் சொன்ன மெய்க்குறியே. இதற்கு ருசு வேண்டுமானால், தாராளமாஹா ராஜ்ஜாதிபதி ஹிந்து பத்திரிகை பார்த்துக்கொள்ளலாம். டுகு டுகு டுகு டுகு டுர் ர் ர் ர்!

தாமோ :—பெரிய அரட்டையாயிருக்கிறயே; சரி. என் மனதிலிருப்பதைச் சொன்னால் உன்னை நம்புகிறேன்.

குடு குடு :—டுகு டுகு டுகு! சொல்லடீ கம்பளத்தாயி, உச்சமாக்காளி, மதுரை மீனாட்சி, கஞ்சி காமாட்சி, காசிவிசாலாட்சி, மயிலாப்பூர் கற்பகவல்லீ! முகம் பார்த்துச் சொல்லடி மூலசக்தி ஜயகாளி! டுகு டுகு டுகு டு ர் ர் ர்! கேளுங்கோ ராஜ்ஜாதிபதி செல்வச் சீமானே! நல்ல பேருக்கு நல்லவாக்குச் சொல்லுவேன்; மகாபாவி ஐயோனு போகிறான்! பெரிய குலப்பேர் விளங்கப் பிறந்த மாணிக்க ராஜ்ஜாதிபதி மனத்திலே, ஒரு பெண்ணைப் பற்றிய கவலை பிடித்துக் கொண்டிருக்கிறது! உண்டா!

தாமோ :—உண்மை, மெதுவாகச் சொல்லு. அந்தப் பெண்ணைப்பற்றி என்ன சொல்லுகிறாள் உன் காளி?

குடு :—டுகு டுகு டுகு குடு ர் ர் ர்! ஊடுருவிச் சொல்லடீ உண்மை கண்ட நல்லம்மா, ஜயகாளி, மந்திர சக்தி........ஹ! சொல்லுகிறாள் ஜயக் காளி சுத்தமாய்க் கேளுங்கோ. ராஜ்ஜாதிபதி மனங் கொண்ட ரதிக்கிளிக்குப் பெரிய பேய் பிடித்திருக்கிறது. உண்டா? டுகு டுகு டு ர் ர் ர்!

தாமோ :—உண்டு; அதை ஓட்ட வழியுண்டா? தகுந்த மந்திரவாதி எங்கிருக்கிறானென்று குறிபார்த்துச் சொல்லு. உனக்குச் சரியான ஜரிகை முண்டாசும், 10 ரூபாயும் தருகிறேன்.

குடு :—சந்தோசம் வருது! டுகு டுகு! கர்ணுவ தாரன், கற்பகக்கை மகராஜா, எண்ணுவதுபோல

இருக்கிறான் மந்திரவாதி! சொல்லடி மலையாள பகவதி மாதங்கி மஹாகாளி ! ஹ, அதுட்ட வசமாக வந்திருக்கிறான் மந்திரவாதி.

தாமோ :—எங்கே, கூட்டிவர முடியுமா?

குடு :—சொல்லடி மந்திரக்காளி ! டுகு டுகு ! திருவானைக் காவலிலே,ரெட்டியார் சத்திரத்தில்,கைதேர்ந்த மந்திர வாதிகள் இரண்டுபேர் இறங்கி இருக்காங்க ! சின்ன பேய், பெத்த பேய், மனப்பேய், சினப் பேய், பணப்பேய், வாதப் பேய், கடாமுனி, ஜடாமுனி,— உம்பம்பென்றால் எல்லாம் ஓடோடிப்போய் மறையும். எனக்கும் பழக்க முண்டு. டுகு டுகு டுர்........

தாமோ :—அப்படியானால் சங்கிலியை அனுப்புகிறேன். அவர்களை நீ கூட்டிவர முடியுமா?

குடு :—ராஜ்ஜ்ஜாதிபதி சொல்வது போலச் செய்கிறேன், அன்பாண்டி ; டுகு டுகு டுர்ர்ர். பெண்ணை நான் பார்த்துப் பேயின் குறிப்பறிவேன்;முத்துமுகம் பார்த்து முன் ஜன்ம நடப்பறிவேன். அவர்களுக்கும் சொல்லி யழைத்துவரச் சௌகரியம்.

தாமோ :—சரி இரகசியமாகப் பார்க்கவேண்டும். என்னைக் கண்டால் பேய் சீறுகிறது.

குடு :—ராஜாதிபதி மறைவாயிருக்கட்டும். தனியாகப் பார்த்து தக்க குறி சொல்லுகிறேன்.

(இருவரும் உள்ளே செல்லல்)

## காட்சி 3

[வசந்தசுந்தரியின் தனியறையில் குடு குடுப்பை நுழைகிருன். முதலில், வசந்தசுந்தரி சந்தேகிக்கிருள்]

குடு :—நல்லகாலம் வருகுது! அம்மணிக்கு ஜயம் வருகுது. சண்டாளப் பாவி ஐயோனு போகிருன். மாதங்கி, மலேயாள பகவதி நல்ல வாக்குத் தருகிருள்.

வச :—யாரடா இன்னும்! நில் வெளியே!

குடு :—அம்மணிக்குக் கோபம் வரவேண்டாம். நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன். சிவப்பிர சாதம். அம்மணி பூசிக் கொள்ளட்டும். (திருநீறுடன் ஒரு கடிதமும் தருகிருன்)

வச :—(கடிதம் பார்த்து மனத்துள்) சிவா, முருகா, என்னேக் காத்தாய்! ஆ எனதருமைக் காதலர் கையெழுத்தே. (இரகசியமாய்) நண்பரே, செய்தியறிந் தேன்; தங்களே யறிந்தேன்; பிழைத்தேன். இதிற் குறித்தபடியே செய்கிறேன்.

குடு :— இனிக் கவலேயற்றிருங்கள். நாளே இரவு தாங்கள் ராஜமாபுரத்தில் இருப்பீர்கள். அடுத்த நாள் முகூர்த்தம்.

வச :—வந்தனம். இனிச் செல்லுங்கள். அந்தப் பாவி சந்தேகிப்பான். இன்று மாலே மந்திர வாதிகளே எதிர் பார்ப்பேன். மற்றதெல்லாம் தெரிந்து கொண் டேன்.

(பின்னல் தாமோதரன்)

தாமோ :—போதும். வா, குடு குடுப்பை, உடனே மந்திரவாதியைக் கூட்டி வா.

குடு :—நல்ல காலம் வருகுது ; நல்ல காலம் வருகுது. அம்மணி முகத்திலே அஷ்ட லட்சுமியும் தவழுது! சந்தோச்சம் வருகுது ! கொடும்பாவி ஐயோனு போகிறான் ! சொல்லடி மலையாள பகவதி, மந்திரக் காளி, டுகு டுகு....!

(குடு குடுப்பை செல்கிறான்)

## காட்சி 4

[சுத்தமாக மெழுகிக் கோலமிட்ட ஒரு கூடம். நடுவே பராசக்தியின் அழகிய அலங்கார உருவம். எதிரே வெள்ளித் தட்டில் பூரண கலசம். அதில் மாவிலையும், மஞ்சள் பூசிய தேங்காயும்; சுற்றிலும் கனிகள், மலர்கள். விபூதி, குங்குமம், ஊதுவர்த்தி, சாம்பிராணி, சூடன், வேப்பிலை எல்லாம் ஏற்பாடாக உள்ளன. தாடி மீசை வைத்துக் கொண்டு, தலையில் நீண்ட ஜடை வளர்த்து, உடலில் கால் வரையில் தொங்கும் காஷாய ஜிப்பா அணிந்த இரண்டு மந்திர வாதிகள் பராசக்திக்குப் பூஜைசெய்து கற்பூரங் காட்டி, பேய் இருக்கும் மூலையில் விபூதி தூவுகின்றனர். குடு குடுப்பை மிருதங்கம் வாசிக்கிறான். மந்திர வாதிகளில் ஒருவன் ஜாலராப் போடுகிறான். மற்றொருவன் பேய்ப் பாட்டுப் பாடுகிறான். சங்கிலி சுருதி போடுகிறான். தாமோதரன் ஒரு மூலையில் பய பக்தியுடனிருந்து எல்லாம் கவனிக்கிறான். வசந்த சுந்தரி கம்பிக் கதவு வழியாகப் பூஜையைப் பார்க்கிறாள்]

மந்திர வாதிகள் :—(பரா சக்திக்கு மலர் சூடி, நிவேதித்து, தீபாராதனை காட்டி) ஓம் நம: சிவாய ! ஓம் ஹ்ரீம் ஓம் ஸ்ரீம் ஹம்படேஸ்வாஹா ! மோகினி—டாகினி லாகினி: காகினி, லாகினி—ஹம் படேஸ்வாஹா !

(விபூதி ஊதுதல்)

ஸர்வ மங்களா மாங்கல்யே
சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்பகே கௌரி
நாராயணி நமோஸ்துதே
ஸ்ருஷ்டிஸ்திதி விநாசாநாம்
சக்தி பூதே ஸநாதநி
குணாஸ்ரயே குணமயே
நாராயணி நமோஸ்துதே
சரணாகத தீனார்த்த
பரித்ராண பராயணே
ஸர்வ ஸ்யார்தி ஹரேதேவி
நாராயணி நமோஸ்துதே
சங்க சக்ர கதா ஸார்ங்க
க்ருஹீத பரமாயுதே
ப்ரஸீத வைஷ்ணவீரூபே
நாராயணி நமோஸ்துதே.

ஓம் நமோ நாராயணீ ஜகதம்பிகே, பராசக்தி, ஜயமா தங்கதனயே! ஓடு பேய்! ஒழி பகை! ஒழிக பகை!

(விபூதி ஊதுதல்)

வச :—(பெரிய குரலில்) ஆ, எரி பொறுக்க முடியவில்லை! ஐயோ போகிறேன், போகிறேன்.

[அறையினின்று வெளியே ஓடி வந்து, கோலம் போட்ட ஒரு வட்டமான இடத்தில் தொப்பென்று விழுகிருள்]

மந்திரவாதிகள் :—(இனிமையாக, கம்பீரமாகப் பாடுகின்றனர். பேய் தலைவிரித்து ஆடுகிறது)

**புன்னாகவராளி**

ஓடு பேயே-விரைந்தோடு பேயே
ஓம்சக்தி மந்திரத்தால் ஓடுபேயே!
ஆடுபேயே விரித் தாடுபேயே
ஆதார சக்தியின்முன் னாடுபேயே

காமப் பேயே களவாணிப் பேயே

கள்ளுண்டு கொக்கரிக்குங் கொள்ளைப்பேயே !

சாமப் பேயே பொல்லா ஈமப்பேயே

சந்துகளிற் சுற்றுகின்ற அந்திப்பேயே !

வேசைப் பேயே குல நாசப் பேயே

விஷம் வைத்துக் கொன்றுவிடுந் துவேஷப்பேயே !

ஆசைப் பேயே பணத் தாசைப்பேயே

ஆகாசக் கோட்டைகட்டும் மோசப்பேயே !

ஆயுதப்பேயே உல காயதப்பேயே

அரக்கத் திமிர்பிடித்த அக்ரமப் பேயே

அச்சப் பேயே வெறுங் கொச்சைப்பேயே

அடிமைப் படுத்துகின்ற பிச்சைப்பேயே !

நச்சுப் பேயே சுய நலப்பேயே

நாட்டுக்குத் தீமைசெய்யும் துச்சப்பேயே

செயலற் றுறங்குகின்ற சிக்குப் பேயே

திண்டிப்பேயே அட சண்டிப்பேயே

கயவர்க் குதவுகின்ற காசுப்பேயே

கர்மப்பேயே அதர்மப்பேயே.

(ஓடு பேயே விரைந்தோடு)

வச :—ஐயோ போகிறேன் போகிறேன் ! என் குலத்தோடு போகிறேன்.

தாமோ :—அப்பா இப்போதுதான் உனக்கு என் செய்தி தெரிந்தது! அடி துடப்பக்கட்டையாலே ! ஓடு !

மந்தி :—ஹூம் நீ பேசாதே !....

தாமோ :—சரி சரி ! நடக்கட்டும் !

மந்தி :—துரிதம்.

**ஜம்பை தாளம் - புன்னாகவராளி**

*ஆடி யடங்குதுபார் அக்ரமப் பேய் !*
*வாடித் தவிக்குதுபார் வஞ்சகப் பேய் !*
*நடுங்குதுபார் நானென்னுஞ் சூனியப்பேய்*
*ஒடுங்குதுபார் ஊரழிக்கும் கொடுவினைப்பேய் ;*
*பதறுதுபார் பஞ்சமா பாதகப்பேய்*
*கதறுதுபார் குடிகெடுக்குங் காதகப்பேய்*
*ஒதுங்குதுபார் சிறுமடப்பேய் ஓடுதுபார்*
*பதுங்குதுபார் பரதந்த்ரப் பேய்பயந்தே.*

வச :—*ஐயோ நான் போனேன் ! போனேன். ஹா ! கடுக்குதே ! எரியுதே !* (விரைவாக ஆடல்)

மந்தி :—

*ஓடு பேயே விரைந் தோடு பேயே*
*ஓம்சக்தி மந்திரத்தால் ஓடுபேயே !*

வச :—*ஹா, ஹா, ஹா, ஹா.*

(களைத்து மல்லாந்து விழல்)

மந்தி :—*பேய் விலகியது. இனி விவரம் கேட்போம்.*

[பேயின் அருகே போய், காதோடு பேசி எழுப்பி, உட்கார வைக்கிறான். வசந்த சுந்தரி தூங்கி விழிப்பதுபோல உட்காருதல்]

மந்தி :—(தீபாராதனை காட்டி)

*யாதேவீ ஸர்வ பூதேஷு புத்தி ரூபேண ஸம்ஸ்திதா*
*நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோநம:*
*யாதேவீ ஸர்வபூதேஷு சக்தி ரூபேண ஸம்ஸ்திதா*
*நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோநம :*

யாதேவீ ஸர்வபூதேஷு சாந்தி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோநம:
யாதேவீ ஸர்வபூதேஷு காந்தி ரூபேணஸம்ஸ்திதா
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோநம:

[தீபாராதனை காட்டுகிறார்; வசந்தசுந்தரி ஏற்கிறாள். விபூதி குங்குமம் இடுகிறார்]

மந்தி :—ஓம் ஹ்ரீம் ஓம் நமோ நாராயணீ, ஜகதாம்பிகே பராசக்தி! தேவி சந்நிதியிலே சொல் பேயே ; நீ எந்த ஊர் ?

வச :—திருவானக்காவல்

மந்தி :—எங்கிருக்கும் பேய் ?

வச :—திருவானக்காவல் - ஸ்ரீரங்கம் ரஸ்தாவிலுள்ள புளியமரப்பேய் !

மந்தி :—உன்னிடத்திற்குப் போகிறாயா உடனே !

வச :—கொண்டுவிட்டால் உடனே மரத்தின்மேல் ஏறிக்கொண்டு, இவளை விட்டுப்போகிறேன். ஹா - உடனே புறப்படடா ! எரிகிறதே ! தேவிசன்னதியில் இருக்க முடியவில்லை.........

தாமோ :—மோட்டார் தயார். உடனே புறப்படலாம்.

மந்தி :—ஜயமாதங்கி !

(வசந்த சுந்தரியுடன் எல்லாரும் புறப்படல்)

## காட்சி 5

[ஒரு பங்களா ; வாசலில் புளியமரம்; அதனடியில் மந்திரவாதிகளும், குடுகுடுப்பாண்டியும் வசந்த சுந்தரியுடன் நிற்கின்றனர். சங்கிலி, உள்ளே போகிறான். தாமோதரன் வெகு சந்தோஷத்துடன் மோட்டாரண்டை நிற்கிறான்]

தாமோ :—ராவணன் தோற்ருன் ! நான் வென்றேன்! பேய் ஒழிந்தது. வசந்த சுந்தரி நமக்குத்தான். பஹறுார் பக்கம் ஜயம்! அந்தப் பயல்கள் முகத்தில் மை பூசி விட்டேன் !.......மாந்திரீகரே, சீக்கிரம் பேயை மேலே ஏற்றுங்கள். மரத்தில் ஆணியடியுங்கள். பெண்ணை யழைத்துச் செல்லவேண்டும்.

மந்தி :—அம்மா படிமேல் ஏறி வாருங்கள்.

[ஒரு மந்திரவாதி வசந்தசுந்தரியுடன் பங்களாவுக்குள் செல்லுகிருன்]

மற்ரேரு மந்திரவாதி :—சங்கிலீ....கொண்டுவா !

தாமோ :—என்ன, அவளையேன் உள்ளேகொண்டு போகிறீர்கள் ? உம்..........ஏண்டா குடு குடுப்பை - உம்..........

(தானும் பின்னே போகிருன்)

குடு :—டுகு டுகு டு ர் ர் ர், ஐயோனு போகுதே பஞ்சமா பாதகப் பாவி வாழ்வு ஐயோனு போகுதே ! முதலியார் கைக்குத் தோடா வருகுது, வருகுது !

தாமோ :—என் மனைவியை நான் மோட்டாரில் கூட்டிக் கொண்டு போகவேண்டும். விடுங்கள் !

(இழுக்கப் போகிருன்)

மந்தி :—தொடாதே பெண்ணை. பத்மாக்ஷ ! சங்கிலீ !

[சங்கிலி பொலீஸ் உடுப்புடன் விலங்கு கொண்டு வருகிருன். முதல் மந்திரவாதி உள்ளேயிருந்து பொலீஸ் இன்ஸ்பெக்டர் டேவிட் பாலாக வருகிருன்]

சங்கிலி :—ஐயா அரெஸ்டு வாரெண்டு

(வாரண்டு கொடுக்கிறான்)

தாமோ :—அட படுக்காளிப் பயலே, நீ ஒற்றனா! ஐயையோ நீங்கள் பொலீஸா!

(வருதல் ஜயகோபாலன்)

ஜய் :—மிஸ்டர் டேவிட், சற்றுப் பொறுங்கள். தாமோதரா, என்னைத் தெரிகிறதா?

தாமோ :—அட பாவிப் பயலே, உன் வேலைதானா? ஐயோ, எனக்குச் சனியனாய் வந்தாயே! எங்கே போனாலும் திருட்டு நாய் மாதிரி பின்னாலேயே வந்து, "வப்" பென்று என் மானதைப் பிடுங்குகிறாயே!

ஜய :—நண்பா, பொறுமை! நல்லது சொல்லுகிறேன் கேள்! நீ செய்த அக்கிரமங்களை உணருகிறாயா? ஸாந்தோம் சம்பவத்திலிருந்து இன்று வரை, நீ செய்த அட்டூழியங்களைக் கண்டு பொறுக்காமல், தரும தேவதையே உனக்கு விலங்கு மாட்டுகிறாள்.

தாமோ :—என் குடியைக் கெடுத்தாயேடா! அட பாவி, என் வயிறு எரிகிறதே! எனக்கு வரும் ஆத்திரத்தில் துப்பாக்கியிருந்தால் உன்னைச் சுட்டுப் போடுவேன்.

ஜய :—நண்பா, தாமோதரா, நியாயத்தைக்கேள். இனியேனும் இந்தத் துர்நடத்தைகளை விடுவாயா? வீணாகக் கெட்டுப் போகாதே!

தாமோ :—நீ யாரடா எனக்கு புத்தி சொல்வது? உன்னை இரண்டு இறுக்கு இறுக்கிவிட்டு மறுஜோலி பார்க்கிறேன்.

(முன்னே பாய்ந்து குத்தப்போகிறான்.மற்றவர் தடுக்கின்றனர்)

ஜய :—நண்பர்களே விலகுங்கள். இதோ மார்பு. முடிந்தால் குத்து. நான் சொல்லும் நல்லுரையை மட்டும் கேள்!

தாமோ :—எனக்கு உன் உபதேசம் வேண்டா. உன்னை ஒரு குத்திலே பிண்டம் பிடித்து வைத்து, தூக்கு மேடை வேண்டுமானாலும் ஏறுகிறேன். பஹதூர்! ஹ!

(குத்தப் போகிறான்)

ஜய :—ஊஹூம் ! உனக்கு அவ்வளவு பலமா ? இப்போது என்ன செய்வாய்(கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுகிறான். தாமோதரன் விழுகிறான்). உன் பிழைகளை ஒப்புக்கொள்கிறாயா ?

தாமோ :—செத்தாலும் மாட்டேன்.

டேவிட் :—விடுங்களையா ! வேப்பங்காய் வெல்லமாகுமா? மாட்டுடா விலங்கு, சங்கிலி.

(ஜயகோபால் தாமோதரனை விட்டு விடுகிறான்)

தாமோ :—அடபாவிகளா! என் குடியைக் கெடுத்தீர்களே ! ஐயோ !

டேவிட்:—நீ எத்தனை பேர் குடியைக் கெடுத்தாய்! எல்லாம் நாளை கோர்ட்டில் தெரியும்! போடு கையெழுத்து !

தாமோ:—முடியாது, அவசியமில்லை. நான் மோட்டாரில் போய் கலெக்டரிடம் முறையிடுகிறேன் ! என் மனைவியைத் தாருங்கள்!

[மோட்டாரிடம் போகிறான். டேவிட் ஊதுகிறான். 5-பொலீஸ்காரர் வந்து தாமோதரனைக் கட்டிப் பிடிக்கின்றனர். விலங்கு மாட்டுகின்றனர்]

டேவிட் :—நம்பர் 144 சங்கிலி, இந்த மோட்டா ருடன் குற்றவாளியை நேராக ஸ்டேஷனுக்குக் கொண்டு போய்ப் பூட்டி வை. நான் இதோ இவர் களிடம் வாக்கு மூலம் வாங்கிக் கொண்டு வருகிறேன்.

குடு :—நல்ல காலம் பிறக்குது! டுகு டுகு டுகு டுர்ர்! நல்ல பேருக்கு நல்ல காலம் பிறக்குது! பாவிப் பழி காரப் பஞ்சமா பாதகன் ஐயோனு போகிறான்! பாரடீ ஜக்கம்மா மந்திரக்காளி, மலையாள பகவதி, மாதங்கி, ஜகதம்பிகே!

தாமோ :—அடபாவிகளா! ஐயோ! என்ன செய் வேன்! ஐயோ ஓ!

(அழுதுக்கொண்டே மோட்டாரில் போகிறான்)

டேவிட் :—குடு குடுப்பை, வா இனி உள்ளே வேலையிருக்கிறது. அச்சா ஹுஸேன்!

(தட்டிக் கொடுக்கிறான்)

குடு :—அச்சா, வஹ்வா! அந்தர் ஜாயேங்கே.

டேவிட் :—பலே சாமண்ணு மந்திரவாதி. மந்தி ரம் சக்கை போடு போட்டாய்!

சர்ம :—ஆஹா முதுகு எப்படி என்று விசாரிக்க மறந்து போனேன்!

டேவிட் :—மாஜிஸ்ட்ரேட் முன்னே நானே விசா ரிக்கிறேன். சட்டப்படியே செல்வோம். கோர்ட்டில் பார் அமளியை! வா, ஜயகோபாலனை முதலில் ஊருக்கு அனுப்புவோம்! (எல்லாரும் உள்ளே போதல்)

## காட்சி 6

[ஷெடி பங்களா கூடம்; ஒரு வட்டமேஜையில் காயிதங்களும், எழுதுகோலும் உள்ளன. சுற்றி நாற்காலிகளில் ஜய கோபால், வசந்த சுந்தரி, ஹுஸேன், சாமண்ணு, டேவிட் முதலியோர் உட்கார்ந்திருக்கின்றனர்]

ஜய :—நண்பர்களே! உங்களுக்கு எவ்விதம் எனது நன்றியைச் செலுத்துவதென்று மயங்குகிறேன்! என்னுயிரை எனக்குத் தந்தீர்கள். என்னன்பை உங்களுக்குத் தருகிறேன்.

ஹுஸேன் :—ஜயகோபால், உனது அன்பிற்கு நாங்கள் ஒரு சிறு காணிக்கை செலுத்துகிறோம். நண்பா, எங்கள் இனிய சகோதரி வசந்த சுந்தரியுடன், நீ நீடூழி நலமோங்கி வாழ்க!

சாம :—ததாஸ்து! இதைத் தவிர என்ன சொல்வது? புறப்படுங்கள் ராஜமாபுரிக்கு; நாளை ராஜமாபுரம் மிதிலாபுரியா யிருக்க வேண்டும்.

டேவிட் :—அவ்வாறே விரும்புகிறோம்.

ஜய :—விரும்புவதும் நண்பர்; நிறேவேற்றுவதும் நண்பரே.

சாம :—பந்தல், அலங்காரம், தயாரிப்புகளெல்லாம் அப்படியேயிருக்கின்றன. நமது நண்பருக்கு டெலிஃபோன் பேசி, மேளம் கொட்டவேண்டியது தான்! நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

ஹுஸேன் :—நீயும் மாப்பிள்ளையல்லவா? லலிதா உன்னை எதிர்பார்த்திருக்கிறாள். நான் நண்பரை அழைத்து வருகிறேன்.

ஜய:—நண்பர்காள்! வசந்த சுந்தரியை மீட்டோம்; வெற்றி பெற்றோம். ஆனால் அந்தப் பேதை தாமோதரன் திருந்தும் வழியென்ன ?

டேவிட் :—அவன் திருந்துவதா! அவனுக்கு அந்தமானே கதி! அப்ப, எவ்வளவு பாதகங்கள் செய்திருக்கிறான்! நீங்கள் கொடுத்த 50 பக்கம் வாக்கு மூலம், அவன் அழிபுராணத்தில் ஒரு படலம். வசந்த சுந்தரியை அவன் நான்கு ஆண்டுகளாகத் தொந்தரவு செய்திருக்கிறான்.

ஜய :—நிஜமாகவா ?

வச :—அது பெரிய கதை ; லலிதா சொல்லுவாள்.

ஜய :—கோகலே ஹாலினின்று வசந்த சுந்தரியைக் கூட்டிச் சென்றதார் ?

டேவிட் :—அவள் தான் லாவண்யம், பிராமணக் கைம் பெண். அவளைக் கிட்டு தாமோதரனுக்குச் சேர்த்து விட்டுத் தாசியாக்கினான். கிட்டு தான் அன்று மோட்டார் ஓட்டியது.

சாம :—கூட இருந்த இருவர் ?

டேவிட் :—அவர்கள் ஆண் வேஷம் பூண்ட ஜக்கம்மாவும், அவள் புருஷன் பேயாண்டியும். இருவரும் நேற்று வசந்த சுந்தரிக்குக் கோடாங்கி பார்த்தார்கள். இரவில் அவர்களைக் கைதுசெய்து, திருச்சி ஜெயிலுக்கு அனுப்பியுள்ளோம்.

சாம :—தடல்புடல் கிட்டு எங்கே !

ஹுஸேன் :—ஜயகோபாலனுக்குப் பைத்தியம் பிடிக்கப் பாலில் ஏதோ கலந்து தாசி மூலம் கொடுக்க

முயன்றான் கிட்டு. விதிவசமாக, அந்தப் பாலே அவனே குடித்தான். பலமான பைத்தியம் பிடித்தது. தாமோ தரன் குட்டெல்லாம் உடைக்கிறான். 'டம் டுப், டும்,' என்று உளறிக் கொண்டு, சென்னை செண்ட்ரல் ஜெயி லில் ரகளை செய்கிறான், பேயாடுகிறான்.

வச :—அநீதிகளை எவ்வாறு தெய்வம் தண்டிக் கிறது! எங்கள் வீட்டைக் கொள்ளையிட்டுத் தீ வைத்த கள்வர் என்னவாயினர்? அவர்கள் வாளைத்தான் நான் ஒளித்து வைத்து, தாமோதரனை மிரட்டினேன்!

ஹுஸேன் :—அம்மா, தங்கள் பெற்றோரை ஜய கோபாலுடன் அனுப்பியதும், கள்ளர் தடம் பார்த் தோம். ஒரு மோட்டாரில் கொண்டுவிட்டது. மோட்டார் தடத்தைப் பின் பற்றினோம். ஒரு தாசி வீட்டில் நின்றது.

வச :—லாவண்யம் வீடுதான். அதன் மாடியிலே தான் என்னை வைத்து மிரட்டினான் தாமோதரன். பிறகு மீண்டும் மயக்கங் கொடுத்து, வாயில் துணி யடைத்து, மோட்டாரில் ஏற்றி நேராக ஸ்ரீரங்கம் கொணர்ந்தான். இங்கு வந்ததும் பேயாக நடிக்க ஆரம்பித்தேன். 'அடே உன் குடலைக் கிழித்து மாலை போடுகிறேன்' என்று கத்திவைத்து மிரட்டியதும் அரண்டு போய், கோடாங்கி பார்த்தான். நீங்கள் வந்து காப்பாற்றினீர்கள்! இன்றேல், ஒன்று அவன் என்னைச் சுட்டிருப்பான். அல்லது நான் வாளால் குத்திக்கொண்டு இறந்திருப்பேன்.

ஜய :—இந்த அன்பர் மூலம் கடவுள் உன்னைக் காத்தார்!

வச :—இந்த நன்றியை என்றும் மறவோம்.

ஜய :—மிஸ்டர் டேவிட், அந்தக் கள்வர் செய்தி யென்ன ?

டேவிட் :—பொன்னேரிக்கருகே ஒரு காட்டில், 4 பேர் குடித்துக் களித்துக் கூத்தாடிக் கொண்டிருந்த னர். ஹுஸேஸனும் நானும், பட்டிக்காட்டான் வேஷம் போட்டுச் சென்ருேம். அந்த அம்மாசை கேடி, எனது முகச்சாடை கண்டுகொண்டான். நாலு பேரும் ஓடினர். அவர் பொன்னேரி கிராமத்திற்குச் செல் வதைப் பார்த்தோம். அம்மாசை வீடு எனக்குத் தெரியும். அங்கே நேராகச் சென்ருேம். அவனேப் பிடித்து டாணுவில் அடைத்தோம். பிறகு மூவரும் அகப்பட்டனர். பெரும்பாடுபட்டு அவர்களிடம் வாக்கு மூலம் வாங்கிஞேம். தாசி லாவண்யத்தைப்பற்றி அவர் களே சொன்னுர்கள். இப்படிச் சுமார் 100 கள்ளர்கள் தாமோதரன் கையாட்கள் எனத் தெரிகிறது. இவர் கள் செய்யும் அட்டூழியம் கொஞ்சமல்ல.

வச :—ஸ்ரீரங்கத்தில் நானிருப்பது எப்படித் தெரிந்தது ?

ஹுஸேஸன் :—நாங்களிருவரும், துப்பறிவதற்கே லாவண்யம் வீட்டிற்கு, ரூபா 100 கொடுத்துச் சென்ருேம். தாமோதரன் மேலே அவளுக்கு வெறுப்பு எனக் கண்டுகொண்டு, ‘ அவன் வசந்த சுந்தரி யைத் தூக்கிச் சென்றிருக்கிருன் ’ என்று மெல்லப் பேச்சுக் கொடுத்தோம். மற்றத் தகவலெல்லாம் பேச்சு வாக்கில் அறிந்தோம். நல்ல வேளேயாய்க் கிட்டுவின் மோசத்தால் அங்கே ஜயகோபாலன் வந்தான்.

வச :—ஓஹோ ! தாமோதரன் ஒரு போட்டோ காண்பித்தான். அதில் என்னுயிர் நாதன், தாசியை அணைந்திருப்பதாகக் கண்டேன், கிழித்தெறிந்தேன்.

ஜய :—லாவண்யம் என்னைப் பலாத்காரம் செய்தாள் ; நான் திமிறினேன். அப்போது ஒருவன் காமிராப் பிடித்ததைக் கண்டேன் அதுவா ?

வச :—அதுதானு ? எவ்வளவு மோசம் !

ஹுஸேன் :—உன்னை வசப்படுத்தப் பார்த்தாள் வேசை ; நீ அவள் தொழிலையே ஒழித்துவிட்டாய்.

வச :—லாவண்யம் எங்கே ?

ஜய :—அவள் திருந்தி, ஔவை ஆசிரமத்தில் சேர்ந்து ஒழுங்காயிருக்கிருள். தனது ஆஸ்தியெல்லாம் அதற்கே தந்துவிட்டாள் !

சாம :—ஜயகோபால் கண்ணில் பட்டால், திருந்தாது என்ன செய்வது ?

ஹுஸேன் :—டீக்பாத் !

ஜய :—நண்பர்களே, நமது இடர்கள் நீங்கின ! க்ஷேமமாக மீண்டும் சேர்ந்தோம் ! நமது உள்ளங்கள் அன்பால் தொடுக்கப்பட்ட இன்பமாலை. அதை இறைவனுக்கே சூட்டுவோம் !

சாம :—நாளை இரவில் ராஜமாபுரி நமது மங்கள கானத்தால் நிறைந்திருக்கும் !

(வருதல் ராமாநுஜம்)

ராமாநுஜ :—மோட்டார் தயாரண்டி! (செல்கிருன்)

ஜய :—புறப்படுங்கள் ஓம் ஜய சக்தி !

(எல்லாரும் புறப்படுதல்)

## காட்சி 7

*[ராஜமாபுரம். ஜயகோபால் மாளிகை. திருமண மண்டபம். திருமணக்கோலம். ஜயகோபால் - வசந்த சுந்தரியுடன் சாமண்ணு - லலிதாவுடன் திருமண மேடைமீது அமர்ந்துள்ளனர். சிவஞானமும், பூங்கோதையும் வசந்த சுந்தரி பக்கம் அமர்ந்துள்ளனர். ஹுஸேன், சாமண்ணு, டேவிட், நந்தனுர், வீராயி, லக்ஷ்மி, வெங்குராவ், சங்கிலி—முதலியோர் சந்தனம் பூசி ரோஜாமாலை புனைந்து சுற்றி வீற்றிருக்கின்றனர். திருமணம் முடிந்தது]*

சிவ :—அன்பர்களே, இறைவன் திருவருளால், இடர்கள் நீங்கி இன்பம் ஓங்கியது! இன்று போலவே இவ்வதூவரர்கள், என்றும் மங்கலம் பெருகி, வாழையடி வாழையாக வாழ்க! (பூங்கோதை ஆலாத்தியெடுத்தல்)

எல்லாரும் :—வாழ்க வாழ்க, வசந்த சுந்தரி - ஜயகோபால் தம்பதிகள் வாழ்க! வாழ்க, வாழ்க! லலிதா-சாமண்ணு தம்பதிகள் வாழ்க!

ஹுஸேன் :—நண்பர்களே, நமது ஒற்றுமையின்பம் என்றும் ஓங்க அல்லா துணை செய்க!

எல்லாரும் :—அல்லாஹு அக்பர்!

ஜய :—எனது ஆருயிர்த் தோழர்களே, நமது ஒன்றுபட்ட வாழ்வு, பொதுநல வேள்வியாகுக! அவ்வேள்விக் கனலை அன்பால் வளர்ப்போம். அந்த உள்ளன்பால் இறைவனருளைக் காண்போம்! அவனிச்சையின்றி அணுவும் அசையாது. நமது வாழ்வில் நடந்த இந்தச் சம்பவம், மனிதரியல்பை நன்கு விளக்கியது. இனி, மனித சமுதாயம் உய்யப் பாடு படுவோம்.

சிவஞானம், வசந்த, பூங்கோதை :—

கனக சபை மேவு மௌனது குருநாதன்
கருணை முருகேசப் பெருமாள் காண்!
கனக நிறை வேதன் அபய மிடமோது
கர கமலஜோதிப் பெருமாள் காண்!
வினவு மடியாரை மருவி விளையாடு
விரகு ரசமோகப் பெருமாள் காண்!
விதி முனிவர் தேவர் அருண கிரிநாதர்
விமல சரசோதிப் பெருமாள் காண்!
சனகி மணவாளன் மருக னெனவேத
சதமகிழ் குமாரப் பெருமாள் காண்!
சரண சிவகாமி யிரண குலகாரி
தரு முருக நாமப் பெருமாள் காண்!
இனிது வனமேவு மயிர்த குறமாதொ
டியல் பரவுகாதற் பெருமாள்காண்!
இணையி லிபதோகை மதியின் மகளோடு
மியல் புலியுர் வாழ்பொற் பெருமாளே.

எல்லாரும் :—

எண்ணிய நன்மைகள் எய்துக வெற்றி!
இன்பங்கள் யாவையும் ஈண்டுக சுற்றி!
புண்ணியப் புலவர்கள் பொங்குக சித்தி!
பூரண யோகியர் பரவுக சக்தி!
கண்ணெனும் சுதந்திரக் கனலெழுந் தொளிர்க!
கலியுகம் ஒழியுக க்ருதயுகம் வருக!
விண்ணர சாட்சியிம் மண்மிசை வளர்க!
வேண்டினம் கருணைசெய் ஆண்டவா சரணம்!

வசந்த சுந்தரி முற்றிற்று.

# புதிய அன்பு மலர்கள்

எதிர்பாருங்கள் ! விரைவில் வெளிவரும் ! !

## சிலம்புச் செல்வம்

இனிய எளிய நடையில், சிலப்பதிகாரம் முழுதும். தமிழர் பெருமையும், வீரப்புகழும், கலைச்சிறப்பும் விளங்கும்படியாக எழுதப்பெற்றுள்ளது. தமிழரை ஆவேசவீரத்துடன் தட்டி யெழுப்பும் அற்புதமான ஆராய்ச்சி நூல்.

## அன்பு நிலயம்

ஓர் அரிய பெரிய தொடர் கதை ; வாழ்வின் உண்மை, பொதுநலவேள்வி, தமிழர் முன்னேற்றம், தியாகம், அன்பு, சமுதாய சீர்திருத்தம், வறுமை நீங்கி உழைப்பும் பிழைப்பும் பெருகும் வகை, அருள் வாழ்க்கை, ஆகிய பல உயர்பொருள்களைக் கதையாக இனிய எளிய நடையில் விளக்குவது.

## புதிய பாமலர்த் தொகுதிகள்

சுத்தானந்த பாரதியார் சென்ற முப்பதாண்டுகளாகப் பாடியிருக்கும் பாமலர்க் கும்பலினின்றும் தொகுத்த பதினாறு தனித்தனி நூல்கள்.

1. தமிழ்க்கனல் :—தமிழருக்கு ஆவேசமளிக்கும் வீறுபெற்ற பாடல்கள்.

2. புண்யபூமி :—நமது பாரதநாட்டின் புனிதச் சிறப்பையும், நாட்டன்பு செய்யும் வகையையும் விளக்கும் இனிய பாடல்கள்.

3. முன்னேற்றப் பாடல்கள் :—சமுதாய சீர்திருத்தம், புதுயுகவாழ்க்கை, நமது நிலைமை, அறிவு, தொழில், உரிமை, சமதருமம், நாட்டு வீரர் பெருமை, ஆகிய பல அரிய பொருள்கொண்டு பொலியும் ஆவேசப்பாடல்கள்.

4. வாழ்வமுதம் :—கவிச்சுவையும், கலைச்சுவையும் நிரம்பி, மனிதவாழ்வை அமுத வாழ்வாக்கும் பாடல்.

5. குழந்தையின்பம் :—சிறு குழந்தைகளை, சீராட்டிப் பாராட்டி வளர்த்து வீரராக்க வழி காட்டும் இனிய பாடல்கள்.

6. பக்தி பரவசம் :—பாரதியார் பக்தி - ஞான - யோகசாதனங்கள் செய்யும்போதும், பல உபாசனைகள் செய்தபோதும் மனமுருகிப் பாடிய கீர்த்தனங்கள்.

7. ஞான வைராக்கியம் :—யோக சாதனத்தில் அரும்பிய அரிய உயர்ந்த ஞானமணிகளைக் கொண்ட பாடல்கள்.

8. வீரவிருந்து :—சிவாஜி, பிரதாபசிங்கன், குரு கோவிந்தன் முதலிய பாரத வீரர் வாழ்வும் வீரச் செயல்களும் அடங்கியது.

9. இதிஹாஸப்பாடல்:—பாரத நாட்டுச் சரித்திரத்திலிருந்து பயனுள்ள சம்பவங்களைக்கொண்ட இனிய பாடல்கள்.

10. மஹாத்மவிஜயம் :— கண்ணன், புத்தர் கிறிஸ்து, முஹம்மது, நானக், மஹாவீரர், போன்ற மஹான்களின் வரலாறும் உபதேசமும் அடங்கிய நூல்.

11. பாரதசக்தி : —சுவைபெற்ற 1000 விருத்தங்களில், பாரதசக்தியின் மாண்பைத் தத்துவக் கதையாகச் சொல்லும் அரிய நூல்.

12. சுத்தசன்மார்க்கப்பாடல்கள் :—சாதிமத பேதமில்லாமல் மனிதர் அனைவரும் ஒருகுலமாக வாழ வழி காட்டும் நூல்.

13. விருந்து :—காவியநாடகம்.

14. காலத்தேர் :—காவியநாடகம்.

15. அமுதம் :—வாழ்வின் இருவிகாரங்களைப் பாத்திரமாகக்கொண்டு, அவற்றைத்தாண்டிக் கடவுளமுதம் எய்தும் வகையைக் காட்டும் பெருங்காப்பியம்.

16. உதிர்மலர்கள் :—பலசந்தர்ப்பங்களிற் பாடிய பாக்கள்.

எமது முயற்சிக்குத் தமிழர் ஆதரவைப் பெரிதும் எதிர் பார்க்கிறோம். திருவருள் துணை செய்க.

அன்பு நிலயம்,
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா.

# அன்பு நிலய நூல்கள்

(சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியவை)

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | பைந்தமிழ்ச்சோலை | .... | 0 | 4 |
| 2. | இராமலிங்க விஜயம் | .... | 0 | 10 |
| 3. | இன்பமாலை (2-ம் பதிப்பு) | .... | 0 | 6 |
| 4. | தருமஸாதனம் | .... | 0 | 4 |
| 5. | பொதுநெறி | .... | 0 | 2 |
| 6. | இன்று மனிதனும் இனிவரும் மனிதனும் | | 0 | 6 |
| 7. | திருக்குறளின்பம் (ராப்பர்) | .... | 1 | 4 |
| | „ (காலிகா) | .... | 2 | 0 |
| 8. | உடலுறுதி (படங்களுடன்) | .... | 1 | 0 |
| 9. | வரகவி தாகூர் | .... | 0 | 3 |
| 10. | அப்பரின் அன்பு வெற்றி (நாடகம்) | .... | 0 | 10 |
| 11. | புதுமையும் பழமையும் (நாடகம்) | .... | 0 | 8 |
| 12. | திருநூல் - தூய வாழ்வு | .... | 1 | 0 |
| 13. | தியானமாலை | .... | 1 | 4 |
| 14. | ஏழை படும்பாடு (நாவல்) | .... | 1 | 8 |
| 15. | யோக சித்தி | .... | 2 | 8 |
| | „ (Calico) | .... | 3 | 0 |
| 16. | பரமஹம்ஸ லீலை | .... | 2 | 8 |
| 17. | ரமண விஜயம் | .... | 2 | 0 |
| 18. | பெரியார் வரலாறு | .... | 2 | 0 |
| 19. | பாரதி விளக்கம் | .... | 0 | 4 |
| 20. | நாடகக்கலை விளக்கம் | .... | 0 | 2 |
| 21. | கீதைகாட்டும் பாதை | .... | 0 | 10 |

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 22. | பாரத சக்தி | .... | 1 | 8 |
| 23. | அரவிந்தப் பிரகாசம் | .... | 0 | 12 |
| 24. | புதுயுகப் பாட்டு | .... | 0 | 5 |
| 25. | The Yoga of Sri Aurobindo | .... | 2 | 0 |
| 26. | Mahatma Ramalingam | .... | 1 | 0 |
| 27. | கம்பக்கவியின்பம் (out of stock) | .... | 2 | 0 |
| 28. | தமிழுணர்ச்சி | .... | 1 | 0 |
| 29. | புத்தர் கருணை | .... | 0 | 8 |
| 30. | மஹாகவி காளிதாஸன் | .... | 1 | 4 |
| 31. | வசந்த சுந்தரி | .... | 0 | 10 |
| 32. | சிலப்பதிகாரச் செல்வம் | (அச்சில்) | | |
| 33. | திருமந்திர விளக்கம் | ,, | | |
| 34. | சமய சாரம் | ,, | | |

## பா மலர்கள்

| | | |
|---|---|---|
| 35. | தமிழ்க் கனல் | ,, |
| 36. | வாழ்வமுதம் | ,, |
| 37. | புண்ய பூமி | ,, |
| 38. | முன்னேற்றப் பாடல்கள் | ,, |
| 39. | பக்தி பரவசம் | ,, |
| 40. | ஞான வைராக்கியம் | ,, |
| 41. | தீர்க்கதரிசிகள் | ,, |
| 42. | வீர விருந்து | ,, |
| 43. | குழந்தையின்பம் | ,, |
| 44. | விருந்து (காவிய நாடகம்) | ,, |
| 45. | அருளமுதம் | ,, |

கிடைக்குமிடம் :—

அன்பு நிலயம்,
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா.

# புதிய அன்பு மலர்கள்

எதிர்பாருங்கள் ! விரைவில் வெளிவரும் ! !

## சிலம்புச் செல்வம்

*இனிய எளிய நடையில், சிலப்பதிகாரம் முழுதும். தமிழர் பெருமையும், வீரப்புகழும், கலைச்சிறப்பும் விளங்கும்படியாக எழுதப்பெற்றுள்ளது. தமிழரை ஆவேசவீரத்துடன் தட்டி யெழுப்பும் அற்புதமான ஆராய்ச்சி நூல்.*

## அன்பு நிலயம்

*ஓர் அரிய பெரிய தொடர் கதை; வாழ்வின் உண்மை, பொதுநலவேள்வி, தமிழர் முன்னேற்றம், தியாகம், அன்பு, சமுதாய சீர்திருத்தம், வறுமை நீங்கி உழைப்பும் பிழைப்பும் பெருகும் வகை, அருள் வாழ்க்கை, ஆகிய பல உயர்பொருள்களைக் கதையாக இனிய எளிய நடையில் விளக்குவது.*

## புதிய பாமலர்த் தொகுதிகள்

*சுத்தானந்த பாரதியார் சென்ற முப்பதாண்டுக ளாகப் பாடியிருக்கும் பாமலர்க் கும்பலினின்றும்* தொகுத்த பதினறு தனித்தனி நூல்கள்.

1. தமிழ்க்கனல் :—*தமிழருக்கு ஆவேசமளிக்கும் வீறுபெற்ற பாடல்கள்.*

2. புண்யபூமி :—*நமது பாரதநாட்டின் புனிதச் சிறப்பையும், நாட்டன்பு செய்யும் வகையையும் விளக்கும் இனிய பாடல்கள்.*

3. முன்னேற்றப் பாடல்கள் :—*சமுதாய சீர்திருத்தம், புதுயுகவாழ்க்கை, நமது நிலைமை, அறிவு, தொழில், உரிமை, சமதருமம், நாட்டு வீரர் பெருமை, ஆகிய பல அரிய பொருள்கொண்டு பொலியும் ஆவேசப்பாடல்கள்.*

4. வாழ்வமுதம் :—*கவிச்சுவையும், கலைச்சுவையும் நிரம்பி, மனிதவாழ்வை அமுத வாழ்வாக்கும் பாடல்.*

5. குழந்தையின்பம் :—சிறு குழந்தைகளை, சீராட்டிப் பாராட்டி வளர்த்து வீரராக்க வழி காட்டும் இனிய பாடல்கள்.

6. பக்தி பரவசம் :—பாரதியார் பக்தி - ஞான - யோகசாதனங்கள் செய்யும்போதும், பல உபாசனைகள் செய்தபோதும் மனமுருகிப் பாடிய கீர்த்தனங்கள்.

7. ஞான வைராக்கியம் :—யோக சாதனத்தில் அரும்பிய அரிய உயர்ந்த ஞானமணிகளைக் கொண்ட பாடல்கள்.

8. வீரவிருந்து :—சிவாஜி, பிரதாபசிங்கன், குரு கோவிந்தன் முதலிய பாரத வீரர் வாழ்வும் வீரச் செயல்களும் அடங்கியது.

9. இதிஹாஸப்பாடல்:—பாரத நாட்டுச் சரித்திரத்திலிருந்து பயனுள்ள சம்பவங்களைக்கொண்ட இனிய பாடல்கள்.

10. மஹாத்மவிஜயம் :— கண்ணன், புத்தர் கிறிஸ்து, முஹம்மது, நானக், மஹாவீரர், போன்ற மஹான்களின் வரலாறும் உபதேசமும் அடங்கிய நூல்.

11. பாரதசக்தி :—சுவைபெற்ற 1000 விருத்தங்களில், பாரதசக்தியின் மாண்பைத் தத்துவக் கதையாகச் சொல்லும் அரிய நூல்.

12. சுத்தசன்மார்க்கப்பாடல்கள் :—சாதிமத பேதமில்லாமல் மனிதர் அனைவரும் ஒருகுலமாக வாழ வழி காட்டும் நூல்.

13. விருந்து :—காவியநாடகம்.

14. காலத்தேர் :—காவியநாடகம்.

15. அமுதம் :—வாழ்வின் இருவிகாரங்களைப் பாத்திரமாகக்கொண்டு, அவற்றைத்தாண்டிக் கடவுளமுதம் எய்தும் வகையைக் காட்டும் பெருங்காப்பியம்.

16. உதிர்மலர்கள் :—பலசந்தர்ப்பங்களிற் பாடிய பாக்கள்.

எமது முயற்சிக்குத் தமிழர் ஆதரவைப் பெரிதும் எதிர் பார்க்கிறோம். திருவருள் துணை செய்க.

அன்பு நிலையம்,
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா.

# அன்பு நிலைய நூல்கள்

(சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியவை)

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | பைந்தமிழ்ச்சோலை | .... | 0 | 4 |
| 2. | இராமலிங்க விஜயம் | .... | 0 | 10 |
| 3. | இன்பமாலை (2-ம் பதிப்பு) | .... | 0 | 6 |
| 4. | தருமஸாதனம் | .... | 0 | 4 |
| 5. | பொதுநெறி | .... | 0 | 2 |
| 6. | இன்று மனிதனும் இனிவரும் மனிதனும் | | 0 | 6 |
| 7. | திருக்குறளின்பம் (ராப்பர்) | .... | 1 | 4 |
| | ,, (காலிகா) | .... | 2 | 0 |
| 8. | உடலுறுதி (படங்களுடன்) | .... | 1 | 0 |
| 9. | வரகவி தாகூர் | .... | 0 | 3 |
| 10. | அப்பரின் அன்பு வெற்றி (நாடகம்) | .... | 0 | 10 |
| 11. | புதுமையும் பழமையும் (நாடகம்) | .... | 0 | 8 |
| 12. | திருநூல் - தூய வாழ்வு | .... | 1 | 0 |
| 13. | தியானமாலை | .... | 1 | 4 |
| 14. | ஏழை படும்பாடு (நாவல்) | .... | 1 | 8 |
| 15. | யோக சித்தி | .... | 2 | 8 |
| | ,, (Calico) | .... | 3 | 0 |
| 16. | பரமஹம்ஸ லீலை | .... | 2 | 8 |
| 17. | ரமண விஜயம் | .... | 2 | 0 |
| 18. | பெரியார் வரலாறு | .... | 2 | 0 |
| 19. | பாரதி விளக்கம் | .... | 0 | 4 |
| 20. | நாடகக்கலை விளக்கம் | .... | 0 | 2 |
| 21. | கீதைகாட்டும் பாதை | .... | 0 | 10 |

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 22. | பாரத சக்தி .... | 1 | 8 |
| 23. | அரவிந்தப் பிரகாசம் .... | 0 | 12 |
| 24. | புதுயுகப் பாட்டு .... | 0 | 5 |
| 25. | The Yoga of Sri Aurobindo .... | 2 | 0 |
| 26. | Mahatma Ramalingam .... | 1 | 0 |
| 27. | கம்பக்கவியின்பம் (out of stock) .... | 2 | 0 |
| 28. | தமிழுணர்ச்சி .... | 1 | 0 |
| 29. | புத்தர் கருணை .... | 0 | 8 |
| 30. | மஹாகவி காளிதாஸன் .... | 1 | 4 |
| 31. | வசந்த சுந்தரி .... | 0 | 10 |
| 32. | சிலப்பதிகாரச் செல்வம் | (அச்சில்) | |
| 33. | திருமந்திர விளக்கம் | ,, | |
| 34. | சமய சாரம் | ,, | |

## பா மலர்கள்

| | | |
|---|---|---|
| 35. | தமிழ்க் கனல் | ,, |
| 36. | வாழ்வமுதம் | ,, |
| 37. | புண்ய பூமி | ,, |
| 38. | முன்னேற்றப் பாடல்கள் | ,, |
| 39. | பக்தி பரவசம் | ,, |
| 40. | ஞான வைராக்கியம் | ,, |
| 41. | தீர்க்கதரிசிகள் | ,, |
| 42. | வீர விருந்து | ,, |
| 43. | குழந்தையின்பம் | ,, |
| 44. | விருந்து (காவிய நாடகம்) | ,, |
| 45. | அருளமுதம் | ,, |

கிடைக்குமிடம் :—

அன்பு நிலயம்,
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா.

சத்து * ஓம். * சக்தி * அன்பு நிலயம்